திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

CONNEMARA PUBLIC LIBRARY
4 - DEC 1962
MADRAS

கோட்டூர்க் கொழுந்தீசுவரர் கோயிற் கூத்தப்பெருமான்

மாலை 5] சுபகிருது - கார்த்திகை [மணி 3
டிசம்பர் 1962

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு



ஸ்ரீ பெரும்பூதூர்க் கோயிலில் ஸ்ரீ ஆண்டாள் கலை நிகழ்ச்சி நடத்திய
சிறுமி செல்வி சூடாமணிக்கு ஆணையர் அவர்கள் பொன்னுடை அணிவித்தல்.

பொருள் அடக்கம்

1. கார்த்திகை விளக்கீடு
2. சிவஞானபோதம்
3. இறைவனின் திருநடனம்
4. திருநாவுக்கரசு நாயனர்
5. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
6. திருவருட்பயன்
7. இராசராசேச்சரக்கல்வெட்டு
8. இருவினையொப்பு
9 திரிசூல்நாதர் திருக்கோவில்
10. படைப்பின் வியப்பு
11. மலைநாட்டுத்திருப்பதியநுபவம்
12. சமரசஞானம்
13. திருஞானசர்பந்தர் திருமுறை
14. செய்திகள்

CONN... LIBRARY
4 - DEC 1962

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 5] சுபகிருது கார்த்திகை-டிசம்பர் 1962 [மணி 3

கார்த்திகை விளக்கீடு

—:o:—

முன்னுரை

ஒரு நாட்டின் நாகரிகம் பண்பாடு என்பனவற்றை யுணர்தற்கு, அந்நாட்டு மக்களாற் பெரிதும் கொண்டாடப்பெறும் விழாக்கள் பெரிதும் துணை செய்வன ஆகும். 'நாகரிகம் பெற்ற ஒரு சமுதாயம் உண்மை, அழகு, அருஞ்செயல், கலைத்திறன், அமைதி நலம் ஆகிய ஐந்து பண்புகளைச் சிறப்புறக் காட்டித் திகழும்' என அறிஞர் ஒருவர் குறிப்பிட்டார். ("A civilized society exhibits the five qualities of Truth, Beauty, Adventure, Art and Peace."--Adventures in Ideas, A. N. Whitehead.) அவர் குறிப்பிட்ட ஐந்தனோடு, ஆறுவதாக நாம் திருவிழாக்களையும் (Festivals) கூடச் சேர்த்துக்கொள்ளுதல் பொருந்தும்.

திருவிழாக்கள் நாட்டு மக்களின் இன்ப வாழ்வையும், செல்வச் செழிப்பையும், கலையுணர்வுகளையும், இனிய பழக்க வழக்கங்களையும் நன்கினிது உணர்த்த வல்லனவாகும். விழாக்கள் மக்களிடையில் அன்பையும் ஒற்றுமையையும் வளர்க்கின்றன; துன்பமும் கவலையும் போக்கி, இன்பமும் உவகையும் அளிக்கின்றன.

விழா சாறு சிறப்பு என்பன ஒரு பொருட்சொற்கள். மக்கள் அன்புடன் கூடி விழைவுடன் கொண்டாடுவது விழா; வாழ்க்கையில் இன்பங்கனிந்த பழச் சாறு எனலாம்படி பயன் நிரம்பி விளங்குவன சாறு; சுவையிலாப் பேதை மனித வாழ்வுக்கு ஓரளவேனும் சுவையூட்டி இனிமை பெருக்கிச் சிறப்பையளிக்கும் நிகழ்ச்சிகள் சிறப்பு எனப்படும்.

சங்ககால விழாக்கள் சில

சங்க நூல்களில் "விழவுமலி மூதூர்" "சாறயர் மூதூர்" என்னும் தொடர்கள் பலவிடத்தும் பயின்று வருதலின், பண்டைத் தமிழ் நாட்டில் பல வேறு விழாக்கள் நிகழ்ந்து வந்தமை யுணரப்படும். இறையனார் களவியல் உரையில் ஆசிரியர் நக்கீரர், பண்டை நாளில் தமிழகத்தில் நடைபெற்று வந்த பெருவிழாக்கள் என மதுரை ஆவணி அவிட்டம், உறையூர்ப் பங்குனி யுத்திரம், கருவூர் உள்ளிவிழா என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

"கழுமலம் தந்த நற்றேர்ச் செம்பியன்
பங்குனி விழவின் உறந்தையொடு
உள்ளி விழவின் வஞ்சியும் சிறிதே"

எனவரும் நற்றிணைப் பாடல் (234), இச் செய்தியினை வலியுறுத்தும். சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களால் புகார் நகரில் நிகழ்ந்த இந்திரவிழாவைப் பற்றியும் நாம் அறியப் பெறுகின்றோம். இங்ஙனம் பழந்தமிழ் இலக்கியங்களால் உணரப்படும் விழாக்கள் பலவற்றுள், கார்த்திகை விளக்கீடும் ஒன்றாகும்:

தொல் கார்த்திகை நாள்

தமிழகத்தின் சமய மறுமலர்ச்சி இயக்க வரலாற்றிற் சிறப்பிடம் பெற்றுத் திகழும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் இருபெருஞ் சான்றோர்களும், தமிழ் மக்கள் பலவகைத் திருவிழாக்களைக் கொண்டாடி மகிழ்தற்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர் எனலாம். திருநாவுக்கரசர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை விழாவினைப் பெரிதும் வியந்து போற்றி "முத்து விதானம் மணிப்பொற் கவரி" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிச் சிறப்பித்துள்ளார். திருஞான சம்பந்தப் பெருமான், நமது சென்னைத் திருமயிலைத் திருப்பதிகத்தில், திங்கள்தோறும் முறை முறையே நடைபெறும் வெவ்வேறு திருவிழாக்களைக் கிளந்தெடுத்துக் கூறியிருக்கின்றார். அதன்கண்,

"வளைக்கை மடநல்லார் மாமயிலை
வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்தொல்
கார்த்திகைநாள்
தளந்தேந் திளமுலையார் தையலார்
கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ
பூம்பாவாய்"

எனவரும் திருப்பாடல், கார்த்திகை விழாவைப் பற்றிக் குறிப்பிட்டு, அதனைத் "தொல் கார்த்திகை நாள்" என்றும் விதந்து போற்றுகின்றது. இற்றைக்கு ஏறத்தாழ 1300 ஆண்டுகட்கு முற்பட்ட திருஞானசம்பந்தர் தாமே, இதனைத் "தொல் கார்த்திகை நாள்" எனக் குறிப்பிடுவாராயின், கார்த்திகை விழாவின் தொன்மையும் பெருமையும் இனைய வென்று எண்ணி யுணரலாம்.

அவ்வைப் பிராட்டியார்

கார்த்திகை விழாவிற் பெண்கள் வீடுகள் தோறும் வரிசை வரிசையாக மிகப்பல விளக்குகளை ஏற்றி வைத்து மகிழ்வர். எனவே, இதனைப் பெண்களுக்குச் சிறப்பாக உரிய விழா எனக் கூறலாம். 'மனைக்கு விளக்கம்' எனத் திகழும் மடவார்கள், இங்ஙனம் விளக்கேற்றி வைத்து விழா அயர்தல் மிகவும் பொருத்தமேயாம். கார்த்திகை விழா பெண்களுக்கு உரியதாதலையும், அவ்விழாவிற் பெண்கள் வரிசை வரிசையாக விளக்கேற்றி வைத்து வழிபட்டு மகிழ்தலையும், "தையலார் கொண்டாடும் விளக்கீடு" என்னும் தேவாரத் தொடர் புலப்படுத்துகின்றது. பெண்களுக்கு உரிய இவ்விழாவின் சிறப்பினைப் பெண்ணின் நல்லார் ஆகிய அவ்வைப் பிராட்டியார்,

"வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்
நெருப்பெனச் சிவந்த உருப்பவிர் அங்காட்டு
இலையில மலர்ந்த முகையில் இலவம்
கலிகொள் ஆயம் மலிபுதொகுபு எடுத்த
அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றிக்
கயந்துகள் ஆகிய பயந்தபு கானம்"

—அகநானூறு, 11.

எனவரும் பாடற்பகுதியில், உவமையாகக் கூறி மகிழ்கின்றார். 'வெப்பம் மிக்க பாலை நிலக் காட்டின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தல், மகளிர் பலரும் மகிழ்ந்து கூடி ஒளிமிக ஏற்றி வைத்த விளக்குகளின் நீண்ட பல வரிசைகளைப்போல உள்ளது' என்பது இப்பாடற் பகுதியின் கருத்து.

பாலை நிலத்தைப்பற்றிப் பாடுங்காலும், அவ்வைப் பிராட்டியார் தம்மைப் போன்ற பெண் பாலார்க்குரிய கார்த்திகை விழாவினை இயைபுபடுத்திப் பாடியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. 'தையலார் கொண்டாடும் விழா' இது என்பதனைக் 'கலிகொள் ஆயம் மலிபு தொகுபு எடுத்த' என்னும் தொடர் புலப்படுத்தி நிற்கின்றது. "ஆரவாரம் மிகுந்த மகளிர் கூட்டம் மகிழ்ந்து திரண்டு ஏற்றிவைத்த" என்பது இத்தொடரின் பொருள். சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருத்தலுக்கு, அழகிய ஒளி விளக்குகளின் நீண்ட வரிசையின் பொலிவினை, உவமையாகச் சுட்டி 'அம் சுடர் நெடுங்கொடி பொற்ப' என அவ்வைப் பிராட்டியார் அருளிச்செய்துள்ளமை பெரிதும் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

ஆசிரியர் நக்கீரர்

இங்ஙனமே, தெய்வநலங் கமழும் இவ்விழாவின் சிறப்பினைத் தெய்வவுணர்விற் சிறந்து திருமுருகாற்றுப்படை பாடியருளிய ஆசிரியர் நக்கீரர், தமது பாடல் ஒன்றிற் குறிப்பிட்டுள்ளார். 'அந்திமாலைச் செக்கர் வானத்தில் வெண்ணிறக் கொக்கினங்கள் வரிசையாகப் பறந்து செல்லும் காட்சி, முருகப்பெருமான் தமது சிவந்த மார்பில் அணிந்துள்ள முத்துமாலையைப்போல விளங்குகின்றது' என்னும் கருத்து அமைய,

"நெடுவேள் மார்பின் ஆரம் போலச்
செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்
பைங்காற் கொக்கினம் நிரைபறை யுகப்ப"

—அகநானூறு 120.

என அருளிச் செய்யும் இயல்பினராகிய ஆசிரியர் நக்கீரர், தம் தெய்வ உணர்வின் மாட்சிமை தோன்ற,

"மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம!"

— அகநானூறு, 141.

என்னும் வரிகளில், இவ் விளக்கீட்டு விழாவின் இயல்பினை இனிது பாடி இன்புறுத்துகின்றார். விளக்கீட்டு விழா, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாளில் பௌர்ணமியை ஒட்டி நிகழும் என்பதனை, "மதி நிறைந்து அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்" என்னும் தொடரால், ஆசிரியர் நக்கீரர் புலப்படுத்தி யிருத்தல் அறிந்தின்புறற் பாலது.

பாலை பாடிய பெருங் கடுங்கோ

இவ்வாறே பெருங்கடுங்கோ என்னும் சங்ககாலச் சான்றோரும், கார்த்திகை விழாவின் சிறப்பினைத் தமது கவிதைகளிற் புகழ்ந்து போற்றுகின்றார். இவர் சேரமான் மரபினர். பாலைத்திணை பாடுதலில் வல்லவர். ஆதலிற் "சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ" எனவும் இவர் வழங்கப்பெறுவர். 'முள்முருக்கு கோங்கு அதிரல் பாதிரி மரவம் முதலிய சிறந்த பூக்கள் பலவும் மலர்ந்து மணங்கமழ்ந்து இலங்கும் காட்டின் இயல்பு, பரவுக்கடன் பூண்டோரால் பலதிற நறுமலர்கள் தூவி வழிபடப் பெறும் தெய்வத்தின் திருக்கோயிலைப் போலத் திகழ்கின்றது' என்னும் கருத்து அமைய,

"மராஅ மலரொடு விராஅய்ப் பராஅம்
அணங்குடை நகரின் மணந்த பூவின்
நன்றே கானம் நயவரும் அம்ம!"

—அகநானூறு, 99

எனப் பாடியருளுதலால், இப்பெருந்தகையும் நக்கீரர் போலத் தெய்வ வுணர்வின் மிக்க சிந்தையை யுடையவர் எனத் தெரிகின்றது. இவர் தமது பாடல்களில், இரண்டு இடங்களில், கார்த்திகை விழாவினைக் கவின் மிகச் சுட்டுகின்றார்.

"அருவி யான்ற உயர்சிமை மருங்கிற்
பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்
இலையில மலர்ந்த இலவமொடு
நிலையுயர் பிறங்கல் மலைஇறந் தோரே"

—அகம், 185.

"கண்டிசின் வாழியோ குறுமகள் நுந்தை
அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்
செல்சுடர் நெடுங்கொடி போலப்
பல்பூங் கோங்கம் அணிந்த காடே"
—நற்றிணை, 202.

தலைவன் கடந்து சென்ற மலையின்கண் சிவந்த இலவம் பூக்கள் மலர்ந்திருக்கும் காட்சியும், காடுகளிற் கோங்க மலர்கள் பூத்துத் திகழும் பொலிவும், பாலை பாடிய பெருங் கடுங்கோவுக்குக் கார்த்திகை விழாவின் விளக்கு வரிசைகளை நினைவூட்டுகின்றன. கார்த்திகை மாதத்தினை "அறுமீன் பயந்த அறஞ்செய் திங்கள்" என்றும், கார்த்திகை விழாவினைப் "பெருவிழா" என்றும், பாலை பாடிய பெருங்கடுங்கோ பாராட்டி யுரைத் திருத்தல் போற்றுதற்குரியது.

தமிழ் நாடு முழுவதும் கார்த்திகை விளக்கீட்டு விழா நிகழ்கின்றதாயினும், திருவண்ணமலையில் ஏற்றப்படும் தீப விளக்கமே மிகப் பெரிதும் சிறப்புடையதாதலைக் குறிக்கும் நிலையில், "அருவி யான்ற உயர்சிமை மருங்கிற் பெருவிழா விளக்கம்" எனப் பெருங் கடுங்கோ மொழிந்தருளியிருப்பது, மிகவும் பொருத்தம் அமைந்து காணப்படுகின்றது. இங்ஙனம் இவர் பாடியதற்கு ஏற்பத் திருவண்ணமலையில் அருவிகள் நிறைந்திருந் தமை, "மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம் முழவு அதிரும் அண்ணமலை" எனத் திருஞான சம்பந்தர் தேவாரம் கூறுமாற்றானும் உணரப்பெறும்

முத்தொள்ளாயிரம்

இவ்வாறு நாடு முழுவதும் மகிழ்ந்து கொண்டாடப்படும் பெருவிழாவாகப் பண்டை நாளிற் கார்த்திகை விழா விளங்கியது என்பதனை,

"குடத்துள் விளக்கேபோல் கொம்பனார் காமம்
புறப்படா பூந்தார் வழுதி—புறப்படின்,
ஆபுகும் மாலை அணிமலையில் தீயேபோல்
நாடறி கௌவை தரும்"

எனவரும் முத்தொள்ளாயிரச் செய்யுள் கொண்டும் உணரலாம். தமிழகத்தில் வேறு எந்த மலையின்மீதும் தீபம் ஏற்றி வைத்துப் போற்றும் சிறப்பும் வழக்கமும் இல்லையாதலின், இதன்கண் 'அணி மலையில் தீ' எனத் திருவண்ணமலைக் கார்த்திகைத் தீபமே சுட்டப்பெற்றதென்று தெளியலாம். "நாடறி கௌவை தரும்" என்றதும் இவ்வுண்மையைச் செவ்விதின் வலியுறுத்தும்.

பழமொழி நானூறு

இங்ஙனம் திருவண்ணமலைக் கார்த்திகைத் தீபம் நாடறிந்த ஒரு பெரு நிகழ்ச்சியாக, மக்கள் அனைவரானும் அறியப்பட்டுக் கொண்டாடப்பெறும் நிலையில் நிகழ்ந்து வந்தமை பற்றியே, "குன்றின்மேல் இட்ட விளக்கு" என்னும் தொடர் ஒரு பழமொழியாகவும் தமிழ் நாட்டில் வழங்கிவரத் தலைப்பட்டு விட்டது.

"கன்றி முதிர்ந்த கழியப்பன் ளுள்செயினும்
என்றும் சிறியார்கண் என்னும் தோன்றாதாம்;
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு"

என முன்றுறை யரையனர் என்னும் சங்ககால முதுபெரும் புலவர் தாம் இயற்றிய பழமொழி நானூறு என்னும் சிறந்த நூலின்கண், பாடியிருத்தலும் ஈண்டு நுனித்துணர்ந்து நோக்கத்தக்கது. தொன்று தொட்டு நாட்டு மக்கள் அனைவரும் அறிந்துணர்ந்து உடன்பட்டு நின்றதொரு சிறந்த உண்மை மிக்க செய்தியே, மக்களிடையிற் பழமொழியாக வழங்கத் தலைப்படுமாதலின், குன்றின்மேல் விளக்கிடுதல் ஆகிய திருவண்ணமலைக் கார்த்திகைத் தீப நிகழ்ச்சியின் சிறப்பும் தொன்மையும் பிறவும், இனையவென எண்ணியுணரலாம்.

களவழி நாற்பது

கார்த்திகை விளக்கீட்டு விழாவைப் பற்றிய குறிப்புப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான களவழி நாற்பது என்பதன் கண்ணும் வந்துள்ளது. கோச் செங்கணன் என்னும் சோழவேந்தன், கணைக்கால் இரும்பொறை என்னும் சேரமன்னனொடு பொருது அவனைச் சிறையில் இட்டபொழுது, பொய்கையார் என்னும் புலவர், சோழனின் வெற்றித் திறத்தினைப் புகழ்ந்து பாடிச் சேரமானைச் சிறைமீட்டனர் என்பர். இக்கோச் செங்கணனே பெரிய புராணம் கூறும் கோச் செங்கட் சோழ நாயனர் ஆவர். இவரை,

"இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோள் ஈசற்கு
ஏழில்மாடம் எழுபதுசெய் துலகம் ஆண்ட
திருக்குலத்து வளச்சோழன்..."

எனத் திருமங்கையாழ்வார் புகழ்ந்து போற்றினர். இவ்வரசர் 'கழுமலம் என்னும் இடத்திற் கணைக்கால் இரும்பொறையோடு நிகழ்த்

தியபோரில், போர்க்களத்திற் பலவிடங்களி லும் செக்கச் செவேலென இரத்தத் துளிகள் சிந்திச் சிதறிக் கிடந்த காட்சி, கார்த்திகை விழாவில் ஏற்றி வைக்கப்படும் அளவில்லாத ஒளி விளக்குகளைப் போன்றிருந்தது' எனப் பொய்கையார் பாடுகின்றார்! சிவபத்தியிற் சிறந்த கோச்செங்கட் சோழர்க்குத் திருக் கார்த்திகை விழாவைப்பற்றிய செய்தியை உவமையாக அமைத்துப் பாடுதல் மிகவும் மகிழ்வளிக்கும் எனக் கருதியே, பொய்கை யார் இங்ஙனம் அழகுறப் புகழ்ந்து பாடினர் போலும்!

"ஆர்ப்பெழுந்த ஞாட்பினுள் ஆள்ஆள்
எதிர்ந்தோடித்
தாக்கி எறிதர வீழ்தரும் ஒண்குருதி [னவே
கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்ற
போர்க்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்
ஆர்த்து அமர் அட்ட களத்து"

எனக் களவழி நாற்பது என்னும் நூலின் கண், "கார்த்திகைச் சாற்றிற் கழிவிளக்கைப் போன்றன" எனவரும் உவமையும் நாம் உணர்ந்து மகிழ்தற்குரியது.

சீவக சிந்தாமணி

இனி, இவைகளேயன்றிச் சீவக சிந்தா மணி என்னும் சிறந்த சமண சமயப் பெருங் காப்பியத்தின் கண்ணும், திருவண்ணுமலைக் கார்த்திகைத் தீப விழாவைப்பற்றிய குறிப் பொன்று வருகின்றது.

"தார்ப்பொலி தரும தத்தன்
தக்கவா றுரைப்பக் குன்றிற்
கார்த்திகை விளக்கிட் டன்ன
கடிகமழ் குவளைப் பைந்தார்
போர்த்ததன் அகலம் எல்லாம்
பொள்ளென வியர்த்துப் பொங்கி
நீர்க்கடல் மகரப் பேழ்வாய்
மதனன்மற் றிதனைச் சொன்னுன்"

மலைபோன்ற மார்பில் ஒருவன் செங்குவளை மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலையை அணிந்திருந்தமை, திருவண்ணுமலைக் குன் றின்மீது கார்த்திகையின்போது ஏற்றிவைக் கப்படும் விளக்குகளைப் போன்றிருந்தது என்பது கருத்து. இதனுற் பிற சமயத்தவர் களும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினைச் சிறப்புற மதித்துப் போற்றியமை புலனுகும்.

திருவண்ணுமலை வல்லாள மகாராஜன் கோபுரம்

இறைவன் பேரொளி வடிவினன்

சிவபிரான் சோதியாய்ச் சுடராய்ச் சூழொளி விளக்காய்த் திகழ்பவன். ஒளிகளுக்கெல்லாம் மூலகாரணன் சிவபெருமானேயாவன். சூரியன் சந்திரன் அக்கினி ஆகிய ஒளியுடைய பொருள்களெல்லாம், தம்முடைய ஒளியை இறைவனிடமிருந்தே பெறுகின்றன.

சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே! பரனே! பால்கொள்வெண் நீற்றாய்!
பங்கயத் தயனும்மால் அறியா
நீதியே! செல்வத் திருப்பெருந் துறையில்
நிறைமலர்க் குருந்தம்மே வியசீர்
ஆதியே! அடியேன் ஆதரித் தழைத்தால்
அதெந்துவே என்றரு ளாயே!

எனத் திருவாசகமும்,

"ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!"

எனத் திருவிசைப்பாவும்,

"நாயகன் கண்ந யப்பால்
நாயகி புதைப்ப எங்கும்
பாய்இருள் ஆகி மூடப்
பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தி னாலே
சுடர்ஒளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகள் எல்லாம்
சிவன்உருத் தேசே யாகும்"

எனச் சிவஞான சித்தியாரும், இறைவனே எல்லாவகை ஒளிப் பொருள்களுக்கும் ஒளி தரும் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கி நிற்றலை விளக்குதல் காணலாம்.

கார்த்திகையின் முதன்மை

இவ்வுண்மையினை விளக்குவதே, கார்த்திகை விளக்கீட்டு விழா ஆகும். கார்த்திகை நட்சத்திரம் அக்கினியை அதிதேவதையாக உடையது என்பர். அதனால் அஃது "எரி" (பரிபாடல். 11) எனவும், "அழல்" (புறம்: 229) எனவும் வழங்கப்படும். நட்சத்திரங்களுள் கார்த்திகை மிகவும் சிறப்புடைய தொன்று. ஒரு காலத்தில் கார்த்திகையை முதலாகக்கொண்டே நட்சத்திரங்கள் கணக்கிடப்பட்டு வந்தன என்றும், வராக மிகிரர் என்னும் வானநூற் புலவரின் காலத்திற்குப் பின்னர்த்தான் (கி. பி. 6-ஆம் நூற்றாண்டு), அசுவினியை முதலாகக்கொண்டு கணக்கிடும் முறை வழக்கத்திற்கு வந்துவிட்டது என்றும், அறிஞர்கள் யாவரும் இனிது கூறுவர்.

புத்தர்பிரான் தோன்றியருளிய விசாக நாளை, அசுவினி முதலாகக் கணக்கிட்டுப் பதினாலாவதாகக் குறிப்பிடாமல், 27 நாண்மீன்களுள் முன்னுள்ள பதின்மூன்றுக்கும் பின்னுள்ள பதின்மூன்றுக்கும் இடை நிலைப்பட்ட பதினான்காம் நாண்மீனாகக் குறிப்பிட்டு,

"இருதிள வேனில் எரிகதிர் இடபத்து
ஒருபதின் மேலும் ஒருமூன்று சென்றபின்
மீனத் திடைநிலை மீனத் தகவயின்
போதித் தலைவனொடு பொருந்தித் தோன்றும்"

என மணிமேகலையிற் சீத்தலைச் சாத்தனார் பாடிச் செல்லுதலால், வராக மிகிரர்க்கு மிக முற்பட்ட அவர் தம் காலத்தில், கார்த்திகையே நாண்மீன்களுள் முதலாவதாகக் கொள்ளப் பெற்றிருந்த செய்தி தெளியப்படும். இவ்வாற்றாற் கார்த்திகையின் முதன்மையை உணரலாம்.

நலமிகு கார்த்திகை

இங்ஙனம் கார்த்திகையே முற்காலத்தில் முதல் நாண்மீனாகக் கணக்கிடப்பெற்றமைக்குக் கார்நாற்பது என்னும் நூலும் சான்று பகர்கின்றது.

"நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி. சிலமொழி!
தூதொடு வந்த மழை"

வராக மிகிரர்க்கு முற்பட்ட பழங்காலத்தில் நாண்மீன்கள் கார்த்திகையை முதலாகக் கொண்டு கணக்கிடப்பெற்று வந்தமை பற்றியே, கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாண்மீனைத் "தலைநாள்" என மதுரைக் கண்ணங் கூத்தனார் சிறப்பித்துரைப்பாராயினர். அன்றியும் இதன் கண் அவர் "நலமிகு கார்த்திகை" என விதந்து ஓதிய சிறப்பும் உணரற்பாற்று.

இறைவன் பேரொளிப் பிழம்பாகப் பிறங்கும் பெற்றியை அறிவுறுத்தும் வகையில் நிகழ்த்தப்பெறும் திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபவிழாவின் சிறப்பினை நினைவு கூர்ந்தே, மாணிக்கவாசகர் தாம் திருவண்ணாமலையில் அருளிச் செய்த திருவெம்பாவையினை "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" எனத்தொடங்கியருளினர் போலும்! வட இந்தியாவில் முதலிற் சமண சமயச் சார்புடையதாக விளங்கிப்

பின்னர் இந்து சமயத்தினர் என்போர் அணை வராலும் தழுவிக்கொள்ளப்பெற்ற தீபாவளி (தீபம்+ஆவளி: விளக்கு வரிசை)த் திருநாள் தமிழ் நாட்டில் நெடுங்காலமாகத் தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் 'கார்த்திகை விளக்கீட்டு விழா'வைப் போன்ற தொன்றே யாகும்.

கலங்கரை விளக்கு

துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் என்னும் பெருங் கவிஞர், தாம் திருவண்ணாமலையின்மீது பாடியருளிய சோணசயில மாலையின்கண், 'பிறவிக் கடலைக் கடந்து முத்தியாகிய கரையிற் சேர விரும்புவோர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தமது தவவொழுக்கம் ஆகிய கப்பலை மேற்கொண்டு செலுத்தி உய்யும் பொருட்டு, ஒரு கலங்கரை விளக்கைப்போல உயர்ந்தெழுந்து ஒளிதந்து விளங்குவது திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம்' என்னும் கருத்து அமையப் பாடுகின்றார்.

பிறவி	—	கடல்
முத்தி	—	கரை
உலகியல் மயக்கம்	—	வழி தெரியாத திகைப்பு
தவ ஒழுக்கம்	—	கப்பல்
திருவண்ணாமலை	—	தீபத் தம்பம்
கார்த்திகைத்தீபம்	-	கலங்கரை விளக்கு

என அமையும் முறையில், அழகிய இனிய உருவகம் செய்து அவர் பாடியிருக்குந் திறம் வியந்து மகிழ்தற் குரியது.

"துவக்கற அறிந்து பிறக்கும்ஆ ருரும்
துயர்ந்திடா தடைந்துகாண் மன்றும்
உவப்புடன் நிலைத்து மரிக்கும்ஓர் பதியும்
ஒக்குமோ நினைக்கும்நின் னகரைப்
பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே''

முடிவுரை

இறைவன் ஒளி வடிவமாகத் திகழுகின்றான் என்னும் கொள்கை, எல்லாச் சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளத்தக்க சிறந்ததொரு பேருண்மையே யாகும். ஒளியை விரும்பாதார் உலகத்தில் உளரோ? ஆதலின் 'கார்த்திகை விளக்கீட்டு விழா' யாவருமே கொண்டாடி, இறைவனை வழிபட்டு உய்யத் தகுந்ததொரு சிறந்த விழாவாகும் என்பதிற் பிழையில்லை. எனவே, கார்த்திகைத் திருநாளில் ஒளிவடிவாகத் திகழும் இறைவனை, உலகுயிர்கள் எல்லாம் இடர்தீர்ந்து நலம்பெறற் பொருட்டும், நம் நாடு வட எல்லைப் போரில் வெற்றி பெற்று வீறு எய்துதற் பொருட்டும், மன மொழி மெய்களான் வணங்கி வழிபட்டு மகிழ்வோமாக!



சிவஞானபோதம்

திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A., L.T., காஞ்சிபுரம்.

(முன் தொடர்ச்சி)

ச-ஆம் சூத். ௩-ஆம் அதி,

ஆன்மா அறியும் இயல்பிற்றேனும் மூல மலத்தால் அவ்வறிவை இழந்து நிற்றலின், அது தனக்குக் காட்டாகிய அந்தக் கரணங்களோடும் கூடியறிவதாயிற்று என மேலே அதிகரணத்துக் கூறப்பட்டது. ஆண்டு இவ்வாறு வினு நிகழும்: இருளாற் காண மாட்டாத கண் தனக்குக் காட்டாய விளக்கு வந்தபோது எல்லாவற்றையும் ஒருங்கேயறியும்; வெவ்வேறு அவத்தையுற் றறிவதில்லை. ஆனால், ஆன்மா மாயாகாரியங்களைக் காட்டாகப்பெறும்போது புறத்தே ஐம்புலனறிதலும், அவற்றைப் புறத்தே அறிதலைவிடுத்து ஒடுக்கத்தின் நிகழ்வதறிதலும், உண்டியும் வினையும் இன்றிக் கிடத்தலும் எனப் பல்வேறு அவத்தையுறுகின்றது; இதற்குக் காரணம் என்னை?—என இவ்வாறு ஆசங்கை நிகழும். இவ்வாசங்கையை நீக்கி ஆன்மா வேறு வேறு அவத்தையுறுமாற்றை விளக்குவது இம் மூன்றும் அதிகரணம்.

கண்ணுக்குக் காட்டாகிய விளக்குப் போல ஆன்மாவுக்குக் காட்டாகிய அந்தக்கரணம் ஒன்றுதலின்றி நால்வேறு வகைத்தாய் உள்ளது. அல்லதும், அவை தமக்குத் துணையாகவேறு கருவிகளையும் அவாய் நிற்கின்றன. அமைச்சர் முதலாயினரோடு கூடியும் பிரிந்தும் நின்று தன்தொழில் நடாத்தும் அரசன் பல்வேறு நிலையை உடையன் ஆவன். அது போல, மலத்தினால் உணர்வையிழந்து நின்ற ஆன்மாப் பல்வேறு கருவித் தொகுதிகளோடு கூடியும் பிரிந்தும் வருதலின் வேறு வேறு அவத்தையுறுவதாயிற்று என விடுக்கின்றார் ஆசிரியர்.

க. சூத்திரப்பகுதி:—"(ஆன்மா) அமைச்சரசேய்ப்ப நின்று அஞ்சவத்தைத்தே"

உ. வார்த்திகம்:—இனி இவ்வான்மாச் சாக்கிரஞ் சொப்பனஞ் சுழுத்தி துரியம் துரியாதீதமாயுள்ள பஞ்சாவத்திதனாய் நிற்கும் என்றது, அதுதான் மலசொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலான். (பஞ்சாவத்திதன் — ஐந்து அவத்தைகளை யுடையவன்.)

விளக்கம்:—ஒளிக்கதிர்களை யாம் காண இயலாது; ஒளிக்கதிர்கள் யாதேனும் ஒரு பொருள்மேல் பட்டுத் திரும்பும்போதுதான் அப்பொருளையும் அதனைக் காட்டும் ஒளிக் கதிரின் உண்மையினையும் ஒருங்கே உணர்கின்றோம். இதுபோல, நம் உணர்வையும் நாம் தனித்துள்ளதாக அறிதல் இல்லை. நாம் யாதேனும் ஒருபொருளை விடயமாகக்கொண்டுணரும்போதுதான், உணரப்படும் பொருளையும், உணரும் நமது இருப்பையும், விடயத்தைப்பற்றி நின்று நமக்கு அறிவிக்கும் நம் அறிவின் உண்மையினையும் ஒருங்கே உணர்கின்றோம். இங்ஙனம் ஆகலின், நம் அறிவு மூல மலத்தால் மறைப்புண்டு அறியாமையாய் நிற்கும்போது, அது மல சொரூபமாயே நிற்பதன்றி வேறு காணப்படாது; பின் மல நோய்க்கு மருந்தாக நம்முடன் போந்துள்ள மாயாகாரியமாகிய தத்துவங்களோடு கூடும் போது, அத்தத்துவங்களே தனக்குச் சொரூபமாக நின்று அவ்வத்தத்துவத்தால் விளங்கும் அறிவிச்சை செயல்களின் விளக்கமே தன் விளக்கமாகக் கொள்ளும். இத்தத்துவங்களுள் பல ஆன்மாவோடு கூடியும் பிரிந்தும் வருதலின், ஆன்மாவின் உணர்வு நிலையும் அக்கூடுதல் பிரிதலுக்கு ஏற்ப, கேவலம், சகலம், சுத்தம் என அடிப்படையில் மூன்ருகி, ஒவ்வொன்றன் காரியாவத்தையும் ஐந்து ஐந்தாக வைத்து எண்ணி உணர்ந்துகொள்ளப்படும்.

அவற்றுள் மலசொரூபத்தின் மறைந்து நின்று தத்துவ சொரூபமாய் நிற்றலே சகலமாகலின், அது சகலத்திற் கேவலம், சகலத்திற் சகலம், சகலத்திற் சுத்தம் என மூன்ருக வகுக்கப்பட்டு ஒவ்வொன்று ஐவைந்து வகைப்படும். அவை வருமாறு:—

சகலத்திற் சகலம் எனப்படும் பிரேரகாவத்தை ஓர் அரசன் அமைச்சரும் ஏனைப்

பரிசனமும் உடன்சூழ்ந்து நிற்பத் திருவோலக்க மண்டபத்திலிருந்து உலக வழக்கில் யாதானும் ஒன்றைப்பற்றிச் சிந்தித்து ஆய்ந்து, துணிந்து, செயல்செய்யுமாறுபோல, 'மருவிய பொறியில் ஒன்றும் மாபூதம் ஐந்தில் ஒன்றும்-கருவிகள் நான்கும் நீங்காக் கலாதிகள் ஐந்துங்கூடி ஒரு புலன் நுகரும்' என்றபடி, ஆன்மா விடயங்களை நிருவிகற்பமாயும் சவிகற்பமாயும் அறிந்து தன்வேதனைப்பட்டு வரும் நிலையே பிரேரகாவத்தை எனப்படும் சகலத்திற் சகலமாம். இங்கே பிரேரகக் கருவிகள் எனப்படும் சுத்தவித்தை, ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம் என்பவை முறையே ஐந்தும், அவற்றுள் சுத்தவித்தைநீங்க ஏனை நான்கும், அவற்றுள்ளும் ஈசுரம் நீங்க ஏனை மூன்றும், அவற்றுள் சத்தி நீங்கச் சிவம் ஒன்றும் தொழிற்படுதல்பற்றி இப்பிரேரகாவத்தையும் சாக்கிரம் முதலாக ஐந்து வகைப்படும்.

அந்தக்கரணங்கள் அமைச்சரோடு உவமிக்கப்பட்டாற்போலப் பிற கருவிகளும் ஏனை அரசுறுப்புக்களோடு உவமிக்கப்படும்.

செவி, மெய், கண், நா, மூக்கு என்னும் இடங்களில் உள்ள அறிவுப் பொறிகள் ஐந்தும் முறையே வாயில் மிலேச்சர், ஒற்றர், தூதர், சூதமாகதர், புரோகிதர் எனப்படும்.

வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்னும் தொழிற்பொறி ஐந்தும் முறையே குதிரைவீரர், யானைவீரர், தேர்வீரர், காலாள்வீரர், சேனாதிபதிகள் எனப்படும். இப்பொறிகளின் விடயங்களான சத்தாதி ஐந்தும், வசனாதி ஐந்தும் பரிசனம் எனப்படும். பிராணாதி வாயுக்கள் உறுதிச்சுற்றம் எனப்படும்.

புருடனைவிட்டு நீங்காது உள்ள கலாதி பஞ்சகஞ்சுகங்கள் அரசனுக்குக் கவசம் போல்வன; தன்மாத்திரையும் ஐம்பெரும் பூதமும் தேர் ஊர்வானுக்குத் தேர்போல இந்திரியங்களுக்கு ஆற்றல் விளைவித்து நிற்றலின், அவை ஊர்தியோடு உவமிக்கப்படும்.

சகலத்திற்கேவலம்

1. பிரேரகாவத்தையினின்று ஆன்மா விடய போகங்களை அனுபவித்துவருகையில் பொறிகட்கு ஊக்கத்தை விளைத்து நிற்கும் தூல பூதமும் சூக்கும பூதமும் அவற்றின் கூறுகிய தாத்துவிகங்களும் வினைக்கீடாகத் தொழிற்படாது நீங்கும். நீங்க, பொறிகளின் தொழிற்பாடு மெத்தென நிகழும். கண்டும் காணாது, கேட்டும் கேளாது இங்ஙனம் விடய நுகர்ச்சியில் மெத்தென நிற்கும் அவத்தை சாக்கிரம் (நனவு) எனப்படும். இதற்கு இடம் புருவ நடு. இங்கு எண்ணப்படும் கருவிகள் முப்பத்தைந்து. அவை அறிவுப் பொறி 5, தொழிற்பொறி 5, அவற்றின் விடயங்களான சத்தாதி 5, வசனாதி 5, பிராணாதி வாயுக்கள் 10, அந்தக்கரணம் 4, புருடன் ஒன்று: ஆக 35.

2. பின் சொப்பனத்தானமாகிய கண்டத்தில், அறிவுப் பொறி ஐந்தும், தொழிற்பொறி ஐந்தும், நீங்க எஞ்சியுள்ள சத்தாதி விடயம் 5, உரையாதி விடயம் 5, பிராணாதி வாயு 10, அந்தக்கரணம் 4, புருடன் 1 ஆக 25 கருவிகள் தொழிற்படும்.

3. பின் சுழுத்தித்தானமாகிய இதயத்தில் சித்தம், பிராணன், புருடன் என்னும் மூன்றும் தொழிற்படும்.

4. துரியத்தானமாகிய உந்தியிலே பிராணன், புருடன் இரண்டும் தொழிற்படும்.

5. துரியாதீதத் தானமாகிய மூலாதாரத்திலே புருடன் ஒன்றுமே தொழிற்படும்.

இச்சகலத்திற்போலச் சுத்தாவத்தையும் சாக்கிரம் முதலாக ஐந்துவகைப்படும்.

(நான்காஞ் சூத்திரம் முற்றிற்று.)

— ❀ —

அழகர்கோயில் : ஸ்ரீ கள்ளழகர் தொகுதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுந்தரராஜப்பெருமாள் சந்நிதியில், ஸ்ரீசுந்தரராஜ ஸுப்ர பாதத்தைச் சென்னை அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் 6—10—62ல் துவக்கி வைத்தார்கள். அவர்கள் அழகர்கோயில், காமாட்சியம்மன் கோயில் திருப்பணிக்கும், தபால் தந்தி நிலையக் கட்டிடத்திற்கும் அடித்தளக்கல் நாட்டினார்கள்.

இறைவனின் திருநடனம்

சராசரி மனித உடம்பில் ஏழத்தாழ 5 முதல் 6 லிட்டர்கள் வரை இரத்தம் இருக்கின்றது. இந்த இரத்தமானது இடைவிடாமற் பயன்படுத்தப்பட்டும், புதுப்பிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கின்றது. இருதயமானது இரத்தத்தை ஓய்வு ஒழிவு இன்றி இயங்கிக் கொண்டிருக்கவும், உடம்பு முழுவதும் பரவிச் சுற்றி வரவும் செய்கின்றது. இருதயம் (நெஞ்சப் பை) வியப்பிற்குரிய ஒரு பொருள் ஆகும். அதனைத் தசையினால் இயன்ற ஒரு "வெளியேற்றியக்க நிலையம்" என நாம் குறிப்பிடுதல் பொருந்தும்.

இருதயமானது ஒவ்வொரு நிமிடமும் 12000 மைல் நீளமுடைய நாளங்களின் வழியாக உடலில் இரத்தம் பரவவும், மீண்டும் தன்பால் திரும்பி வந்து சேரவும் ஏற்றபடி அயராமல் இயங்கிக் கொண்டே இருக்கின்றது. ஒவ்வோர் 24 மணி நேரத்திற்கும் 10000 லிட்டர் அளவு இரத்தம் இருதயத்திற்கு வந்துகொண்டும், இருதயத்தினின்று சென்றுகொண்டும் உள்ளது. இத் தொழிலைச் செய்வதன் பொருட்டுச் செலவாகின்ற ஆற்றல், சராசரி அளவுள்ள ஒரு மனிதனை 1259 அடி உயரத்தில் எழும்பச் செய்வதற்குப் போதுமானதாகும்.

இயல்பான ஒரு மனித வாழ்வின் 70 ஆண்டுகளில் நம்முடைய இருதயம் 2,500,000,000 முறை துடிப்புற்று இயங்குகின்றது. அஃது ஒரு சிறிதும் ஓய்வு கொள்ளுவதில்லை. பழுது பார்க்கப் படுவதற்காகச் சற்றேனும் நிற்பதில்லை. இத்தகைய ஓர் அற்புதக் கருவியை நீயாவது, நின் தந்தையாவது, வேறு பிறர் எவராவது படைத்தல் இயலுமோ? நன்கினிது சிந்தித்துப் பார்!*

வியப்பை விளைவிக்கும் இத்தகைய இருதயத்தின் இடைவிடாத் துடிப்பையும் இயக்கத்தையுமே, அருளாளர்கள் ஆகிய ஞானச் செல்வர்கள், தில்லைச் சிற்றம்பலத்தில் நிகழும் "இறைவனின் திருநடனம்" என்று குறிப்பிட்டு, வியந்து புகழ்ந்து போற்றியுள்ளனர்.

1. தாமரை மொட்டுப் போன்ற நெஞ்சப் பையின் அமைப்பு	ஓங்காரம்
2. நெஞ்சப் பையில் விளங்கும் மின்னொளி	இறைவன்
3. மின்னொளியின் அசைவு	திருநடனம்
4. நெஞ்சப் பையில் விளங்கும் மூல முதல் ஒலி	திருவடிச் சிலம்பொலி
5. நெஞ்சப் பையின் சுற்று வடிவு	திருவாசிச் சுடரொளி.

*"There is normally about 5 to 6 quarts (or litres) of blood in the average human body. This blood, constantly being used up and renewed, is kept in constant movement and circulation by heart. The heart is itself a wonder. It may be called a muscular pumping station. And it keeps on pumping the blood down into its 12,000 miles of pipe line and back to itself about once every minute. This means that every 24 hours it receives and pumps out about 10,000 litres of blood; and the energy it spends in doing this is enough to raise a normal.sized man 1259 feet up in the air. This means that in a normal life of 70 years, our heart beats some 2,500,000,000, times; and that without rest and without any stop for repair! Do you think you or your father, could make a pump like that?"

—Louis Leguen, S. J.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

காவிரிக்கரைத் தலங்களை வணங்கல்

நாயனார் தமது எண்ணத்தை முடித்துப் பழையாறை வடதளியை வணங்கிய பின்னர்ப் பிற தலங்களையும் வணங்க விரும்பி, அவ்விடத்தினின்றும் எழுந்தருளி, காவிரி நதியின் இருகரைகளிலும் உள்ள தலங்களை வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, திருத்தொண்டு புரிந்து சென்றருளினார்.

திருவானைக்கா வணங்கல்

திருவானைக்காவை அடைந்தருளிய பொழுது, அளவற்ற சிவனடியார்கள், நாயனாரது வருகையை அறிந்து சிறப்பாக எதிர்கொண்டார்கள். நாயனார் அவர்களுடன் திருக்கோயிலை அடைந்து, தனக்கு வாய் நூலாற் பந்தர் செய்த சிலந்தியை, 'கோச் செங்கட் சோழர்' என்னும் அரசராய்ப் பிறக்குமாறு திருவருள் புரிந்த வெண்ணாவற் பெருமானது திருவடிகளை வணங்கிப் பேரன்பினால் திருப்பதிகங்கள் அருளிச்செய்தார். அத்தலத்திற்கு இன்று உள்ள திருப்பதிகங்கள் மூன்று. அவை, "கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமும், "எத்தாயர் எந்தந்தை", "முன்னானைத் தோல்போர்த்த" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகங்களுமாம்.

அவற்றுள், திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், இறைவனை அடையாது வாணாள் வீணாளாகக் கழிப்பவரை நினைந்து இரங்கி, இறைவன் அடைந்தார்க்கு அருளும் அருமையை அறிவுறுத்தருளியது. அதனை,

"உருகி நைபவர்க் கூனமொன் றின்றியே
அருகு நின்றிடும் ஆனைக்கா அண்ணலே"
"என்பொன் ஈசன் இறைவன்என் றுள்குவார்க்
கன்ப னாயிடும் ஆனைக்கா அண்ணலே"
"காவாய் என்றுதம் கைதொழு வார்க்கெலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா அண்ணலே"
"நெஞ்சு நைந்துநின் றுள்குளிர் வார்க்கெலாம்
அஞ்ச லென்றிடும் ஆனைக்கா அண்ணலே"
"தடைஒன் றின்றியே தன்னடைந் தார்க்கெலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே"
"தொழுது கைகளால் தூமலர் தூவிநின்
றழுமவர்க் கன்பன் ஆனைக்கா அண்ணலே"
"இருள்அ றுத்துநின் றீசனென் பார்க்கெலாம்
அருள்கொ டுத்திடும் ஆனைக்கா அண்ணலே"

என்பவற்றால் அறியலாம்.

"நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே"

என்னும் திட்பமானதோர் விலக்குரையும் அத் திருப்பதிகத்தின்கண்ணே எழுந்தது.

"எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்"

என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகமும், 'இறைவன் திருவடியையே புகலிடமாக அடையும் உணர்வுகைகூடப் பெறுமாயின் வினைவழியால் வரக்கடவ துன்பங்கள் பற்றி நாம் வருந்த வேண்டுவது இன்று' என்னும் ஒரு பேருண்மையை அறிவுறுத்தருள்வது. அதன் முதற் றிருப்பாட்டு, எவரொருவர்க்கும் உலகத்தார் உறுதிச் சுற்றம் ஆகாமையை இனிதெடுத்து விளக்கியருள்வது.

"முன்னானைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை"

என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், திருவானைக்காப் பெருமானை 'மிக்க நீர்த்திரள்' எனக்கூறி, அவனது இன்பத்தில் தாம் திளைத்தமையை, அந்நீர்த் திரளில் மூழ்கி மகிழ்ந்ததாக அருளிச் செய்தது. திருவானைக்காப் பெருமான் எழுந்தருளியுள்ள இடம் பெரியதொரு நீர் ஊற்றாய் இருத்தலும், அத்தலம் பஞ்சபூதத் தலங்களுள் அப்பு பூதத் தலம் எனச் சொல்லப்பட்டு வருதலும் இங்கு நினைத்தற்குரியன.

"மூவாத சிந்தையே மனமே வாக்கே தன்ஆனை யாப்பண்ணி ஏறி னானை" என, மெய்யுணர்ந்தோரது உள்ளத்தையும், உரையையும் முதல்வன் தன்னுடையனவாகக் கொண்டு, அவற்றைத் தன்வழி நடாத்தும் உண்மை அதன்கண் வெளிவந்துள்ளது.

காவிரியின் தென்கரைச் சிவ தலங்கள்

திருவானைக்காவை வணங்கித் திருப்பதிகங்கள் பல அருளிச்செய்த பின்பு நாயனார், திருஎறும்பியூர், திருச்சிராப்பள்ளி, திருக்கற்குடி, திருப்பராய்த் துறை முதலாகக் காவிரியின் தென்கரையிலுள்ள திருத்தலங்களைப் பேரன் போடும் சென்று கண்டு வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து திருத்தொண்டியற்றி யருளினார்.

திருஎறும்பியூர்

திருஎறும்பியூருக்கு உள்ள திருப்பதிகங்கள் இரண்டு. அவற்றுள், "விரும்பி ஊறு விடேல்மட நெஞ்சமே" என்னும் திருக்குறுந் தொகைத் திருப்பதிகம், சிவபிரான் அத்திருத் தலத்தை இடமாகக்கொண்டு விளங்கி யருளும் திருவருட்டிறத்தை வியந்தருளிச் செய்தது. அஃது அத் தலத்திடத்து அடியவர்க்கு ஆர்வம் பெருக்குவதாகும்.

மற்றும் அதனுள், "மறந்தும் மற்றிது" என்னும் திருப்பாடலுள், 'இறைவன் தம்மை அழகிய ஓர் யாக்கையுள் இட்டுக் காட்டியது, உடம்பொடு கூடி நிற்கும் நிலை பெரியதோர் இடர்ப்பாடாவதல்லது இன்பமாதல் இல்லை என்பதனை உணர்வித்தற் பொருட்டே" என்பதனை எடுத்தோதி, 'அறியாமை காரணமாக முன்பு நீ விரும்பிய இந்நிலையை, நெஞ்சே, இனி ஒருகால் மறந்தும் நினையா தொழிதி' என்று அரியதோர் உண்மை அருளிச்செய்யப்பட்டது.

இன்னும், "இன்பமும், அதனொடு கூடவே அதற்கு மறுதலையாய துன்பமும், பிறப்பும், அதனோடு கூடவே அதற்கு மறுதலையாய இறப்பும் அமைத்த வல்லாளன் இறைவன்; ஆயினும்,

> "அன்ப னேயர னேயென் றரற்றுவார்க்கு
> இன்ப னுகும் எறும்பியூர் ஈசனே"

என்னும் பேருண்மையும் அதன்கண் எடுத்தோதியருளப் பெற்றது

"பன்னியசெந் தமிழறியேன் கவியேல் மாட்டேன்" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம், விலைவரம்பறியா விழுச்செம்மணியும், அறியாமை இருளை அகலத் துரக்கும் அருட்பேரொளியுமாகிய அத் தலப் பெருமானைத் தாம் நேர்படச் சென்று அடையப் பெற்ற அரும்பெரும் பேற்றின் இன்ப மீதூர்வினின்று அருளிச்செய்தது. அதுவும், மேலைத் திருப்பதிகம்போல அத்தலப் பெருமானை அடைதற்கண் ஆர்வத்தை மிகுவிப்பதாகும். "பன்னியசெந் தமிழறியேன்" என்றற் றொடக்கத்தன, உயிர்களது சிறுமையையும், இறைவனது திருவருட்டிறத்தின் பெருமையினையும் உணர்வித்தருள்வன.

திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளிக்கு, நாயனாரது திருப்பதிகமாக நாம் பெற்றுள்ள திருப்பதிகம் ஒன்றே. அது, "மட்டு வார்குழ லாளொடு மால்விடை" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம். அதனுள்ளும் முதல் நான்கு திருப்பாடல்கள் தவிர, ஏனைய திருப்பாடல்களைப் பெற்றிலேம். அந் நான்கு திருப்பாடல்களுள்ளே,

> "பெரிய வன்சிராப் பள்ளியைப் பேணுவார்
> அரிய யன்தொழ அங்கிருப் பார்களே"
> "திருச்சி ராப்பள்ளி என்றலுந் தீவினை
> நரிச்சி ராது நடக்கும் நடக்குமே

என்னும் பெரும்பயன் நிறைந்த அருளிப்பாடுகள் கிடைத்துள்ளன.

திருக்கற்குடி

திருக்கற்குடிக்கு உள்ள திருப்பதிகம், "மூத்தவன் வானவர்க்கு மூவா மேனி முதல்வனை" என்னும் திருத்தாண்டகத் திருப்பதிகம் ஒன்றே. அது, இறைவனை 'விழுமியான்' என்றும், 'கற்பகம்' என்றும் அறிவுறுத்து, அவனைக் "கண்ணாரக் கண்டேன் நானே" என மகிழ்ந்துரைத் தருளுகின்றது. எனவே, அது, தன்னை ஓதுவார்க்கும் அவ்வின்பத்தைப் பயப்பதாகும். அதன்கண் இறைவன்,

> "அடைந்தார்தம் பாவம் போக்கக் கற்றவன்"
> "இவ்வுலக மெல்லாம் உண்டான் உமிழ்ந்தான்"

என்னும் அரியபொருள்கள் அருளிச் செய்யப் பெற்றுள்ளன.

திருப்பராய்த் துறை

திருப்பராய்த்துறைக்கு உள்ள திருப்பதிகமும் ஒன்றே. அது, "கரப்பர் கால மடைந்தவர் தம்வினை—சுருக்குமாறு வல்லார்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகமே. அதில் திருப்பராய்த்துறையைச் சென்று வணங்குதற்கண் நாயனார்க்கு இருந்த விரைவு புலனாகின்றது. மற்றும்,

"வாதை தீர்க்கஎன் றேத்திப் பராய்த்துறைச்
சோதி பாதம் தொழுதெழுந் துய்ம்மினே"

என்னும் அறிவுரையும்,

"தென்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
அன்ப ராயிருப் பாரை அறிவரே"
"திருப்ப ராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்ப ராயிருப் பாரை யறிவரே"

என்னும் அரும்பொருள்களும் அதன்கண் அமைந்துள்ளன.

இறைவர் கட்டமுது அளித்தல்

நாயனார், காவிரியின் தென்கரையில் உள்ள தலங்களை வணங்கியபின், காவிரியைக் கடந்து, அதன் வடகரையை அடைந்து, திருப்பைஞ்ஞீலியை நோக்கி நடந்தருளினார்.

அவ்வழியோ மிகவும் கடுமையானது. அதனைக் கடக்குங்கால் நாயனார்க்கு இளைப்பும் களைப்பும் மிகுதியாயின. நீர்வேட்கையும் பசியும் வந்து பற்றி வருத்தின. ஆயினும், இவற்றிற்கெல்லாம் மனம் மெலிகின்றவரோ நம் வாகீசர்! தம் பயணத்தை நிறுத்தாது, தொடர்ந்து செய்துகொண்டே யிருந்தார். பசி, நீர் வேட்கை முதலியவற்றால் அவருக்குத் தீங்கு வாராவண்ணம் தடுத்தல் இறைவர்க்குக் கடமையாகிவிட்டது. அதனால், இறைவர், நாயனார் செல்லும் வழியில் முன்னே ஒரு குளிர்ந்த சோலையையும், நல்ல நீர் நிறைந்த குளமும் உண்டாக்கி, தாம் அவ்வழியே செல்லும் ஒரு சைவ அந்தணர் வடிவங்கொண்டு, ஒரு கட்டமுதுப் பொதியுடன் நாயனார் கண்ணெதிரே காணுமாறு எழுந்தருளி யிருந்தார்.

வழிநடந்து வருந்திச் செல்பவராகிய நாயனார், அச் சைவ அந்தணர் அருகேசென்று அமர்ந்தருளினார்.

அந்தணராய் உள்ள இறைவர், நாயனாரைப் பார்த்து, 'நீர் நெடுந்தொலைவு நடந்து மிகவும் இளைத்துக் காணப்படுகின்றீர்; என்னிடத்திற் கட்டமுது மிகையாகவே உள்ளது; அதனை இக் குளத்தருகிற் கொண்டுசென்று உண்டு தண்ணீர் பருகி இளைப்பாறிச் செல்லுவீர்' என்று உரைத்தருள, நாயனார், 'அஃது இறைவர் கட்டளை' என்று அறிந்தால் அதனை எங்ஙனம் சிறிதும் மறுது ஏற்றுக் கொள்வாரோ அங்ஙனமே சிறிதும் மறுது, திருவுள்ளத்தில் வேறொன்றுங் கருதாது, அந்தணரை வணங்கிக் கட்டமுதை வாங்கிச் சென்று அருந்தி, அக்குளத்தில் உள்ள அருமையான தண்ணீரைப் பருகி, பசியும் நீர் வேட்கையும் நீங்கப்பெற்று, அந்தணரோடு உடன்வந்து அமர்ந்து இளைப்பாறியருளினார்.

இளைப்பு முழுதும் நீங்கி இனிதிருந்த நாயனாரை நோக்கி அந்தணர், 'இதற்கு அப்பால் நீர் எங்குச் செல்லப்போகின்றீர்?' என்று வினவ, நாயனார், 'அடியேன் திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லப்போகின்றேன்' என்றார். அந்தணராயுள்ள இறைவர், 'நானும் திருப்பைஞ்ஞீலிக்குத்தான் செல்கின்றேன்; ஆகவே, இருவரும் ஒருங்கு கூடியே செல்லலாம்' என்று சொல்லி, நாயனாரோடு கூடவே புறப்பட்டுச் சென்றார்.

இவ்வாறு நாயனாரோடு உடன் சென்ற இறைவர் திருப்பைஞ்ஞீலியைக் கிட்டும் பொழுது மறைந்தருளினார். அதனைக் கண்டருளிய நாயனார், 'அத்துணையும் நிகழ்ந்தன யாவும் இறைவர் செயலே' என்பது அறிந்து, அன்புமீதூர்ந்து கண்ணீர் மழைபோலச் சொரிய, "அம்பலத்துள் ஆடுதலை விரும்புபவராகிய எம்பெருமான், அடியேனையும் பொருளாகக்கொண்டு, நேர்வந்து அருளிய பெருங்கருணை ஓர் அளவுட்பட்டதோ" எனச் சொல்லித் திருப்பதிகத்தால் போற்றிப் புகழ்ந்து கீழே விழுந்து வணங்கி எழுந்தருளினார். அத்திருப்பதிகத்தை நாம் பெற்றிலோம்.

ஈண்டு ஒரு குறிப்பு

'நாம் பெற்றிலோம்' என மேற்கூறிய அத்திருப்பதிகம், சேக்கிழார் கண்ட திருப்பதிகமாய் இருத்தல் வேண்டும் என்று எண்ணுதற்குக் கீழ்க்காணும் அவரது திருப்பாடல் இடந்தருகின்றது.

"கூட வந்து மறையவனார் திருப்பைஞ்
ஞீலி குறுகிட
வேடம் அவர்முன் மறைத்தலுமே
மெய்ம்மைத் தவத்து மேலவர்தாம்
ஆடல் உகந்தார் அடியேனைப்
பொருளா அளித்த கருணைஎனப்
பாடல் புரிந்து விழுந்தெழுந்து
கண்ணீர் மாரி பயில்வித்தார்."

திருப்பதிகம் காணப்படாத இடத்தில் சேக்கிழார், 'பாடல் புரிந்து' எனக் கூறவேண்டுவதில்லை. திருப்பதிகம் இல்லாத தலங்

களில் நாயனார் சென்று வணங்கினமையைக் கூறும்பொழுது, சில இடங்களில் 'திருப்பதிகம் சாத்தி' எனக் கூறுகின்றார். அது பொதுப்படக் கூறுதலாகும். அதுபோன்றது அன்று இந்த இடம்.

தலங்களுக்குச் சென்று வணங்கும் பொழுது, திருப்பதிகம் சாத்தி வணங்குவது நாயனாரது தவறாத தொண்டு என்பது ஐயமின்றி விளங்கிக்கிடத்தலால், திருப்பதிகம் அருளிச் செய்தார் எனக் கூறுதலில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகளில் திருப்பதிகம் அருளிச்செய்தல் என்பது ஒரு தலையானதாகக் கொள்வதற்கில்லை. ஏனெனில், அமணர் இட்ட நஞ்சு அமுதாயின சமயத்தில் திருப்பதிகம் அருளிச் செய்ததாக எங்கும் குறிப்பிடப்படவில்லை.

இன்னும், நீற்றறை குளிர்ந்த திருப்பதிகமாக "மாசில் வீணை" என்பது கொள்ளப்பட்டு வரினும், சேக்கிழார், "வெய்யநீற்றறையதுதான்...... ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்ததே" என, அதன் முதற்றிருப்பாடற் பொருளைத் தம் கூற்றாக எடுத்து மொழிந்ததன்றி, அத்திருப்பதிகத்தை அப்பொழுதுதான் நாயனார் அருளிச் செய்தார் எனக் கூறினாரில்லை.

அங்ஙனம் செல்வோராகிய சேக்கிழார் இவ்விடத்தில், "பாடல் புரிந்து விழுந்தெழுந்து" எனக் கூறினாராயின், திருப்பதிகம் பற்றி யாதும் காணாத கூறினார் என்றல் அமைவதோ!

இனி, இவ்விடத்தில், சேக்கிழாரது திருப்பாடலில், "பாடல் புரிந்து" என வந்துள்ள தொடரைவிட, அதற்கு முன் உள்ள, "என" என்னும் சொல் மிகச் சிறப்பாக நோக்கத்தக்கது.

'என' என்னும் சொல், 'என்று இவ்வாறு' எனப் பொருள்தரும். 'எவ்வாறு?' என்னும் வினாவிற்கு உரிய விடை, அச்சொற்கு முன்னே அமைந்து கிடத்தல் இயல்பு. அங்ஙனம் நோக்குங்கால், மேற்காட்டிய சேக்கிழாரது திருப்பாடலில் உள்ள,

> "ஆடல் புரிந்தார் அடியேனைப்
> பொருளா அளித்த கருணை"

என்பதே அத்திருப்பதிகம் என்பது முடிவாகும். எனவே, அத் திருப்பதிகத்தின் திரண்ட பொருளாகவே அதனைச் சேக்கிழார் குறித்தருளினார் என்பது பெறப்படும். 'இத் துணைத் தெளிவுபட அமையுமாறு, திருப்பதிகத்தைக் காணாமலே சேக்கிழார் கூறியிருப்பரோ? என்னும் சிந்தனை எழுகின்றது.

இனி, மேற் குறித்த, 'என' என்னும் சொல்லை, "பாடல் புரிந்த" என்பதில் உள்ள 'புரிந்து' என்னும் சொல்லோடு இயையா தொழியின், 'நினைந்து' அல்லது 'சொல்லி' எனச் சொல்லெச்சமாக ஒருசொல் வருவித்து முடித்தல் வேண்டும். அப்பொழுதும், 'நாயனார் திருப்பதிகம் அருளிச்செய்து வணங்கினார்' என்னும் கருத்து மாறாதாகையால், திருப்பதிகம் காணாதபொழுது, வேண்டாத இடத்தில், "பாடல் புரிந்து" எனச் சேக்கிழார் கூறுவானேன்? என்னும் வினா நிற்பதேயாகும். ஆகவே, இன்னோரன்ன சில இடங்களால், சேக்கிழாருக்குக் கிடைத்திருந்த திருப்பதிகங்களுள்ளும் சில திருப்பதிகங்கள் பிற்காலத்தார்க்குக் கிடையா தொழிந்தனவோ? அதுபற்றியே, 'திருப்பதிக்கோவை,' 'திருப்பதிகக் கோவை' முதலிய நூல்களால் தாம் கண்ட அளவில் திருப்பதிகங்களின் எண்ணிக்கை முதலியவைகளைப் பிற்காலப் பெரியோர்கள் வரையறை செய்து பாதுகாத்தனரோ? என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகின்றது. ஆயினும், இவையெல்லாம் அறிஞர்கள் சிந்தனைக்கு உரியனவாகவே கொள்க.

திருப்பைஞ்ஞீலியை வணங்கல்

இறைவர் மறைந்தருளிய பின்னர் நாயனார் திருப்பைஞ்ஞீலித் திருக்கோயிலை அடைந்து மெய்யன்போடு வணங்கி, மனம் உருகி நின்று, திருப்பதிகங்கள் அருளிச் செய்து போற்றி, கைத்திருத்தொண்டு செய்துகொண்டு, சிலநாள் அத்தலத்திலே எழுந்தருளியிருந்தார்.

இஞ்ஞான்று அத்திருத்தலத்திற்கு உள்ள நாயனார் திருப்பதிகம் ஒன்றே. அது, "உடையர் கோவணம் ஒன்றுங் குறைவிலர்" என்னும் திருக்குறுந்தொகைத் திருப்பதிகம். இதனுள்,

> "சடையிற் கங்கை தரித்த சதுரரை
> அடைய வல்லவர்க் கில்லை அவலமே"

"......பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர் தம்வினை தூளியே"
என்னும் தெளிவுரைகளும்,
"........பைஞ்ஞீலி எம்

ஆர்கிலா அமுதை அடைந் துய்ம்மினே"
என்னும் உறுதிமொழியும் அமைந்துள்ளன.

திருவண்ணாமலையை வணங்கல்

திருப்பைஞ்ஞீலியை வணங்கிய பின் நாயனார், பற்பல மலைத்திருக்கோயில்கள், ஊர்த்திருக்கோயில்கள் சென்று வணங்கித் திருப்பதிகம் அருளிச்செய்து, திருத்தொண்டு செய்து, இறைவருடைய திருவருளின் வழியே வடதிசையில் திரும்பித் திருவண்ணாமலையை அடைந்தருளினார்.

அங்கு அம்மலையே இறைவர் கொண்டுள்ள முதல் திருவுருவமாதலின், அதனைக் கைகூப்பித் தொழுதுகொண்டே வலம் வந்து, அடியார்கள் தம் விருப்பப்படி நீராட்டு முதலிய தொண்டுகள் செய்து வழிபடுதற் பொருட்டு, அம்மலையின் தாழ்வரையிடத்தே ஓர் அழகிய குன்றின்மேல் இலிங்கத்திருமேனியுடன் விளங்கும் இறைவரை அடைந்து மெய்ம்மறந்து விழுந்து பணிந்து எழுந்து, பேரின்பக்கடலுள் படிந்து, 'இறைவர் இந்நிலவுலகத்தில் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குச் சென்று வணங்குங் காலத்து, உடம்பில் கட்டுற்று நிற்கும் பிறப்பு நிலையே அதனின் நீங்கி நிற்கும் வீட்டு நிலையினும் சிறந்த இன்பத்தினைத் தருவதாகும்' என்னும் பேருண்மையை அனைவரும் உணருமாறு, அநுபவத்தோடு கூடிய திருப்பதிகத்தினால் வெளியிட்டருளினார். அத்திருப்பதிகம், "ஓதிமா மலர்கள் தூவி" என்னும் திருநேரிசைத் திருப்பதிகமாகும். அதன் முதற் திருப்பாடல் வருமாறு:—

"ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்டோட் சுடர்மழுப் [படையினனே
ஆதியே ஆதிமூர்த்தி அணியணு மலையுளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா [நினைவி லேனே"

மற்றும் அதனுள்,

"தொண்டனேன் உன்னை யல்லாற்
சொல்லுமா சொல்லி லேனே"
"மருவிநின் பாத மல்லால்
மற்றொரு மாடி லேனே"
"என்பொனே உன்னை யல்லால்
ஏதும்நான் நினைவி லேனே"
"இறைவனே உன்னை யல்லால்
யாதும்நான் நினைவி லேனே"
"பரவுநின் பாதமல்லால் பரமநான்
பற்றி லேனே"
"தீர்த்தனே நின்றன் பாதத்
திறமலால் திறமி லேனே"
"வானுடை விடையாய் உன்றன்
மலரடி மறப்பி லேனே"
"சிரத்தினால் வணங்கி யேத்தித்
திருவடி மறப்பி லேனே"

எனப் பலவாறு அருளிச்செய்தார். இங்ஙனம், இறைவனையன்றிப் பிறிதொன்றனை அறிதலும், விரும்புதலும் இல்லாத நிலையே இன்ப நிலையாதலும், அது வீட்டு நிலையில் கரணங்கடந்த நிலையாய் இருப்ப, பிறப்பு நிலையில் கரணங்களுக்கு உட்பட்ட நிலையாய் இருத்தலும் அறிதற்குரியன. இங்ஙனமாகவே, இத்திருப்பதிகத்தினையே சேக்கிழார், "தங்கு பிறப்பே வீட்டினுக்கும் மேலாம் பெருமை" சாதித்ததாகக் கூறியருளினார் என்க.

நாயனார், கண்களாற் பருகும் அமுதம் போன்றவராகிய, அண்ணாமலை இறைவரை வணங்கி நிறைவு பெறுதவராய்ப் பின்னும் பல நாட்கள் அங்கே எழுந்தருளியிருந்து, பல காலும் அவ்விறைவரை வணங்கித் திருப்பதிகங்கள் பாடித் திருத்தொண்டு செய்துகொண்டு இருந்தருளினார். அத்திருப்பதிகங்களுட் கிடைத்துள்ளவை இரண்டே. அவை "வட்டனை மதிசூடியை" எனவும், "பட்டி யேறுகந் தேறி" எனவும் தொடங்குந் திருக்குறுந் தொகைத் திருப்பதிகங்களாம்.

அவற்றுள், முதற்றிருக்குறுந் தொகைத் திருப்பதிகம், அண்ணாமலை இறைவரைத் தாம் மறக்கலாற்றாமையை வெளியிட்டருளியது. இரண்டாவது திருக்குறுந்தொகைத் திருப்பதிகம், அண்ணாமலை இறைவரை அடைதலால் வினைகள் எளிதின் விண்டொழிதலும் நற்றவத்தொடு ஞானத் திருத்தலும், நல்வாயின நம்மை அடைதலும் உளவாதலை அறிவுறுத்தருளுவது. "அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே" "அண்ணாமலை யண்ணல்—பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை இலரே" எனத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் இங்ஙனமே

இத்தலம் பற்றி அருளிச் செய்தமை நினைவு கூர்தற்குரியது.

திருவண்ணுமலை, தாமே தலைவர் எனத் தருக்கி நின்ற பிரம விட்டுணுக்களது தருக்கினை ஒழித்தருளிய தலமாதலின், அது, 'நானே பிரமம்' எனத் தன்னைக் கடிதின் மதிக்கும் பசுஞானத்தை அகற்றியருளுவதாகும். அதனுன், அது, 'நினைக்க முத்திதரும் தலம்' எனப்படுவது. 'நினைப்பு' என்பது, மலத்தின் வழி நோக்குங்கால் பசுஞானத்தையே குறிக்கும் என்பது சைவசித்தாந்தத் துணிபு. ஆகவே, அருள்வழி நோக்குங்கால் அஃது அப்பசு ஞானத்தின் மேற்பட்ட பதி ஞானத்தையே குறிக்கும். இவ்வாறு மல வாசனையால் ஆன்மாவின் உணர்வில் தோன்றும் பசுஞானத்தை அகற்றிப் பதிஞானத்தால் இறைவனை உணரச்செய்வது திருவண்ணுமலை என்னும் தலம் என்னும் குறிப்பு, அத்தலத்தை நினைத்தல் இன்றியமையாததென்பது பட எழுந்துள்ள தொடர்களில் நிரம்ப அமைந்துள்ளன.

இங்ஙனமே திருத்தில்லை, உயரிய கூத்தொன்றினுல் உள்ளத்தைக் கவர்வதாகலின், அது, கண் முதலிய புறக்கருவிகள் பிற பொருள்களிற் செல்லாதவாறு தடுத்து, இறைவன் திருவடியினையே நோக்கச் செய்தல் வெளிப்படை. ஆகவே, அத்தலம், கருவிகரணங்களாகிய பாசக் கூட்டங்களைப்பற்றி நின்று, அவைகளையே 'நான்' எனவும், 'என்னுடையன' எனவும் மயங்கி நிற்கும் ஏக தேச உணர்வாகிய பாசஞானத்தை அறுத்துப் பதிஞானத்தைத் தருவதாகும். அது பற்றி அத்தலம் 'காண முத்திதரும் தலம்' எனப்படுவதாயிற்று. தில்லையை வணங்குங் காலத்து, கருவி கரணங்கள் அருள் வழிப்பட்டு நின்றமை நாயன்மாரது அனுபவங்களில் வெளிப்படை. எனவே, திருவண்ணுமலை, சிறப்புடைய தலங்கள் சிலவற்றுள் ஒன்ருய் நிற்கின்றது. அதற்கேற்ப நாயனுரும் அங்கு ஆராக் காதலுடன் பல நாட்கள் எழுந்தருளியிருந்து தம் பணிகள் பலவற்றையும் செய்தருளுவாராயினுர்.

திருப்பரங்குன்றம்: 8—11—1961 முதல் மதுரைத் தமிழ்ச்சங்கத் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. அன்பு கருணையானந்தா அவர்களால் நடத்தப் பெற்றுவந்த கந்தபுராணப் படனநிறைவு விழா 10—10—62ல் தமிழவேள் திரு. பி. டி. இராஜன், பார்-அட்-லா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மதுரை அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் திரு; ஏ. சர்க்கரை சேர்வை, பி. ஏ., பி. எல்., அவர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள்.

பூவாளுர்: திருமங்கலம் வாரவழிபாட்டுக் கூட்டத்தினர் 13—9—62 காலை பூவாளுரிலிருந்து புறப்பட்டுப் பாத யாத்திரையாக திருக்கானூர், திருக்காட்டுப்பள்ளி, விஷ்ணம் பேட்டை, கோயிலடி, அன்பிலாலந்துறை முதலிய தலங்களை வழிபட்டார்கள். 21—9—62 புறப்பட்டு ஊற்றத்தூர், சிறுகானூர், திருப்பிடவூர் முதலிய தலங்களையும் வழிபட்டார்கள்.

திருக்குடந்தை: ஸ்ரீ ஆராவமுதன் சன்னிதி ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகன் மகோற்சவம் 8—10—62 முதல் 17—10—62 வரை நடைபெற்றது.

தென்காசி: உலகம்மன் உடன்கூடிய ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயிலில் திருக்கலியாணத் திருவிழா 15—10—62 முதல் 25—10—62 வரை நடைபெற்றது.

சென்னை—கோடம்பாக்கம்: வடபழனி ஆண்டவர் கோயிலில் மகா கந்தர் சஷ்டி விழா 28—10—62 முதல் 7—11—62 வரை நடைபெற்றது.

கட்டங்குடி: ஸ்ரீஓம் தத் சத் சிவானந்த சுவாமிகளின் ஆறுவது ஆண்டுக் குருபூஜை விழா 13—10—62 முதல் 14—10—62 வரை நடைபெற்றது.

காஞ்சிபுரம்: குமரகோட்டத்தில் 5—11—62 முதல் ஓர் ஆண்டு காலம் ஒவ்வொரு திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 6 மணிமுதல் 8 மணிவரை காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களால் கந்தபுராணப்படனம் நடத்தப்பெறும்.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

[திரு. K. பட்சிராஜன். B.A., B.L., திருநெல்வேலி]

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அதுபிடித்திருந்த அரசகுமாரி அவளிடமிருந்த பேய்க்களை மாறித் தன் பருவத்துக்குரிய அடக்கம், நாணத்துடன் இளையாழ்வார் திருவடிகளிலே தெண்டனிட்டு அவர் ஆசிபெற்று உள் சென்றாள்.

ஒரே வியப்பில் மூழ்கியிருந்த யாதவப்பிரகாசர் தம் சீடரை நோக்கி "இளையாழ்வீர் உண்மையிலே நீர் ஒரு ஸர்வக்ஞர்" என்று போற்றி அவருடனே தம்மிடத்திற்கு எழுந்தருளினர். நடந்தவற்றையெல்லாம் கண்ட அரசன் இளையாழ்வாருக்குப் பலவிதமான ஸன்மானங்களை அனுப்புவிக்க, இளையாழ்வாரும் அவையனைத்தும் தம் குருவிற்கே உரியது என்று கூறி அவருக்கு அனுப்பிவிட்டார்.

சென்ற சில மாதங்களாக ஸ்ரீ இளையாழ்வாரின் வரலாற்றின் ஒரு பகுதியை அநுபவித்தோம். இவ்வரலாறு இதற்குமுன் நாம் அநுபவித்துவந்த ஸ்ரீ ஆளவந்தார் வைபவத்தின் இடையே புகுந்ததொன்று. எனவே இப்போது மீண்டும் ஆளவந்தார் வைபவத்தைப் பின்பற்றுவோம்.

கோயிலிலே ஸ்ரீ ஆளவந்தார் பெருமாளுக்கு அந்தரங்கராய், திவ்யப்பிரபந்த ஸேவைகளையும் காலக்ஷேபங்களையும் செவ்வனே நடத்தி ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீயை (வைணவத் திருவை) புகழ்பெறச் செய்துகொண்டிருந்தார். ஸ்ரீ மணக்கால்நம்பிகள் ஆளவந்தாரிடம் பவிஷ்யத்ராமாநுஜ விக்ரகத்தைக் கொடுத்தருளினர் என்பதை முன்பே கண்டோம். அந்த விக்கிரகம் திருக்குருகையிலே எப்படி ஸ்ரீ சடகோபரால் ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு அருளப்பட்டதென்பதையும் அவ்விக்கிரகம் 'கலியும் கெடும் கண்டு கொண்மின்' என்று ஸ்ரீ சடகோபர் தம் திருவாய்மொழியில் அருளிச்செய்ததை மெய்ப்பிக்கும் என்று அவரே ஸ்ரீமந் நாதமுனிகளுக்கருளியதையும் ஸ்ரீமந்நாதமுனிகள் வைபவத்திலே பார்த்ததை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். நாதமுனிகள் அவ்வாச்சர்யமான விக்கிரகத்தைத் தாம் அந்திமதசை அடையும் காலத்தே ஸ்ரீ உய்யக்கொண்டாரிடம் ஒப்படைத்து, இவ்விக்கிரகத்துக்கு லக்ஷ்ய புருஷராக அவதரிக்கப்போகிறவர் நம்முடைய பேரனார்தான். ஆகையால் இதனைப் பாதுகாத்து அவரிடம் இதைச் சேர்ப்பிக்கவேண்டும் என்றருளிப் போனதையும், ஸ்ரீஉய்யக்கொண்டாரும் தம் முடிவுநாளில் மணக்கால் நம்பியிடம் அவ்விக்கிரகத்தை ஒப்படைத்துப் போனதையும் முன்பே கண்டோம்.

ஸ்ரீ ஆளவந்தார் அவ்விக்கிரகத்தை நாள்தோறும் ஆராதித்து வந்தார். ஒருநாள் என்றும்போல் அதனை ஆராதிக்கையில் அவர் உள்ளத்தே என்றுமில்லாத நெகிழ்வு தோன்றியது. ஆளவந்தார் திருவுள்ளம் 'இன்று ஏதோ என்மனம் இத்திருவாராதன வேளையிலே நீராய் உருகுகின்றது. இதற்கு என்ன காரணம்? இந்தத் திவ்யமங்கள விக்கிரகத்துக்குரிய மகாபுருஷன் என் வாழ்நாளில் அவதரிப்பார் என்றல்லவா என் பிதாமகர் கூறியருளியதாக ஸ்ரீமணக்கால் நம்பிகள் ஸாதித்தார். ஒருவேளை அவ்விஷயமாக ஏதேனும் செய்தி வருங்காலம் அணுகியிருக்குமோ? அப்புருஷன் இதற்குள் அவதரித்திருக்க வேணுமே! சரி! பார்ப்போம். பெரிய சங்கல்பம் என்னவோ? என்று எண்ணமிட்டார். வழக்கத்துக்கும் மிகுதியாக அன்று சிறப்புடன் திருவாராதன கைங்கர்யத்தைச் செய்தார். அவர் செய்துமுடிக்கும் வேளையிலே, காஞ்சீபுரத்தினின்றும் ஸ்ரீரங்கநாதனை ஸேவிக்கவந்த இரண்டு ஸ்ரீவைஷ்ணவர்கள், பெரியபெருமாளைச் சேவித்துப் பெருமாள் பிரசாதமாகிய திருத்துழாயும் கையுமாக ஸ்ரீ ஆளவந்தார் திருமுன்பே வந்து அவரைத் திருவடி தொழுதார்கள். ஆளவந்தார் அவர்களை உபசரித்து வரவேற்று நலம் வினவி அவர்கள் பேரருளாளன் ஸன்னிதியினின்று வந்தவர் என்று அறிந்தவாறே அங்

குள்ள விசேஷங்கள் என்னவென்று விசாரித்தார். வந்தவர்கள் எல்லா விஷயமும் தெரிவிக்கையில் ஸ்ரீ இளையாழ்வாரைப்பற்றியும், யாதவப்பிரகாசருக்கும் அவருக்கும் இடையே நிகழ்ந்தவற்றையும் எல்லாம் சுருக்கமாகக் கூற இளையாழ்வார் அந்நிகழ்ச்சிகளைப் பரக்கக் கூறும்படி வேண்டினர். அவர்களும் 'ஸத்யம் ஞானம் அனந்தம் பிரமம்' என்ற சுருதிவர யாதவப்பிரகாசர் அதற்குக் குணநீக்கமாகப் பொருளுரைத்தமையும், ஸ்ரீ இளையாழ்வார் இடைமறித்து அதற்கு அவ்வர்த்தம் சேராதென்றும் குணயோகம் (குணச்சேர்த்தி) கூறுவதே பொருத்தமென்று காட்டியமையும், பதில் உரைக்க முடியாதே யாதவப்பிரகாசர் உறுமிச் சென்றமையும்; பின் மற்றொருநாள் யாதவப்பிரகாசருக்கு இளையாழ்வார் எண்ணெய் தேய்க்கையில் யாதவர் "கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ" என்ற வாக்கியத்துக்குப்பரம்பொருளின் திருக்கண்களுக்குக் குரங்கின் ஆதனத்தை உவமையாக்கி இழிபொருள் கூற அது பொருத இளையாழ்வார் கண்கள் நீர்மல்க அவற்றின் துளிகள் யாதவரின் துடைகளைச் சுடப் பின் கோபத்தோடு யாதவர் கேட்டதற்கு இளையாழ்வார் ஆதவனைக்கண்டு அப்போதலர்ந்த அம்புயம் போன்ற கண்கள் என்று செவிக்கினிய பொருள்கூறியமையும்; மேலும் அரசன் மகளைப்பற்றிய பிரமரக்ஷஸை யாதவனைப் பழித்துரைத்து இளையாழ்வாரைக் கொணரச்செய்து அவர் திருவடி தலைமேல் ஏற்றுத் தன் பேய்த்தன்மை மாறியதையும் ஒன்றொழியாமல் விரித்துரைக்கக் கேட்ட ஆளவந்தார் திருமேனி தன்னையறியாமலே மயிர்க்கூச்செறிந்தது. அன்று திருவாராதனத்தின்போது ஏற்பட்ட மனநெகிழ்ச்சியும், மனத்தில் தோன்றிய சிந்தனைகளும், திருவாராதனம் முடியவும் ஸ்ரீ வைஷ்ணவர் துழாயும் கையுமாய் வந்து கூறிய செய்திகளும் இளையாழ்வார் திருவுள்ளத்தே மீண்டும் மீண்டும் நடையாடவே அவர் இது வெறும் தற்செயலல்ல. அந்த இளையாழ்வார்தான் நாம் ஆராதித்து வரும் விக்கிரகத்தின் லக்ஷ்ய புருஷனாயிருக்கவேண்டும் என்று எண்ணமிட்டார். வந்த ஸ்ரீவைஷ்ணவர்களையும் தன்னடிபணியும் முதலிகளையும் நோக்கி அஞ்ஞானிகளும் விபரீத ஞானிகளும் மலிந்து ஓங்கிவளரும் இத்தேசத்தே இக்காலத்தே இத்தகைய மஹாபுருஷர் ஒருவர் அவதரித்திருக்கை இந்தளத்திலே தாமரை பூக்கக் கண்டது போன்றதல்லவா! அந்த மகாபுருஷனை நேரே போய்ப் பார்க்கவேண்டும் என்று என் உள்ளம் பாரிக்கிறது. இந்த நல்ல காரியத்திற்கு நாள் பார்க்கவேண்டியதில்லை. இப்பொழுதே பெரியபெருமாளிடம் விண்ணப்பித்துவிட்டுப் புறப்படுவோம் என்று அருளி அவர்களோடு உடனே நம்பெருமாள் சன்னதிக்கு எழுந்தருளினர். பெருமாளை நன்கு சேவித்து அவர் திருமுன்பே கைகூப்பி நின்று "தேவரீர் உலகநலத்தின் பொருட்டு அவதரிப்பித்ததாகத் தோன்றும் மகாபுருஷனை நேரேகாணப் பேரருளாளன் சன்னிதிக்கு விடைகொள்கிறேன்; அனுமதி அருளவேண்டும் என்று வேண்டிநின்றார். அருச்சகர் தீர்த்தமும் திருத்துழாயும் கொண்டுவந்து சாதிக்க (கொடுக்க) ஆளவந்தாரும் தம் முதலிகளுடன் அன்றே காஞ்சியை நோக்கிப் புறப்பட்டார். வழியிலே திருக்கோவலூரில் தங்கிப் பரமனை மொழி விளக்கேற்றி நேரே கண்டு தொழுத முதலாழ்வார்மூவரையும், கோயிலிலே எழுந்தருளியிருக்கும் ஆயனாரையும் திருவடிதொழுது அங்கிருந்து பயணமாய்க் காஞ்சியை அடைந்தார்.

ஆளவந்தார் காஞ்சிக்கு எழுந்தருளுகிற செய்திகேட்டு அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களும் வரந்தரும் பெருமாளரையரும், ஸ்ரீ சடகோபன், தீர்த்தப்பிரசாதம் இவைகளோடு பெருந்திரளாகச் சென்று அவரை எதிர்கொண்டனர். ஆளவந்தாரும் பேரருளாளன் திருவருள் பாலித்ததை எண்ணி மகிழ்ந்து கீழேவிழுந்து தண்டனிட்டு அப்பிரசாதங்களைப் பெற்றுக்கொண்டார். அப்போது இச்செய்தி கேட்டு ஓடோடியும் அங்கு வந்து சேர்ந்த திருக்கச்சிநம்பிகள் ஆளவந்தார் திருவடிகளிலே விழுந்து தண்டனிட ஆளவந்தார் மிக மகிழ்ச்சியுடனே அவரை வாரியெடுத்துத் தம்முடைய திருக்கண்களால் குளிரநோக்கி ஸ்ரீ கஜேந்திரதாசரே! (திருக்கச்சிநம்பிகளின் மற்றொரு பெயர்) பேரருளாளனுக்கு அந்தரங்க திருவாலவட்ட கைங்கர்யம் குறைவின்றி நடந்து வருகிறதா? என்று புன்சிரிப்போடு வினவினர். திருக்கச்சிநம்பியும் தன் வாய்புதைத்து "தேவரீருடைய திருவருளால் பேரருளாளன் அடியேனையும் மதித்து அக் கைங்கர்யம் கொண்டருளுகிறான்" என்று விண்ணப்பித்தார். பின்பு அனைவரும் "உலகேத்தும் ஆழியான்

அத்தியூரான்" சன்னிதிக்குச் சென்று பேரருளாளனையும், பெருந்தேவித் தாயாரையும் சேவித்துச் சன்னிதியை வலமாகவந்து அங்கே வடமேற்கு திசையில் இருக்கிற திருப்புற்றின் சமீபம்சென்று அங்கே எழுந்தருளியிருக்கும் திருவனந்தாழ்வானையும் சேவித்து வந்துகொண்டிருந்தவர் அங்கு கிழக்கே உள்ள கரியமாணிக்கத்தாழ்வாரை ஆளவந்தாரும் அவர் கோஷ்டியும் சேவித்து அங்கேயே எழுந்தருளியிருந்தார். அப்போது யாதவப்பிரகாசர் தம் சிடருடன் வந்து பெருமாளைச் சேவித்துச் சன்னிதியை வலம் வந்து கொண்டிருக்க ஆளவந்தார் திருக்கச்சி நம்பிகளை நோக்கி "இந்த கோஷ்டியில் இளையாழ்வார் யார்?" என்று மெல்ல வினவினர். நம்பிகளும் அந்தக் கூட்டத்திலே ஒருவரைச் சுட்டி "சுவாமி! சிவந்து, நெடிய வலியவராய் முழந்தாள் அளவும் நீண்ட கைகளை உடையவராய் பழுத்த திருப்பரியட்டமும் சாத்திக் கொண்டவராய், அகன்ற திருமார்பும், தசைந்த திருக்கழுத்தும், சிவந்த திருஅதரமும், சந்திரமண்டலம் போன்ற திருமுகமும், சந்திரகிரணம்போலே திருமுத்தின் ஒளியும், திருமுடிச்சிலையும் செவி மறையச் சாத்திக் கொண்டு அந்த கோஷ்டிக்கே நடுநாயகமாய் வருகின்றுரே அவர்தான்" என்று விண்ணப்பித்தார்.

ஆளவந்தார் இளையாழ்வாரைத் தமது இனிய, ஒளிபொருந்திய கம்பீரமான திருக்கண்களாலே குளிர நெடிது நோக்கி இளையாழ்வார் திருமேனி அங்கங்கள் எல்லாம் தம் ஆராதனத்தில் இருக்கிற "பவிஷ்யதாசார்ய" விக்கிரகத்தோடு ஒத்திருக்கக் கண்டு மிகவும் உளமகிழ்ந்து "ஆமுதல்வன் இவன்" என்று தம் திருவுள்ளத்தே நிச்சயித்துத் தமது மனதுக்குள்ளேயே "உபய கைங்கர்ய நிர்வாஹக ராகவேணும்" என்று ஆசீர்வதித்தார். இளையாழ்வாரை நேரே கண்டு அளவளாவ வசதியின்மையின் நேரே அருளாளப்பெருமாள் எம்பெருமானுர் ஸன்னிதிக்கு எழுந்தருளினர். அங்கே பெருமாளைச் சேவித்துக் கூப்பிய கையராய் நின்று "தேவரீர் வரதராஜராகையாலே "தாம்வேண்டும் காமமே காட்டும் கடிது" என்றபடி வேண்டுவார் வேண்டுவனவற்றை அருள்வதே தேவரீர் ஸ்வரூபம். அடியேனுக்கு, கேட்கைக் குறுப்பான காதும், நடக்கைக் குறுப்பானபாதமும், பேச்சுக்குறுப்பான வாக்கும், நோக்குக்குறுப்பான கண்ணும், நரகத்தினின்றும் காப்பானும், அன்புக்குறுப்பான மகனும் ஆக எல்லாம் இந்த இளையாழ்வானே ஆகும்படி வரம் தந்தருள வேண்டும் என்று தலைவணக்கி இரந்து, இந்த ஸ்ரீவைஷ்ணவ தர்சனத்தை இவனே நின்று நடத்தும்படி தேவரீர் கடைக்கணித்து அருளவேண்டும் என்று பெருமாள் திருவடிகளிலே சரண்புகுந்தார். அப்பால் பெருமாள் பிரசாதம்பெற்றுத் திருக்கச்சிநம்பிகளை எப்போதும் அங்குக் கைங்கர்யம் செய்து வரும்படி அருளிச்செய்து தம் முதலிகளும் தானுமாய் திருவரங்கம் நோக்கி எழுந்தருளினர்.

சில நாள் சென்றது. ஸ்ரீ யமுனைத் துறைவர் கோயிலிலே திருவாய் மொழிக்கு வியாக்கியானம் அருளிச்செய்து கொண்டிருக்கையில், தற்செயலாக "இலிங்கத்திட்ட புராணத்திரும்" என்ற பாசுரம் வந்தது. பாசுரத்தை அநுசந்தித்த உடனே அவர் திருவுள்ளத்திலே பல சிந்தனைகள் உருவாயின. ஆழ்வார் நால்வரைச் சுட்டி இப் பாசுரத்தை அருளினர். பெருமாள் கிருபையால் அவற்றில் இரண்டின் (சமணமும், சாக்கியமும்) அட்டகாசம் ஒருவாறு ஓய்ந்தது. ஆனல் மற்றைய இரண்டின் ஆரவாரம் தீரவில்லை. அதற்குப் பதில் ஓய்ந்த இரண்டின் வேகமும் இவற்றோடு சேர்ந்து கொண்டது. இவற்றை எதிர்நின்று தாங்கி நமக்குப்பின் இந்த நம் தர்சனத்தை நடத்த வல்லார் வேண்டுமே!... ஆம்! இளையாழ்வார் இருக்கிருர். ஆனல் அவர் இன்னும் வலிந்து வாதுசெய்யும் அந்த யாதவப்பிரகாசன் கோஷ்டியோடல்லவோ இருக்கிருர் என்று எண்ணமிட்டவராய்த் தம் முதலிகளைப் பார்த்து இப்போது இயல்பாகவே நம் தர்சனத்தில் ஊற்றம் கொண்ட இளையாழ்வாரை யாதவப்பிரகாசனுடன் உறவறுத்துக் கொள்ளும்படி செய்ய ஏதேனும் விரகுண்டோ?" என்று அருளினர். கேட்ட முதலிகள் என்ன கூறுவது என்று வாளா இருக்க, ஆளவந்தார் பேரருளாளனை மனதிலே தியானித்துத் "தேவரீரிடத்திலே காஞ்சியிலே சரணுகதி பண்ணி விண்ணப்பித்துக் கொண்ட பிரார்த்தனையைத் தேவரீர்தான் நிறைவேற்றியருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்.

அவர் பிரார்த்தனை வீண் போகுமா? அடியாரில் தலை சிறந்த ஒருவர் இப்படி மனம் நொந்து ஏங்கவிடுவரா எம்பெருமான்? ஆளவந்தார் திருவுள்ளத்தே மேற் சொன்ன எண்ணம் நிகழ்ந்தபொழுதே அங்குக் காஞ்சிபுரத்திலும் யாதவப்பிரகாசர் கோஷ்டியிலேயும் ஒன்று நிகழ்ந்தது. யாதவப் பிரகாசர் தம் சீடர்களுக்கு "ஸர்வம் கலு இதம் ப்ரும்ம" என்ற சாந்தோக்கிய உபநிஷத் வாக்கியத்தையும், "நேஹ நாநாஸ்தி கிஞ்சன" என்ற கடோபநிஷத் வாக்கியத்தையும் விரிவாக விளக்கி, அவ்வாக்கியங்களுக்கு அத்வைத பரமாக உரை கூறினார். இளையாழ்வார் அப்பொருளை ஒப்பாது அவ்விரண்டு வாக்கியங்களுக்கும் விசிஷ்டாத்வைத பரமாகப் பொருள்கூறி, இப்படிக்கூறினால்தான் உபநிஷத்துக்களில் வரும் எல்லா வாக்கியங்களுக்கும் இணைந்த பொருள் கிட்டும். இன்றேல் அநேக சுருதி வாக்கியங்களைப் பொருளற்றவை என விலக்க நேரிடும் என்று தக்க சான்றுகளோடு விரிவாக எடுத்துரைத்தார். யாதவப் பிரகாசன் முகம் குபீரெனச் சிவந்தது. உடல் படபடக்க, உதடுகள் துடிக்க அவர் இளையாழ்வாரை நோக்கி யாம் கூறும் பொருளே சரியென ஒப்பினால் எம்மிடத்திலே இரும். இன்றேல் உமக்குத் தகுந்த வேறிடம் பார்த்துப் போய்ப் படித்துக் கொள்ளும் என்று கோபத்தோடு கூச்சலிட்டார். இளையாழ்வாரும் புன்சிரிப்புடன் இந்நாளைத்தான் அடியேன் எதிர்நோக்கியிருந்தேன். தேவரீருடைய அர்த்தங்களுக்குக் கோபம்தான் பக்கபலம் என்று தெரிகிறது. தேவரீர் இதுவரை அடியேனுக்குக் கற்பித்தவற்றுக்கெல்லாம் அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூறி, அவரை வணங்கி மன நிம்மதியுடன் வெளியேறினார். தம் திருமாளிகை சேர்ந்ததும் தமது அன்னையாரிடம் நிகழ்ந்தவற்றையெல்லாம் அப்படியே ஒப்பித்தார். அவ்வம்மையாரும் "அப்பா முன்னமேதான் நீ எல்லாம் கற்றுகிவிட்டதே. மேலும் என்ன கற்கலாம் என்று அந்த யாதவப் பிரகாசனிடம் சென்றாய். பேசாமல் தேவப்பெருமாளைப் போய்சேவித்துச் அவருடைய அந்தரங்க அடியாராகிய நம் திருக்கச்சி நம்பிகளை அண்டி அவர் அருளிச்செய்கிறபடி செய்துகொண்டிரு" என்று ஆசீர்வதித்தார். இளையாழ்வார் திருத்தாயார் சொல்லைத் தலைமேற்கொண்டு தேவப்பெருமாளைச் சேவித்துத் திருக்கச்சி நம்பிகளையும் தண்டனிட்டு "அடியேனைப் பெருமாள் முகப்பே ஏவிப் பணிகொள்ள வேணும்" என்று வேண்டினார். நம்பிகளும் பெருமாளுக்கு உகப்பான கைங்கர்யம் வேறு என்ன? முன்போலவே சாலைக்கிணற்றிலிருந்து தினமும் திருமஞ்சனதீர்த்தம் கொணர்ந்து பெருமாளுக்குச் சமர்ப்பித்துக் கொண்டிரும் என்று நியமித்தார். இளையாழ்வாரும் அதனை ஏற்று முன்போல் அக்கைங்கர்யத்தைச் செய்துகொண்டிருந்தார்.

இப்பால் திருவரங்கத்திலே ஸ்ரீ ஆளவந்தார் திருமேனியிலே நோவு சாத்திக்கொண்டு (நோய்வாய்ப்பட்டு) எழுந்தருளியிருந்தார். அடியார்கள் அனைவரும் மிக மனம் வருந்தினார்கள். நோயின் கடுமை காரணமாக ஆளவந்தாருக்கு ஏதேனும் நேர்ந்துவிடுமோ என்று அஞ்சினார்கள். ஆளவந்தாரிடம் அர்த்த விசேஷங்களையெல்லாம் கேட்டுச் சுவைத்தவர்களானதால் அவர் உடல் நிலை தளரும் முன்னே இயன்றவரை உயிர்க்கு உறுதியளிக்கும் நன்மொழிகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்று அவர் சீடர்களில் முதல்வர்களான திருக்கோட்டியூர் நம்பியும், பெரிய நம்பியும் திருவரங்கப் பெருமாளரையரைப் புருஷகாரமாக்கிக்கொண்டு (முன்னிட்டுக்கொண்டு) ஸ்ரீ ஆளவந்தார் திருவடிகளை வணங்கி "அடியேங்களுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தை அருளிச் செய்ய வேணும்" என்று வேண்டினர். யமுனைத்துறைவரும் அவர்களது ஆர்வத்திற்கு உகந்து, அங்குக் குழுமியிருந்த முதலிகள் மூவரையும் நோக்கி "உங்களுக்குத் தஞ்சாக

திருவிடைமருதூர்: மகாலிங்கசுவாமி கோயிலில் ஐந்தாவது ஆண்டு பன்னிரு திருமுறைப் பாராயணத் தொடக்கவிழா 1—10—62-ல் ஆரம்பிக்கப்பெற்றது. 25—1—63 வரை நாடோறும் காலை மாலை இருவேளைகளிலும் 6-30 மணி முதல் தேவஸ்தான சமயப் பிரசார மண்டபத்தில் நடைபெற்றது.

திருவகீந்திரபுரம்: ஸ்ரீமந் நிகமாந்த மகாதேசிகசுவாமி பிரம்மோற்சவம் 30—9—62 முதல் 10—10—62 வரை நடைபெற்றது.

இருப்பதைக் கூறுகிறேன். கோயிலாழ்வாரே (பெரிய பெருமாள் பள்ளிகொண்ட கர்ப்ப கிருஹம்) உங்களுக்கு உயிர்நிலையும், தஞ்சமும் என்று அறிந்துகொள்ளுங்கள். பெரிய பெருமாள் திருவடிகளின் கீழே யாழுங் கையுமாய்ச் சேவித்து நிற்கும் திருப்பாணாழ்வாருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை (திருவுருவத்தை) அடி முதல் முடிவரை சேவித்துக் கொண்டு வாருங்கள்'' என்று கூறி அதற்குச் சான்றாகத் திருவேங்கட முடையானுடைய உயிர்நிலையை அறிந்து நடக்கும் குறும்பறுத்த நம்பியையும், பேரருளாளப் பெருமானின் உயிர்நிலையை அறிந்து ஒழுகும் திருக்கச்சி நம்பியையும், பெரிய பெருமாளுடைய உயிர்நிலையை அறிந்துள்ள திருப்பாணாழ்வாரையும், திருப்பாணாழ்வார் உயிர்நிலைதெரிந்து செயல்படும் திருவரங்கப் பெருமாளரையரையும் சுட்டிக்காட்டினார். பின்பு ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையரைப் பார்த்துப் பெரியபெருமாள் உயிர்நிலையறிந்து சேவித்து நிற்கிற திருப்பாணாழ்வாரின் திவ்யமங்கள விக்ரஹமே அடியேனுக்கும் உபாய உபேயம் (நெறியும், பயனும்) என்று நான் அறிந்து அப்படியே ஒழுகிவருகிறேன்'' என்று கூறினார்.

(தொடரும்)

பொள்ளாச்சி முருகன் சந்தனக்காப்பு

திருவருட்பயன்

திரு. பூ. சமரபுரி முதலியார், தாம்பரம்.

ஆறும் அதிகாரம்—அறியும் நெறி

அருள் உருவாகிய ஞானசாரியனிடத்து உண்மைப் பொருளை உணரும் முறைமை.

பிறவிகள் தோறும் வளர்ந்து வரும் நல்வினை தீவினைகள் இரண்டும் பிறவிக்குக் காரணமானபடியால் விலக்கப்படவேண்டிய தன்மையில் ஒத்த தன்மையுடையனவே என்று அறிந்து அவற்றின் பயனில் விருப்பு வெறுப்பு இன்றிச் சமபுத்தி உண்டாக, அதனால் மல சத்தி தேய, இப்பக்குவம் அறிந்த சிவம் திருவருளினாலே குருவடிவம் கொண்டு வந்து உயிருக்குச் சத்தியைப் பதிவிக்கும்.

கடவுள் ஒருவரே, ஆன்மாக்கள் அளவில்லாதன, ஆணவம், கன்மம், சுத்தமாயை, அசுத்தமாயை, ஆகமலங்கள் நான்கு, இந்த ஆறு பொருள்களும் அநாதியே உள்ளன, நித்தியப் பொருள்கள்.

கன்மங்களைச் செய்கிற ஆன்மாவும், அது செய்யும் புண்ணிய பாவமும், அவற்றின் பயனாகிய இன்பத் துன்பங்களும் அவற்றை ஆன்மாவுக்குக் கூட்டி அனுபவிக்கச் செய்யும் இறைவனும் ஆகிய இந்த நான்கையும் பொருந்துபவன் ஆன்மா. இவைதான் மலத்தினின்றும் நீங்கி ஈடேறும் பொருட்டேயாம் என்று உணரவேண்டும். இப்பெரும் உண்மை முதற் சைவத்திற்கே உரியது என்பதைச் சேக்கிழார் பெருமான் ;—

"செய்வினையும் செய்வானும் அதன்பயனும் கொடுப்பானும்
மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக்கு இல்லை என
உய்வகையால் பொருள் சிவன் என்று அருளாலே உணர்ந்து அறிந்தார்"

என்று உணர்த்துகின்றார் (சாக்கிய நாயனார் புராணம் செய்: 5)

இரண்டாவது குறளில் உணர்த்தப்பட்ட ஆறு பொருள்களையும் காணலாம் :—

செய்வான் என்பதால் ஆன்மாவும், செய்வினை என்பதால் கருமமும், சேர்பயன் என்பதால் சுத்தமாயையும் அசுத்தமாயையும், சேர்ப்பவன் என்பதால் கடவுளும், உய்வான் என்பதால் ஆன்மாவை உய்ய வொட்டாது தடுக்கும் ஆணவமும் குறிக்கப் பெற்றன. இவற்றிற்குள்ள தொடர்பைக் குரு உணர்த்தச் சீடன் உண்மை உணர்ந்து துன்பத்தை விளைக்கும் ஆணவத்தினின்றும் நீங்க விரும்பிக் கடவுளைப் பற்றுவன்.

உடம்புடன் உயிர் கூடியில்லையாயின் உடம்பு இயங்க மாட்டாது; அஃதே போல் உயிருடன் கடவுள் வேறற இல்லையாயின், உயிர் யாதொன்றனையும் செய்ய இயலாது. ஆகையால் கடவுள் உயிருடன் வேறற நின்று அதை நடத்துகின்றான்.

சூரியன் தன் கிரணங்களால் பளிங்கோடு சேர்ந்த பல நிறங்களையும் காட்டும்; பளிங்கின் இயல்பான ஒளியையும் காட்டும்; தன்னுடைய பிரகாசத்தையும் காட்டும். அதுபோல், இறைவன் தன் திருவருளால் உயிரினது மலத்தைப் பக்குவப்படுத்தும் தொழிற்பாட்டையும், மலம் நீங்கிய பின்பு உயிரினது உண்மை நிலையை விளக்கும் சிற்சத்தியின் ஒளியையும் காட்டி, இவற்றைக் கடந்து நிற்பதான தன் சுயம் பிரகாசத்தையும் காட்டும்; எனின், சிவமானது ஆன்மாவின் பந்த நிலையையும் (உலகத்துடன் சார்ந்து நிற்கும் நிலையையும்) ஆன்மாவின் தற்சொரூப நிலையையும், தன் சொரூப நிலையையும் காட்டும்.

உலகப் பொருளைக் காண விழையும் ஆன்மாவுக்கும் பொருளுக்கும் நடுவே சரீரத்திலுள்ள புறக்கண் இன்றியமையாததாய் ஆன்மாவுக்குப் பொருளைக் காட்டுவதுபோல், மெய்ப்பொருளைக் காண விழையும் உயிருக்கும் மெய்ப்பொருளுக்கும் நடுவே திருவருளாகிய ஞானக்கண் இருந்து உயிருக்கு மெய்ப்பொருளைக் காட்டும். ஞானவொளி இல்லையாயின் உயிர் சிவத்தைக் காணுதல் கூடாது.

உலகத்தில் செல்லுகிற இந்திரியங்களின் செயல்களை ஆன்மா தன் செயல் என்று கருதுவதுபோல், ஆன்மா செய்யும் தொழிலெல்லாம் சிவசத்தியின் ஏவலால் நிகழ்கின்றன என்று உணர்ந்து சிவன் செயலேயாகும் என்று கருத வேண்டும். ஆன்மா ஏவ இந்திரியங்கள் தொழில் புரிகின்றன. சிவசத்தி ஏவ ஆன்மா தொழில் புரிகிறது.

இத்தகைய ஞானத்தைப் பெறவேண்டுமாயின், பலதலையாய ஆராய்ச்சி வேண்டா; உலகப்பொருளைக் குறித்து நினைப்பதுபோல் நினைக்க வேண்டா; அது வருமுன் அதைத் தெரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டா; அசைவற்றுச் **சும்மா இருப்பையாயின்** ஞானம் தானே வந்து உன்னைக் கூடி மெய்ப்பொருளைக் காணச் செய்யும், அப்போது நீ அதனைப் பார் என்று ஞானசாரியன் உணர்த்துகிறார்.

இப்படி நின்றால் பேரானந்தம் உண்டாகும். இதுவே உண்மை ஞானத்தின் பயன். அதன் பிரகாசத்தில் அல்லல் இன்றி அந்தமயமாய் இருக்கவேண்டும். ஞானம் எப்படி ஆன்மாவைக் கவர்ந்து கொண்டதோ, அப்படியே ஆன்மா அதன் வசப்பட்டு, அறியாமை வந்து தன்னைப் பற்றுவண்ணம் தன்னை ஒப்படைத்து நிற்கவேண்டும்.

ஏழாவது அதிகாரம்—உயிர் விளக்கம்

மேல் அதிகாரத்தில் கூறியவாறு ஆன்மா அறியும் நெறியில் அறிந்தபடி நின்று ஆணவமலம் நீங்கப்பெற்று, யான் என்னும் செருக்கு அற்றுத் தன் செயலற்றுத் திருவருள் வசப்பட்டு நின்றால், ஆன்மா தன் உண்மை நிலையை உணர்ந்து விளக்கமுறும் தன்மையை உணர்த்துவது இது ஆன்ம சுத்தி என்றும் சொல்லப்படும்.

சூரியன் உச்சியில் வந்தபோது அதன் தூய நிழல் முன்னேயோ பின்னேயோ விழாமல் உடம்பின் அடியில் தொகுத்து அடங்கிவிடும். அப்படிச் சூரியன் நிழல் நிறைந்திடுதற்குச் சூரியனுக்கு ஒருவரும் உபசார வார்த்தை சொல்ல வேண்டியதில்லை. சூரியன் தன் வேலையைச் செய்யும். அந்த முறைமை போல், திருவருள் ஆன்மாவுக்கு இருவினையொப்பு வந்த காலத்து நேர் நின்று ஆன்மாவைத் தன் வசமாக்கிக் கொள்ளும். ஆயினும், இதனை எல்லோரும் எப்போதும் அறிய முடியாது. அருளின் வெளிப்பாட்டை உயிர் பக்குவப்பட்ட காலத்தேதான் அறிய வல்லது.

பித்தம் மேலிட்ட காலத்து அதனால் சுவை மாறுபட்ட நாக்குக்கு இயற்கையாகவே இனிக்கும் பாலும் கசக்கும்; அந்தப் பித்தம் நீங்கிய காலத்துப் பித்தத்தினின்றும் மாறிய நல்ல நாக்குக்கு முன்னே கசந்த பால் இனிக்கும். அதுபோல, மலநோயால் துன்புறும் ஆன்மாவுக்குச் சிவபோகம் இன்பமாய்த் தோன்றாது; குருவருளால் மலம் நீங்கினால், முன்னே இன்பமாய்த் தோன்றாத சிவபோகம் இன்பமாய்த் தோன்றும்.

பால் எப்போதும் தித்திக்கும்; அதுபோல் சிவபோகம் எப்போதும் இன்பமாகவே இருக்கும்.

உவமை விளக்கம்

உபமேயம்	உபமானம்
மல நோய்	பித்தம்
சிவபோகம்	பால்
துன்பமாய்த் தோன்றும்	கசக்கும்
மல நீக்கம்	பித்த நீக்கம்
சிவ போகம்	பால்
இன்பமாய்த் தோன்றும்	இனிக்கும்

திருவருள் வெளிப்பட்ட காலத்தும் உயிர் அதைத் தானகக் காணாது. காணுந் தன்மையுடைய கண்களையுடைய ஒருவன் இருளிடத்தேயுள்ள ஒரு பொருளைச் சூரிய ஒளி காட்டவும் அதன் துணையாலே தான் கண்டு வைத்தும், அவன் சூரிய ஒளியின் துணையை மறந்து, தானே கண்டதாகச் சொன்னால், அது தனக்குத் தானே தேடிக் கொண்ட வீண் பாவம் அன்றோ? அப்பாவம் எப்போது அவனை விட்டுப்போம்? அதுபோல, சிற்றறிவுடைய உயிர் எப்பொருளையும் பேரறிவுடைய இறையருள் அறிவிக்க அறிவதாய் இருந்தும், அவ்வுண்மையை மறந்து, தன் அறிவாற்றல் கொண்டே அறிந்து விட்டதாக எண்ணுகிறதே! இது என்ன பாவம்!! உய்தி கூட முடியாதே!!!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்று ஆசிரியர் இரங்குகிறார்.

திருவருளும் ஆணவமும் காட்டும் தொழிலில் ஒரு தன்மையனவே. ஆயின் வேறுபாடு என்னெனில், ஒளியும் இருளும் குருடர்க்கு ஒரே தன்மையனவாகத் தோன்றல் போல், திருவருளைத் துணை கொள்ளாது, தங்கள் அறிவாற்றலையே பெரிதாக எண்ணி, ஞான நூல்களைக் கற்றும் அவற்றின் வழி அடங்காது, நான் என்னும் தற்போத முனைப்புடன் நிற்கும் அஞ்ஞானிகட்கு மாயா காரியமாகிய உலகமே தோன்றும், சிவப்பிரகாசம் தோன்றாது.

ஞான நூல்களைத் திருவருள் வழி நின்று கற்று, அவற்றின் வழியே அடங்கி நிற்கும் ஞானிகட்கு, உலகத்தோடு ஒன்றி இருந்தும் அது தோன்றாது, ஞானப்பிரகாசமே தோன்றும்.

"பரஞானத் தால்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்—
(சித்தியார்.)

இப்படித் திருவருள் வசப்பட்டிருப்போர்க்குக் கடவுள் வெளிப்பாடு எளிதாகும். நல்ல நண்பர்களைப் பெற்றவர்க்கு அவர்களுடைய பாரத்தை இறக்கி அவர்கள் சுமப்பார்கள்; அது போல் திருவருளைப் பெற்றவர்களுடைய நல்வினை தீவினை மூட்டைகளைக் கடவுள் ஏன்று கொண்டு, அவர்களுக்குத் தன் கருணையைக் காட்டித் தன்னைக் காட்டுவர்.

திருவருளைச் சாராது கடவுளை அடைய முயல்பவர்கள், ஒருவன் செல்வத்தை அவன் விழித்துக் கொண்டு அதன் பக்கத்திலேயே இருக்க, அவனை வஞ்சித்து அந்த நிதியைக் கவர்ந்து கொள்ளக் கருதுவதை ஒக்கும். அந்த நிதியைக் கவர்வது எப்படி முடியாதோ அதுபோல் திருவருளையின்றிக் கடவுளைப் பெறுதல் முடியாது.

சூரியன் உச்சியில் நிற்கும்போது சூரிய கிரணம் படிகத் தூணின் நிறத்தைத் தோன்றவொட்டாதுதான் கவர்ந்து கொள்வதுபோல், திருவருள்முன் ஆன்மாவின் அறிவு அதனால் கவர்ந்துகொள்ளப்படும். அந்நிலையில் மலம் நிற்காது. ஆகையால் இருளில் மறைந்து நிற்கும் பொருளைக் காண விரும்புவோன் விளக்கை முன்னிட்டுக் காண்பதுபோல், மெய்ப்பொருளைக் காண விரும்பும் உயிர் திருவருளை முன்னிட்டு, தான் அதன் பின்னின்று அதன் துணையால் காணவேண்டும். "அவனருளே கண்ணாகக் காணி னல்லால்," "நின் அருட் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே" என்பர் அப்பர் அடிகள்.

ஐம்புலனுக்கும் மனத்துக்கும் அப்பாற்பட்ட சிவப்பொருளை அவைகளின் துணை கொண்டு காண முடியாது. திருவருளின் துணையே துணையாவதன்றி ஐம்பொறிகளும் மனமும் துணையல்ல. அவைகளுக்குக் காணும் உரிமையும் காட்டும் உரிமையும் இல்லை. ஆகவே அவைகளைக் கொண்டு காணும் உரிமை ஆன்மாவுக்கும் இல்லை.

ஒரு பொருளைப் பெறுவதற்குத் தன் பப்படுகிற ஒருவனுக்கு ஒரு அருளாளன் கருணையால் கொடுத்தால் அவன் கருணையை மறந்து தன் வன்மையால் பெற்றதாகக் கருதலாமோ? ஆகாது. அதுபோல் திருவருள் தானாக விரும்பிப் பேரின்பத்தைக் கொடுக்க, உயிர் தன்னுடைய ஆற்றலால் பெற்றதாக நினைத்தல் ஆகாது.

எட்டாம் அதிகாரம்—இன்புறு நிலை

பேரின்பத்தை அடையும் முறைமை. இது ஆன்ம லாபம் ஆகும்; ஆன்ம சுத்தி; (உயிர் விளக்கம்) அடைந்த உயிர்பெறப்படுவது பேரின்பமே யாம். அதை அடையும் முறைமை கூறுகின்றது.

பேரின்பத்தைப் பெறுதற்கு ஆன்ம சுத்தி வேண்டுமோ எனின், வீடு அழகாகத் தோன்றுதற்கு வெள்ளை அடிக்கிறோம்; ஆனால் வெள்ளை அடிப்பதற்கு முன்னே சுவரை நன்றாகத் தேய்த்துச் சுத்தம் பண்ணிய பிறகு வெள்ளை அடித்தால், வெள்ளை நன்றாகப் படியும்; அழகாகவும் விளங்கும்; அப்படியின்றிச் சுவரைத் தூய்மை செய்யாது வெள்ளை அடித்தால் கருதிய பயன் விளையாது; அஃதேபோல் ஆன்ம சுத்தியின்றிப் பேரின்பத்தை அடைய முடியாது; செய்யும் முயற்சிகளும் வீணாகும்.

இன்பம் அடையும் நெறியாவது-இருட்டில் தோன்றாத ஒரு பொருளைக் கண்டு பெற வேண்டுமவன் விளக்கை முன்னிட்டு அதன் துணைகொண்டு பின்னேசென்றால் அப்பொருளைக் கண்டு அதை அடைவான்; அதுபோல் சிவஞானத்தை முன்னிட்டுக் கொண்டு செல்பவர் ஞேயத்தைப் பொருந்துவர், இம்முறை

யைக் கைவிட்டு விளக்கைப் பின்னிட்டுக் கொண்டு முன்னே சென்றால் அப்பொருளை அடைய மாட்டாதவாறு போல, சிவஞானத்தைப் பின்னிட்டுக் கொண்டு பேரின்பத்தைப் பெற முயல்பவன் பேரின்பத்தை அடைய மாட்டான், ஜனன மரண துன்பத்தில் அழுந்துவான். இதனால் தம்மை மறந்து திருவருளையே சிந்தித்திருக்கவேண்டு மென்பதும் அதனாலே இன்புறலாம் என்பதும் கூறப்பட்டன.

இன்புறுதற்குத் திருவருளே போதாதோ, அதற்கு மேலாகிய ஞேயப் பொருளும் (சிவம்) வேண்டுமோ! எனின், ஆளப்படும் தன்மையுள்ள இரண்டு பெண்கள் கூடின் இன்பம் இல்லை; ஆளுந்தன்மையுடைய ஆடவனும் ஆளப்படும் பெண்ணும் கூடினாலே இன்பம். அதுபோல ஆளப்படுவதாகிய ஆன்மா (பெண்) ஆளப்படுவதாகிய அருளோடு (சத்தி) சேரின் பேரின்பமாகிய பயனை அடைய முடியாது; ஆன்மா திருவருளைத் துணைகொண்டு ஞேயமாகிய சிவத்தைச் சேர்ந்து பேரின்பத்தை அடையவேண்டும். இங்குக் கூறிய உவமம் தலைமையும் அடிமைத்தன்மையும் பற்றி வந்தது.

உலக இன்பத்தை அநுபவிக்கின்ற முறையில் ஒருத்தனால் ஒருத்திக்கும் ஒருத்தி பால் ஒருத்தனுக்கும் இன்பம் உண்டாதல் போல், ஆன்மா சிவத்தைக் கூடுமிடத்துச் சிவத்தால் ஆன்மாவுக்கு இன்பம் உண்டு, அவ்வாறே ஆன்மாவால் சிவத்துக்கு இன்பம் உண்டோ எனின், அற்றன்று, சிவனுக்குப் பேரின்பமே வடிவாதலாலும், அவன் அநாதி மலமுத்தன் ஆகையாலும் அவனுக்கு ஒருவர் இன்பம் கொடுக்கவேண்டியதில்லை. அநாதியே மலபெத்தர்களாய், மல மறைப்பால் துன்பத்தில் கிடந்து உழலும் உயிர்களே இன்பத்தை அவாவி நிற்றலால் இறைவன் அவற்றிற்கே இன்பு அருளுவன்.

"சர்க்கரைதான் ஆர்க்கும்
தரும்இரதம் அவ்விரதம்
சர்க்கரைதான் கொள்ளுமோ
சாற்றுங்கால்— சர்க்கரைக்கின்று
இன்புருவம் அன்றி
எழிலுருவம் வேறுண்டோ
இன்புருவ மேஇறைக்கும் என்.''
(துகளறுபோதம் செய்யுள்-எக)

இனி, ஆன்மா சிவத்துக்கு அந்நியமாய் நின்று இன்பத்தை அநுபவிக்குமோ எனின், இல்லை; அநந்நியமாய் இருந்தே அநுபவிக்கும்.

தாள் தலை என்னும் இருசொற்கள் தம்மில் புணருங் காலத்து, ளகரமும் தகரமும் தோன்றாமல் டவ்வாய் நிற்பதுபோல் சிவத்தோடு ஆன்மா கலந்து நிற்கும்போது சிவமும் ஆன்மாவும் ஒன்றாகாமலும் இரண்டாகாமலும் **அத்துவிதமாய்** இருக்கும். அத்துவிதமாவது இரண்டு பொருள்கள் வேறறக் கலந்து ஒருபொருள்போல் நிற்றல்; பொருளால் வேறாயும் கலப்பால் ஒன்றாயும் இருப்பது. ஒரு பொருள் **போல்** நிற்பதைக் காட்டுதற்காகவே "ஏகம்'' என்னாது, "ஏகம் **என**'' என்றார். (4-ஆவது குறள்).

தாடலை என்னும் சொல் தாள் தலை என்று பிரிக்கப்படக் கூடியது; அதைப்போல் ஆன்மாவும் சிவமும் பிரிக்கப்படத் தக்கன அல்ல என்று விளக்கவே "வேறு நிகழா இன்பக் கூடல்'' (தற்போதம் ஜீவியாத விடத்துப் பிரிக்கப்படாது விளங்கும் பேரின்பக் கூட்டம்) என்றார்.

பேரின்ப நிலையினும் சிவம் ஆண்டானும் ஆன்மா அடிமையும் ஆதலினாலும், சிவத்தினுடைய பேரின்பமாகிய தாளை ஆன்மாவாகிய தலை சேருதலினாலும் வேறு சொற்களின் புணர்ச்சியை உவமானமாக எடுக்காது, தாள்தலை என்னும் சொற்களின் புணர்ச்சியை எடுத்தார். "தாடலை போலும் காறலை (கால்+தலை) போலும்'' என்பர் சிற்றம்பல நாடிகள் திருச்செந்தூர் அகவலில்.

பேரின்ப நுகர்ச்சியின் போதும் சிவன் ஆண்டானும் ஆன்மா அடிமையும் என்பதைச் "சிவமாக்கி எனையாண்ட'' என்னும் மணிமொழியால் அறியலாம்.

தாளிலே தலை சேருவதே முத்தி இன்பம் என்பதைத் "தருவாய் எனக்கு உன் திருவடிக்கீழ் ஓர்தலை மறைவே'' என்றார் அப்பர் அடிகள். (தனித் திருவிருத்தம் - செய்யுள் உ). "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்னும் தாண்டகமும் ஆருயிர்த் திருவிருத்தமும் காண்க.

முத்தியில் சிவமும் ஆன்மாவும் அத்துவிதமாய்த்தான் நிற்கவேண்டுமோ? ஒன்றாயே இருந்தால் என்? அன்றி இரண்டும் தனித்தனியாக இருந்தால் என்? எனின்,

ஏகமே என்றால் பெறுவானும் பேறும் இல்லை யாம்; வேறாக நிற்பின் சாயுச்சியம் இல்லை, பேரின்பம் உண்டாகாது; ஆகவே இரண் டும் வேறறக் கலந்தே இன்புறும்.

மேற்கூறிய வண்ணம் கலந்துள் ளவர்கள், கலத்தற்குரிய சாதனையைச் சாதிக் கிறவர்கள் "பிறப்பென்னும் பேதைமை நீங் கிச் சிறப்பென்னும் செம்பொருளா"கிய சிவத்தில் அழுந்தி நிற்பர். அவர்கள் மூவகை யினர் ஆவர் - பரமுத்தியை அடைந்தோர், சமாதிநிலையை அடைந்தோர், சமாதி நிலையை அடையாது கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் ஞானநிலைகளை அடைந்தோர், இவர்கள் பிறவிப்பிணி அற்றாரே ஆவர்.

உரையற்று நிற்கும் சமாதிநிலை கைகூடும் வரை, பேயால் பிடிக்கப்பட்டவன் தன்னறி வும் தொழிலும் இழந்து பேயின் அறிவும் தொழிலுமாய் நிற்றல்போலத் தன்னறிவும் தொழிலும் இன்றிச் சொல்லற்றுச் செய லற்றுத் திருவருளின்வழியே நிற்றல் வேண் டும். "அவனுடைய அறிவெல்லாம் நமை அறியும் அறிவென்றும்" என்றாற்போல் நிற்க வேண்டும். (கண்ணப்ப நாயனார் புராணம்). இதையே அருணகிரிநாதர் "சும்மாவிரு சொல்லற" என்றார்.

இத்தகையவர்களுக்கு — மெய்ஞ்ஞா னத்தை அடைந்தவர்களுக்கு முன் பயின்ற சரியை, கிரியை, யோகங்களால் உண்டாகும் பயன் பேரின்பமே ஆகும். இனி, அவர்கள் இச் சமயாசாரங்களைப் பயில வேண்டும் என் பது இன்றியமையாமை அல்ல. ஆனால், அவர்கள் 'நாம் ஞானம் பெற்றுவிட்டோம்; எமக்கு இனி சமயாசாரங்கள் வேண்டிய தில்லை" என்பார்களானால், அவர்கள் உண்மை ஞானிகள் அல்லர். இவ்வாறு அவர்கள் கூறு வது ஆணவ முனைப்பால் ஆகும். அவர்கள் சரியை முதலியவற்றை அநுட்டிக்கவும் தகுதி யற்றவர்கள். ஆனால், "உறங்கினோன் கை வெறும்பாக்குத் தானே நழுவுதல்போல்" சமயாசாரங்கள் தாமே நழுவுவதும் உண்டு.

மேற்கூறிய பேரின்பம் சொல்லுந் தரத்த தன்று; அநுபவப் பயனாக விளங்குவது சூரி யனைக் காண விழையும் ஒருவன், காண்பான், காட்சிப் பொருளாகிய சூரியன், காட்சியாகிய அறிவு, மூன்றும் நேராக நின்று உற்று நோக் கும்போது காண்கின்ற அவனும், காட்சியும், சூரியனும், வெவ்வேறாகத் தோன்றாது ஒன் றாய்த் தோன்றல் போல் காண்பானாகிய ஆன் மாவும் சிவம், காட்சிப் பொருளும் சிவம், காட்டும் ஞானமும் சிவம், இவ்வாறு அநு பவிக்கின்ற நிலையில் விகாரமில்லாத இன்ப அநுபவம் ஒன்றேயா யிருக்கும். "சொல் லொணாதது இந்த ஆநந்தமே" (கந்தரலங் காரம்-செய்யுள்-எ௩). இன்பங்கள் எல்லா வற்றுள்ளும் இனிது என்று சொல்லப்படு வது முத்தியின்பம் ஒன்றே. இதுவே பேரின் பம், நிலைத்த இன்பம், முழுத்த இன்பம். இது பேரன்பினால் பெறப்படுவது. இந்த அன் பிற்கு ஒப்பில்லை; அதனால் வரும் இன்பத்திற் கும் ஒப்பில்லை. இறைவன் இன்ப அன்பாக இருப்பவன், அவனை அன்பால் வழிபட்டு இன்பத்தில் அழுந்துகின்றவர்களும், ஒப்பில் அன்புருவம் உடையரே. குடுமித்தேவரைக் கண்டு அடைந்த மாத்திரத்தே கண்ணப்பர் "பொருவில் அன்புருவமானார்" என்கிறார் நம் தெய்வச் சேக்கிழார். அன்பினால் "உள் ளம் உருகில் உடனாவர்" என்பது திருவுந்தி யார் (செய்யுள் - எ).

(தொடரும்)

சோளிங்கபுரம்: இலட்சுமி நரசிம்மசுவாமி கோயில் உபயமாகக் கட்டவிருக்கும் கடைகளுக்குச் சோளிங்கபுரம் திரு. ஏ. எம். பொன்னுரங்கம், எம். எல். ஏ., அவர்கள் தலைமையில் அடித்தளக்கல் 22—10—62ல் நாட்டப்பெற்றது.

வடலூர்: திருவருட்பிரகாச வள்ளலாராகிய சிதம்பரம் இராமலிங்க அடிகளார் அவர்களின் 139-ஆவது ஆண்டு வெள்ளணி விழா 30—9—62-ல் நடைபெற்றது.

திருக்குற்றாலம்: திருக்குற்றாலநாதசுவாமி கோயிலில் ஐப்பசி விசுத் திருவிழா 7—10—62 முதல் 17—10—62 வரை நடைபெற்றது.

கரூர்; தான்தோன்றி கல்யாணவெங்கட்ரமணசுவாமி கோயில் பிரம்மோற்சவம் 28—9—62 முதல் 15—10—62 வரை நடைபெற்றது.

தஞ்சாவூர் இராச ராசேச்சரக் கல்வெட்டு வரலாறு

[வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

(முன்தொடர்ச்சி பக்கம் 21)

முதலாம் இராசராச சோழனது திருத்தமக்கையாரும் தேவிமார்களும், அரசியல் அலுவலாளர்களும் எழுந்தருளுவித்த திருமேனிகளும் பிரதிமங்களும் :—

இராசராச தேவர் திருத்தமக்கையார் வல்லவரையர் வந்தியத்தேவர் மகாதேவியார் ஆழ்வார் பராந்தகன்குந்தவையார் இத்திருக் கோயிலில் தம் தந்தையாராகிய பொன்மாளிகைத் துஞ்சிய தேவர், (இரண்டாம் பராந்தக தேவர்), தமது தாயாராகிய வானவன்மா தேவியார், தட்சிணமேரு விடங்கரின் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார், தஞ்சை விடங்கரின் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார் இவர்கள் திருமேனிகளையும்; இராசராச தேவர் தேவிமார்களில் ஒலோகமா தேவியார் பிச்சதேவரையும்; திரைலோக்கியமா தேவியார் கல்யாணசுந்தர தேவர், இவரது பிராட்டியார் இவர்களையும்; அபிமான வல்லியார் இலிங்க புராணதேவர், பிரமன், விஷ்ணு இவர்களையும்; சோழமா தேவியார் இடப வாகனதேவர் இவர்தம் பிராட்டியார் உமா பரமேஸ்வரியார் இவர்களையும்; பஞ்சவன்மா தேவியார் தஞ்சையழகர், இவர் பிராட்டியார் உமாபரமேஸ்வரியார், கணபதியார், பதஞ்சலியார் இவர்களையும் இலாடமாதேவியார் பாசுபதமூர்த்தியையும், பிருதுவிமா தேவியார் ஸ்ரீகண்டமூர்த்திகளையும்: இராச ராசதேவர் அரசியல் அலுவலாளர்களில், அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையான் உதைய திவாகரன் தில்லையாளியாரான இராசராச மூவேந்தவேளார் க்ராதார்ச்சுந தேவரையும்; இராசராச தேவர் பெருந்தரம் வேளான் ஆதித்தனை பராந்தகப் பல்லவரையர் உமா சகிதர் இவர்தம் பிராட்டியார், சுப்பிரமணிய தேவர், கணபதியார் இவர்களையும்; இராச ராச தேவர் பெருந்தரம் உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து நாரக்கண் ஸ்ரீகிருஷ்ணன் மும்மடிசோழ பிர்மாதிராயன் அர்த்த நாரீஸ்வரரையும்; இராசராச தேவர் சிறுதனத்துப் பெருந்தரம் கோவன் அண்ணாமலையான கேரளாந்தக விழுப்பரையன், பிருங்கீசர், சூரியதேவர் இவர்களையும்; ஸ்ரீ காரியம் செய்த பொய்கைநாடுகிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் திருஞானசம்பந்த அடிகள், திருநாவுக்கரைய தேவர், நம்பி ஆரூரனார், நங்கை பரவையார், முதலாம் இராசராச சோழர், இவரது தேவியார் ஒலோகமாதேவியார், "தத்தா நமரே என்ற மிலாடுடையார், (மெய்ப்பொருள் நாயனார்), சிறுத்தொண்ட நம்பி, திருவெண்காட்டுநங்கை, சீராளதேவர் இவர்கள் பிரதிமங்களையும், சந்திரசேகரதேவர், க்ஷேத்திர பாலதேவர் இவர்களின் திருமேனிகளையும்; ஈராயிரவன் பல்லவரையனை மும்மடி சோழபோசனை உத்தமசோழப் பல்லவரையன் சண்டேசுவர தேவரையும் எழுந்தருளுவித்துள்ளனர்.

கணேசர்

நிர்த்தனம் செய்யும் கணபதியார் இருவர், உட்கார்ந்திருக்கும் கணபதியார் மூவர், நிற்கும் நிலையிலிருக்கும் கணபதியார் இருவர், ஆக எழுவர் திருமேனிகளை முதலாம் இராசராசன் இக்கோயிலில் எழுந்தருளுவித்துள்ளான். இவர்களையன்றி ஆலயத்துப் பிள்ளையார், பரிவார ஆலயத்துப்பிள்ளையார், இவர்களைப் பற்றியும் குறிப்புக்கள் இருக்கின்றன. இவர்களுள் ஆலயத்துப்பிள்ளையார் இராசராசேச்சுரக் கோயிலிலும், பரிவார ஆலயத்துப்பிள்ளையார் பிராகாரத்தில் இருக்கும் பிள்ளையாரையும் குறிப்பதாகக் கொள்ளலாம். பிராகாரத்தில் இருக்கும் இப்பிள்ளையார் கோயிலைத் தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னராகிய சரபோஜிமகாராஜர் சகம் 1723-இல் பழுதுபார்த்ததோடு இக்கோயிலுக்கு அர்த்த மண்டபம், மகா மண்டபம் இவைகளையும் புதிதாகக் கட்டியுள்ளார். சகம் 1723 என்பது கி. பி. 1801 ஆகும். எனவே இம்மண்டபங்கள் கட்டப்பெற்று இற்றைக்கு 161 ஆண்டுகள் ஆகின்றன. இச்செய்திகளை இக்கணபதி கோயிலிலுள்ள படிக்கட்டுகளின் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

சுப்பிரமணியர் கோயில்

மேற்குறித்த சரபோஜி மகாராசர் சகம் 1723-இல் இக்கோயில் மகாமண்டபத்தின் முன்பக்கத்துள்ள படிக்கட்டுகளைப் புதிதாகக் கட்டியுள்ளனர்.

வாயில்கள்

இக்கோயில் முதற் கோபுரவாயிலுக்குக் கேரளாந்தகன் திருவாசல் என்றும், இரண்டாம் கோபுரவாயிலுக்கு இராசராசன் திருவாசல் என்றும், தெற்குத் திருவாசலுக்கு விக்கிரமசோழன் திருவாசல் என்றும் பெயர்கள் வைக்கப்பெற்றுள்ளன.

தீர்த்தம்

இக்கோயில் வடக்குப் பிராகாரத்தில் திருக்குளம் ஒன்று இருந்தது. அதற்கு மண்டுக தீர்த்தம் என்றுபெயர். அது சகம் 1724-இல் அதாவது கி. பி. 1802-இல் சரபோஜிமன்னரால் ஒரு கிணறு வடிவமாகக் கட்டப்பெற்றது.

திருச்சுற்று மாளிகையைக் கட்டியவர்

இக்கோயிலில் திருச்சுற்று மாளிகையைக் கட்டியவர் சோழமண்டலத்து உய்யக்கொண்டான் வளநாட்டு அமண்குடியான கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீகிருஷ்ணன் இராமனை மும்முடி சோழபிரமராயர் ஆவர்.

அம்மன் கோயிலைப்பற்றிய செய்திகள்

திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோநேரின்மைகொண்டான் இக்கோயிலில் உலகமுழுதுடையநாச்சியாரை எழுந்தருளுவித்து அவர்க்கு அமுதுபடி உள்ளிட்டு வேண்டுவனவற்றிற்கு அருமொழிதேவ வளநாட்டு, மேல்கூறு விடைய புரப்பற்றிலே கொட்டகர்க்குடியிலே பதின்வேலி நிலத்தை இறையிலியாகக் கொடுக்கப்பெற்ற செய்தியை அம்மன் கோயிலில் கல்வெட்டு அறிவிக்கின்றது. இங்குக் குறிக்கப்பெற்ற திரிபுவனச் சக்கரவர்த்தி சோழமன்னனு அல்லது பாண்டிய மன்னனு என்று துணிந்து கூறமுடியவில்லை. ஏனெனில் இரு வம்சத்தார்களும் திரிபுவனச் சக்கரவர்த்தி, கோநேரின்மைகொண்டான் என்ற பட்டங்களைச் சூடிவந்தார்கள். கோநேரின்மைகொண்டான் என்பது தனக்கு ஒப்பார் எவரும் இலர் என்ற பொருள்தரும். எனவே அம்மன் திருப்பெயர் உலகமுழுதுடைய நாச்சியார் என்பதாகும். அம்மன்கோயிலுக்கு முன்பக்கமுள்ள மண்டபங்களுக்கு மல்லப்ப நாயக்கர் மண்டபம், மூர்த்தி அம்மன் மண்டபம் என்னும் பெயர்கள் வைக்கப்பெற்றிருந்தன. இவைகளை எல்லாம் அம்மன்கோயிலின் மேற்குப்புறச் சுவரிலுள்ள கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

திருவிழாக்கள்

இத் திருக்கோயிலில் மாதந்தோறும் சதயத் திருவிழா, கார்த்திகை மாதத்தில் கார்த்திகைநாள் திருவிழா, மாதந்தோறும் சங்கிராந்தி விழா, ஆட்டைத் திருவிழா, அல்லது பெரிய திருஉத்ஸவம் இவைகள் நடைபெற்று வந்தன. இவைகளுள் சதயத் திருவிழா என்பது முதலாம் இராசராச சோழன் பிறந்த சதய நட்சத்திரத்தில் மாதந்தோறும் நடத்தப்பெறும் விழாவாகும். ஆட்டைத் திருவிழா என்பது ஆண்டுதோறும் நடத்தப்பெறும் பெரிய திருவிழா ஆகும். இது வைகாசி மாதத்தில் நடைபெற்று வந்தது. இவ்விழாவில் இராசராச நாடகம் நடத்தப்பெறுவது உண்டு. "உடையார் வைகாசிப் பெரிய திருவிழாவில் ராஜராஜேஸ்வர நாடகமாட நித்தம் நெல்லுத் தூணியாக நூற்றிருபது கலம்"—என்னும் "திருமருவிய செங்கோல் வேந்தன்"—எனத் தொடங்கும் கோப்பரகேசரி பன்மரான உடையார் ராஜேந்திரதேவரின் ஆறும் ஆண்டுக் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. அம்மன்னன் காலத்தில் நாடகம் நடித்துவந்தவன் சாந்திக் கூத்தன் திருமுது குன்றனை விஜய ராஜேந்திர ஆசாரியன் ஆவன். இந்த வைகாசிப் பெருந்திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெற்று வந்தது. "பெரிய திருஉத்ஸவம் நாள் ஒன்பதுக்கும்" "ஆட்டைத் திருவிழா எழுந்தருளு நாள் ஒன்பதும்" என்னும் கல்வெட்டுப் பகுதிகளே சான்றாகும். (மிகப் பழங்காலத்தே விழாக்கள் ஏழு நாட்களில் நடைபெற்று வந்தன. "ஏழுநாட்களும் கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனுரே" என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் வாக்கால் புலனாகும்.) விழாக் காலங்களில் சிவயோகிகளுக்கு அன்னம் அளிக்கப்பெற்று வந்தது.

திருப்பதியம் விண்ணப்பிக்க நிவந்தம்

முதலாம் இராசராசன் தஞ்சை இராச ராசேச்சரத்தில் திருப்பதியம் விண்ணப்பிக்கப் பிடாரர்கள் நாற்பத் தெண்மர்களையும், உடுக்கை வாசிக்க ஒருவரையும், கொட்டி மத்தளம் வாசிக்க ஒருவரையும், ஆக ஐம்ப தின்மர்களை நியமித்து அவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு இராசகேசரியோடொக்கும் ஆடவல்லான் என்னும் மரக்காலால் நாடோறும் முக்குறுணி நெல் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தான். ஒருநாளைக்கு முக்குறுணி நெல் வீதம் ஒரு வருடத்திற்குத் தொண்ணூறு கலங்கள் ஆகின்றன. இது அக்காலத்தில் நல்ல சம்பளமாகவே இருந்ததாகக் கொள்ளவேண்டும்.

திருப்பதியம் விண்ணப்பித்தவர்களின் பெயர்கள்

பாலன் திருவாஞ்சியத்து அடிகளான இராசராசப் பிச்சனுன சதாசிவன், திருவெண்ணுவல் செம்பொற் சோதியான தட்சிணமேரு விடங்கப் பிச்சனுன ஞானசிவன், பட்டாலகன் அம்பலத்தாடியான மனோத்தம சிவன், பட்டாலகன் சீருடைக்கழலான பூர்வ சிவன், பொற்சுவரன் திருநாவுக்கரையனுன பூர்வசிவன், மகாதேவன் திருஞானசம்பந்தனுன ஞானசிவன், கயிலாயன் ஆரூரான் தர்ம சிவன், செட்டி எடுத்தபாதமான கவசசிவன், இராமன் சம்பந்தனுன சத்யசிவன், அம்பலவன் பத்தர்கள்... டனுன வாமசிவன், கம்பன் திருநாவுக்கரையனுன சதாசிவன், நக்கன் சீராளனுன வாமசிவன், அப்பி திருநாவுக்கரையனுன நேத்ரசிவன், சிவக்கொழுந்து சீராளனுன தர்மசிவன், ஐந்நூற்றுவன் வெண்காடனுன சத்யசிவன். அரையன் அணுக்கனுன திருமறைக்கா......தர்மசிவன், அரையன் அம்பலக்கூத்தனுன ஓங்காரசிவன், ஆரூரன் திருநாவுக்கரையனுன ஞானசிவன், கூத்தன் மழலைச்சிலம்பான பூர்வசிவன், ஐந்நூற்றுவன் சியாரூரனுன தத்புருஷசிவன், சம்பந்தன் ஆரூரனுன வாமசிவன், அரையன் பிச்சனுன தர்மசிவன், காசியபன் எடுத்தபாத புச்சனுன ருத்திரசிவன், சுப்பிரமணிய ஆச்சனுன தர்மசிவன், கூத்தன் அமரபுஜங்கனுன சத்யசிவன். வெண்காடனுன அகோரசிவன், மாதேவன் திருநாவுக்கரையனுன விஞ்ஞான சிவன், ஐந்நூற்றுவன் திருவாய்மூரான அகோரசிவன், திருமலைக்கூத்தனுன வாம சிவன், ஐந்நூற்றுவன் எடுத்தபாதமான தர்ம சிவன், அரையன் தில்லைக்கரைசான பூர்வ சிவன், காளி சம்பந்தனுன தர்மசிவன், காபாலிக வாலியான ஞானசிவன், வெண்காடன் நமசிவாயமான ருத்ரசிவன், சிவன் அனந்தனுன யோகசிவன், சிவக்கொழுந்து சம்பந்தனுன அகோரசிவன், இராமன் கணவதியான ஞானசிவன், பிச்சன் வெங்காடனுன அகோரசிவன், மறைக்காடன் நம்பி ஆரூரனுன ஞானசிவன். சோமன் சம்பந்தனுன ஞானசிவன், சத்தி திருநாவுக்கரையனுன ஈசானசிவன், பொற் சுவரன் நம்பியாரூரனுன தர்மசிவன், ஆச்சன் திருநாவுக்கரையனுன நேத்திரசிவன், ஐயாறன் பெண்ணொர்பாகனுன இருதயசிவன், இராஜாதித்தன் அம்பலத்தாடியான சிகாசிவன், செல்வன் கணபதி தெம்பனுன தர்மசிவன், தில்லைக் கூத்தனுன ஞானசிவன்.

உடுக்கை கொட்டிமத்தளம் இவைகளை வாசித்தவர்களின் பெயர்கள்

உடுக்கை வாசித்தவன் துவைத கோம புறத்து தத்யக் கிரமவித்தன்மகன் சூர்ய தேவக்கிரமவித்தன் ஆன ஆலால விடங்க உடுக்கை விச்சாதிரனுன சோமசிவன். (வேதத்தை ஓதும்முறை சம்ஹிதா, பதம், கிரமம், கனம், ஜடா என்று ஐந்துவகைப் படும். இவைகளில் கிரமம் என்ற முறைப்படி வேதத்தை ஓதியவன் கிரமவித்தன் ஆவன்.)

கொட்டிமத்தளம் வாசித்தவன் குணப் புகழ் மருதனுன சிகாசிவன்.

இங்குக் குறிக்கப்பெற்றுள்ள ஐம்பது பெயர்களின் இறுதியில் உள்ள அகோர சிவன், இருதயசிவன், ஈசானசிவன், ஓங்கார சிவன், கவசசிவன், சத்தியசிவன், சிகாசிவன், சோமசிவன், ஞானசிவன், தர்மசிவன், தத்புருஷசிவன், நேத்ரசிவன், பூர்வசிவன், மனோத்தமசிவன், யோகசிவன், ருத்ரசிவன், வாமசிவன், விஞ்ஞானசிவன், என்பவைகள் சிவதீட்சை செய்விக்கப் பெற்றகாலை வைக்கப்பெற்ற பெயர்கள். முதற்பெயர், இரண்டாம் பெயர், நாற்பத்தொன்பதாம் பெயர் இவைகளின் நடுவிலுள்ள இராசராசப் பிச்சன், தட்சிணமேரு விடங்கப்பிச்சன்,

ஆலாலவிடங்க உடுக்கை விச்சாதிரன் இவை கள் பட்டப்பெயர்கள்.

பாலன் திருவாஞ்சியத்தடிகள், திரு வெண்ணுவல் செம்பொற்சோதி, பட்டாலகன் அம்பலத்தாடி, பட்டாலகன் சீருடைக் கழல் முதலானவை இயற்பெயர்கள். இவைகளி ஞல் சிவதீட்சை பெற்றவர்களே திருப்பதியம் விண்ணப்பித்தல், கொட்டிமத்தளம் வாசித் தல், உடுக்கை வாசித்தல் ஆகிய இத்தொண்டு களைச் செய்தற்கு உரியராவர் என்பதும், இத்தொண்டுகளில் சிறந்தவர்களுக்கு அரசன் பட்டங்களைச் சூட்டிச் சிறப்பிப்பது வழக்க மென்பதும் பெறப்படுகின்றன.

இங்கு ஒரு குறிப்பு

பதியம் என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது. பதிகம் என்பதே இலக்கண முடையது. பதியம் என்பது இலக்கணப் போலி. (இயல்பு வழக்கு நன்னூல்). பதியம் என்னும் இச்சொல் முதல்முதலாக பாலாற் றின் உபநதியாகிய நுகாவின் மேற்குக்கரையி லுள்ள திருவல்லம் (தீக்காலி வல்லம்) என் னும் ஊரிலுள்ள பில்வநாதேஸ்வரர் கோயில் மகாமண்டபத்தின் வடபுறச் சுவரில் பொறிக் கப் பெற்றுள்ள "திருப்பள்ளித் தாமம் பறிப் பார்க்கும், திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட பலபணி செய்வார்க்கும் நெல்லு நானூற்றுக் காடியும்"—என்னும் கல்வெட்டுப் பகுதியில் காணப்படுகின்றது. இது விஜயநந்தி விக் கிரமவர்மன் என்னும் பல்லவ மன்னனது ஆட்சியாண்டு பதினேழில் பொறிக்கப் பெற்றதாகும். இம்மன்னனே நந்திக் கலம் பகம் கொண்டவனும், தெள்ளாறெறிந்த நந்திவர்மன் என்று பேசப்படுபவனும் ஆவன். இவன் கி. பி. 830 முதல் 854 வரை ஆண்டவன். இக்கல்வெட்டு கி. பி. 847 இல் அதாவது 9-ஆம் நூற்றுண்டின் முற்பகுதி யில் தோன்றப் பெற்றது. ஆதலின் அந்த ஆண்டில்தான் திருக்கோயில்களில் திருப்பதி யம் பாட நிவந்தம் அளிக்கப்பெற்ற செய்தி கல்வெட்டினுல் முதல்முதல் அறியத்தக்க தொன்றும். அக்காலம் திருப்பதியம் பாடுதல் என்ற வழக்கு இருப்பினும், முதலாம் இராச ராசன் காலத்தில் அவ்வழக்குமாறி அதற்குப் பதிலாகத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய் தல் என்ற வழக்கு கையாளப்பட்டுள்ளது. மேலும் திருப்பதியம் பாடுவார் பிடாரர் என்று கூறப்பெற்றுள்ளனர்.

மேற்குறித்த திருப்பதியம் விண்ணப் பித்தவர்களின் இயற்பெயர்களுள் கூந்தன் மழலைச் சிலம்பு என்பது (19-ஆவது பெயர்) "வாமத்தெழிலாரெடுத்த பாதம்மழலைச் சிலம் பார்க்கத் தீமெய்ச் சடைமேற்றிங்கள் சூடித் தேவனுடுமே" (திருவாலியமுதனுர் திரு விசைப்பா, கோயில்—பண் இந்தளம், பாடல் 5) என்னும் அடிகளையும், நான்காவது பெய ரில் வந்துவள 'சீருடைக்கழல்' என்பது "செம் பொருட்டுணிவே சீருடைக் கழலே" என்னும் திருவாசகச் சொற்றொடரையும் நம் நினை விற்குக்கொண்டு வருவனவாகும்.

தளிச்சேரிப் பெண்டுகளுக்கு (Dancing girls) அளித்த நிவந்தங்கள்

தளிச்சேரிப் பெண்டுகள் என்பார் தேவதாசிகள் அல்லது தேவரடியார் ஆவர். இவர்கள் தளிப்பெண்டுகள் எனவும் வழங்கப் பெறுவர். இவர்கள் வசிக்கும் தெருக்கள் தளிச்சேரிகள் எனப் பெயர்பெறும். ஓர் பெரிய ஊரில் ஒன்றுக்கு மேற்பட்ட தளிச் சேரிகள் இருந்தன. "திருவாரூர்ப் பெரிய தளிச்சேரி நக்கன் சீருடையாளுக்குப் பங்கு ஒன்று" என்னும் கல்வெட்டுத் தொடரே இதற்குச் சான்றுகும். திருக்கோயில்களில் ஆடல் பாடல்களின் பொருட்டு இவர்கள் நியமிக்கப்பெற்று வந்தனர். இவர்களில் தலைசிறந்தவர்களுக்கு அரசன் தலைக்கோல் என்ற பட்டத்தை அளித்துப் பாராட்டுவது உண்டு. இதைத் திருவையாற்று ஓலோகமா தேவீச்சுரத்துக் கல்வெட்டில் காணலாம்.

"பொன்னியல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென
நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலிற் காவல் வேந்தன்
இலைப்பூங் கோதை யியல்பினின் வழாமைத்
தலைக்கோல் எய்தித் தலையரங் கேறி
விதிமுறைக் கொள்கையின் ஆயிரத் தெண்கழஞ்சு
ஒருமுறை யாகப் பெற்றனள் அதுவே"

என்னும் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதைப் பகுதியில் வந்துள்ள தலைக்கோல் எய்தி என்ற தொடர்க்கு அரும்பத உரை யாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் "வரி சைக்குத் தக்கபடி தலைக்கோல் பெயர் பெற்று" என்று பொருள் எழுதியிருப்பதால் இத்தகைய பட்டம் சிலப்பதிகார காலத்தி லேயே வழக்கத்தில் இருந்தமை ஈண்டு அறி யத்தக்க தொன்றும்.

(தொடரும்)

இருவினை ஒப்பு

முன்னுரை

"இருவினை ஒப்பில் இறப்பில் தவத்தான்
மருவுவனும் ஞானத்தை வந்து"

என்பது சிவஞான போதம். புண்ணிய பாவங்கள் இரண்டும் உயிர்களுக்குப் பாசப் பிணிப்பை விளைவிப்பன. ஆதலின் அவை முறையே பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போல்வனவேயாம். அதுபற்றியே திருவள்ளுவர் பெருமானும் "இருள்சேர் இருவினையும் சேரா" என்று அருளிச் செய்தார்.

இருவினைகளாகிய புண்ணிய பாவங்கள் இரண்டும், சரியை கிரியா யோகம் என்னும் சிறந்த தவத்தின் பயனாகத் துலை ஒப்ப நேர் ஆதலே (தராசுத் தட்டுகளைப் போலச் சம நிலையை அடைதலே), இருவினை ஒப்பு எனப்படும். 'ஒட்டு இருவினைச் சமம் கட்டவிழ் பருவம்' என்பது பாம்பன் சுவாமிகள் 'ஞான வாக்கியம்'.

திருவாசகம்

இருவினை ஒப்பு நேர்தல் மலம் பரிபாகம் அடைதற்கும், சத்திநிபாதம் எய்துதற்கும், ஞானம் பெறுதற்கும் உரிய வாயில் ஆகும்.

'பிணக்கி லாத பெருந்து றைப்பெரு
மானுன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்கி லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத்து எம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே''

என்பது திருவாசகம். 'பிறவி பாகிய விதையானது மேலே விளையாதபடி, இருவினையொப்பு என்னும் நிலை எனக்கு வந்த பிறகு, அளவில் அடங்காத உனது திருவடிவத்தைத் திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளி வந்து எனக்குக் காட்டியருளினாய்' என்பது இதன் பொருள்.

பெரிய புராணம்

திருஞான சம்பந்தர் தமது திருக்கைகளால் தீண்டித் திருநீறு பூசியதனால், பாண்டியன் முன்னை வல்வினைகள் நீங்கி, இருவினை ஒப்பு எய்தி, இறைவனை அறியும் தன்மையாகிய ஞானம் அடையப்பெற்றான். இதனை,

"தென்னவன் மாறன் தானும்
சிரபுரத் தலைவர் தீண்டிப்
பொன்நவில் கொன்றை யார்தம்
திருநீறு பூசப் பெற்று
முன்னைவல் வினைகள் நீங்கி
முதல்வனை அறியும் தன்மை
துன்னினான் வினைகள் ஒத்துத்
துலையென நிற்ற லாலே''

எனச் சேக்கிழார் பெருமான் சிறந்தெடுத்து விளக்குதல் காணலாம். எனவே ஞானப் பேற்றிற்கு இருவினை யொப்பு இன்றியமையாதது என்பது தெளியப்படும்.

சுந்தோப சுந்த நியாயம்

1. இருவினை யொப்பு என்பது பற்றிச் சிலர் பின்வருமாறு கூறுவர். நாம் செய்யும் நல்வினை தீவினைகளாகிய இருவினைகளும் பயனாக வருங்கால், நல்வினையுட் பெரிதாகிய பரிமேத வேள்விப் புண்ணியமும், தீவினையுட் பெரிதாகிய பிரமக்கொலைப் பாவமும் ஒருங்கே பக்குவம் எய்திப் பயன்தர முந்து தற்கண் ஒத்து நின்றனவாயின், அவை தம்முள் ஒன்றான் ஒன்று அடிக்கப்பட்டுக் கெட்டொழியும். அங்ஙனம் இருவினைகளும் கெட்டொழிதலே இருவினை யொப்பு என்பர் சிலர்.

இதற்கு அவர்கள் ஓர் உவமை கூறுவது உண்டு. சுந்தன் உபசுந்தன் என்று அண்ணன் தம்பி ஆகிய இரண்டு அசுரர்கள் இருந்தனர். வலிமை மிக்க அவ்விரண்டு அசுரர்களும் மிகவும் ஒற்றுமையாக இருந்து, தேவர்களைப் பெரிதும் துன்புறுத்தி வந்தனர். அவரை வெல்ல வல்லவர்கள் ஒருவரும் இல்லை. அதனால் அவர்களின் கொடுமையினின்றும் தப்பி உய்தற்பொருட்டுத் தேவர்கள் சூழ்ச்சி செய்து, திலோத்தமை என்னும் அழகிற் சிறந்த தேவமாதினை அவர்கள்பால் அனுப்பி வைத்தனர். திலோத்தமையை அடைய விரும்பிய இருவரும் தம் ஒற்றுமையை

இழந்து, தமக்குள்ளேயே ஒருவருக்கு ஒருவர் போரிட்டுக்கொண்டு, ஒருவரை ஒருவர் கொன்று மடிந்தொழிந்தனர்! பின்வரும் பாடல்கள் இவ்வரலாற்றை யுணர்த்துவன ஆகும்.

"தந்தோள்வலி மிக்கவர் தம்ஒரு தாய்வயிற்றின்
தந்தோர்மட மங்கை பொருட்டு மலேக்கலுற்றுர்
சிந்தோடரியுண்கண் திலோத்தமை காதல்செற்ற
சுந்தோபசுந் தப்பெயர்த் தொல்லையிலோ ரும்
[ஒத்தார்"
—கம்பர்.

"முராரியை முராரி நாபி
முளரிவாழ் முனியை முக்கட்
புராரியை நோக்கி முன்னாட்
புரிபெருந் தவத்தின் மிக்கார்
சுராரிகள் தம்மிற் சுந்தோப
சுந்தரென் றிருந்தார் தங்கள்
திராரிஏ வலிஞல் வந்த
திலோத்தமை தன்னைக் கண்டார்.

காண்டலும் அவள்மேல் வைத்த
காதலால் உழந்து நெஞ்சில்
ஈண்டிய துயரத் தோடும்
இருவரும் நயந்த போழ்தப்
பூண்டகு பொலிவி ஞள்தன்
பொருட்டமர் தம்மிற் பூண்டு
மாண்டனர் என்னும் வார்த்தை
மாநிலம் அறியும் அன்றே"
—வில்லிபுத்தூரார்.

எனவே, மாறுபட்ட இரண்டு பொருள்கள் தம்முள் ஒன்றின் ஒன்று முரணி வலியிழந்து கெட்டொழிதலை அறிஞர்கள் "சுந்தோப சுந்த நியாயம்" எனக் குறிப்பிடுவர். அம்முறையில் புண்ணியங்களுட் சிறந்த அசுவமேத யாகப் பயனும், பாவங்களுட் கொடிய பிரமகத்தி தோடமும், ஒன்றுன் ஒன்று அடிக்கப்பட்டுக் கெட்டொழிந்து சரிசமம் ஆகப்போகும் நிலையே, இருவினை யொப்பு என்பது சிலர் கருத்து.

2. நம்மால் இதுகாறும் அனுபவித்துக் கழிக்கப்படாமல், இனிமேல் அனுபவித்துக் கழிக்கத் தக்கனவாக எஞ்சிக்கிடக்கும் சஞ்சித கன்மங்கள் ஆகிய புண்ணிய பாவங்கள், மிகுதி குறைவின்றித் தம்முள் சரிசமமாக ஒத்து நிற்றலே, இருவினை யொப்பு என்பர் மற்றும் சிலர்.

இப் பிறவியில் அனுபவித்துக் கழித்தற்குரிய பிராரத்த வினைத்தொகுதியுள், மிக்க வினை இரண்டும் தம்முள் ஒத்துக் கெட்டன வாயினும், அவை யொழித்து ஒழிந்த புண்ணிய பாவங்கள் தத்தம் பயனைத் தருதற்குத் தடையில்லை! இனிமேல் அனுபவமாக வருதற்குரிய வினைத்தொகுதியுள், நல்வினை தீவினை இரண்டும் தம்முள் முழுதும் ஒக்குமாறு இல்லை! எனவே, இருவினை யொப்புப் பற்றி மேற்குறித்த இருவகைக் கருத்துக்களும் பொருந்துவன அல்ல.

இருவினை யொப்பின் இலக்கணம்

3. எனவே, ஒரு பொருளில் விருப்பும் பிறிதொரு பொருளில் வெறுப்பும் கொள்ளுதல் இன்றிப் புண்ணிய பாவம் இரண்டினும், அவற்றின் பயன்களினும் விருப்பு வெறுப்பு இன்றிப் பொதுமை யுணர்வுடன் இருக்கப்பெறும் நிலையே இருவினை யொப்பு எனக் கொள்ளுதல் பொருந்தும். இதனைச் "செஞ்சாந்து எறியினும் செத்தினும் போழினும் நெஞ்சு ஓர்ந்து ஓடா நிலைமை" எனத் தொல்காப்பியத்திற்கு உரைவரைந்த பேராசிரியர் குறிப்பிடுவர். இதனைச் "சாந்தம்" அல்லது "சமநிலை" என்றும் நூல்கள் கூறும்.

சேக்கிழார்

இருவினை யொப்பு எய்தப் பெற்றவர்கள் இன்பம் கண்டு மகிழார். துன்பங் கண்டு கவலார். புகழ்ச்சிக்கு மகிழ்ச்சியும், இகழ்ச்சிக்குத் தளர்ச்சியும் கொள்ளார். அவர்களுக்குக் கேடும் இல்லை, ஆக்கமும் இல்லை. ஓடும் செம்பொன்னும் அவர்களுக்கு ஒன்றே யாகும். வீடுபேற்றையும் அவர்கள் விரும்ப மாட்டார்கள். இங்ஙனம் எதன் கண்ணும் விருப்பு வெறுப்பு இன்மையாகிய இருவினை யொப்பு நிலை, மிக உயர்ந்த சான்றோர்களுக்கு மட்டுமே வாய்ப்பதாகும். அது பற்றியே,

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினுர்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினிற் கும்பிட லேஅன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினுர்"

என ஆசிரியர் சேக்கிழார் பெருமான், அடியார்களின் இயல்பினைத் திறன்தெரிந்து விளக்கியருளினுர்.

கணியன் பூங்குன்றனுர்

இங்ஙனமே 'எமக்கு எல்லாம் ஊர்; எல்லாரும் சுற்றத்தார்; தீமையும் நன்மையும் பிறரால் உண்டாவதில்லை. வாழ்க்கை இனிதாக உள்ளது என்று மகிழ்ச்சி யுறுதலும்,

அது துன்பமாக இருக்கின்றது என்று வெறுப்புக்கொள்ளுதலும் எம்பால் இல்லை. தெப்பம் நீர் வழியே செல்லுதல் போல, உயிர்களின் வாழ்க்கையும் ஊழின் வழியே நடைபெறுகின்றது. எனவே யாம் பெரியோர்களை வியப்பதும் இல்லை. சிறியோர்களை இகழ்வதும் இல்லை' என்னும் கருத்து அமைய,

"யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவது அன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னாது என்றலும் இலமே.........
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது, திறவோர்
காட்சியில் தெளிந்தனம் ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே"

எனவரும் புறநானூற்றுப் பாடலை (192)ப் பாடிய கணியன் பூங்குன்றனர் என்னும் புலவரின் மனநிலையும், இருவினையொப்பு எய்தப் பெற்றதொன்று எனலாம்.

கம்பர்

இராவணனால் அசோகவனத்தில் சிறையிருத்தப்பெற்ற சீதைப் பிராட்டியார், இராமபிரானின் அரும்பெரும் பண்புகளை யெல்லாம் அங்கு நினைவுகூர்ந்து மனம் வருந்தி மாழ்கிய தன்மைகளை விளக்குங்கால்,

"மெய்த்தி ருப்பதம் மேவுஎன்ற போதினும்
இத்தி ருத்துறந்து ஏகுஎன்ற போதினும்
சித்தி ரத்தின் அலர்ந்தசெந் தாமரை
ஒத்தி ருந்த முகத்தினை உன்னுவாள்"

எனக் கம்பர், முடிசூட்டு விழா நிகழ இருப்பது குறித்து மகிழ்ச்சியும், அது நின்று போய்த் தான் காட்டிற்குச்செல்ல நேர்ந்தமை குறித்துத் தளர்ச்சியும், ஒரு சிறிது அளவும் கொள்ளாத இராமபிரானின் விருப்பு வெறுப்பு அற்ற மிக மேலான மனநிலையினைப் புலப்படுத்தியிருத்தல், இருவினையொப்பு என்பதற்கு ஏற்ற எடுத்துக்காட்டு ஆகும்.

செகப்பிரியர்

ஆங்கிலப் பெருங்கவிஞர் ஆகிய செகப்பிரியர் (Shakespeare) தாமும், தாம் இயற்றிய அமலநாதன் (Hamlet) எனப் பெயரியதொரு நாடகத்தில், பின்வருமாறு கூறியிருத்தல் ஈண்டுச் சிந்தித்து மகிழத்தக்கது. 'ஊழால் விளையும் இன்ப துன்பங்களை எவன் இறையருளின் கொடை என்று சம நோக்கோடு ஏற்றுக்கொள்ளுகின்றானோ, எவனுடைய உணர்ச்சியும் நுண்ணறிவும் முரண்படாமல் நன்கினிது ஒன்றுபட்டு, இணைந்து நின்று, ஊழ் அணங்கின் விரல்களுக்கு விருப்பப்படியெல்லாம் ஒலிப்பதற்கு உரிய ஊதுகுழலாக இருக்கமாட்டானோ, எவன் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாதவனோ, அத்தகைய சிறந்த மனிதனை எனக்குக் காட்டு! அவனை என் இருதயத்தின் ஆழத்தில், உள்ளத்துக்கும் உள்ளுள்ளே பொன்போற் பொதிந்து வைத்துக்கொண்டு போற்றுகின்றேன். அத்தகையோர் இறையருள் பெற்றவர்கள் ஆவர்'.

"A man that Fortune's buffets and rewards
Hast taken with equal thanks; and blest [are those
Whose blood and judgment are so well [commingled
That they are not a pipe for Fortune's [finger
To sound what stop she please. Give me [that man
That is not passion's slave, and I will [wear him
In my heart's core, ay, in my heart of [heart,
As I do thee......"

மாணிக்கவாசகர்

தமிழகத்தின் ஞானியர்களுளெல்லாம் தலைசிறந்த மாட்சிமையுடையவர் மாணிக்கவாசகர்! அவர் எய்தியிருந்த மிக மேலான இருவினையொப்பு நிலையின் இயல்பிற்குப் பின்வரும் அவர்தம் அரிய இனிய அழகிய பாடல்களே சான்று பகர்கின்றன.

1. இறைவனே! நின்பால் வேண்டிக் கொள்ளத்தக்கது இன்னதென்றே யான் அறியேன். எனக்கு வேண்டுவது யாது என்று நினக்கே தெரியும். அன்பர்கள் வேண்டிக் கொள்ளின், எல்லாவற்றையும் தரவல்லவன் நீயே! நீ எதனை விரும்பி எனக்குக் கொடுக்கின்றாயோ, அதனையே யான் விரும்புகின்றேன். எனக்கென்று தனியாக ஒரு விருப்பமும் இல்லை. இருப்பின், அதுவும் உனது விருப்பமேயாகும்.

2. இறைவனே! என் உடல் பொருள் உயிர் எல்லாவற்றையும், என்னை ஆட்கொண்டபோதே, நீ ஏற்றுக்கொண்டு விட்டாய். ஆதலின் இதுபோது எனக்கு நிகழத்தக்க இடையூறு ஒன்றும் இல்லை. நல்லதே செய்க! அல்லது பிழையே செய்க! எல்லாம் நின் திருவுள்ளத்தின் விருப்பம். அதற்கு யானோ தலைமையுடையேன்?

3. இறைவனே! நாயினும் கீழ்ப்பட்ட எளியேனை நீயே விரும்பி ஆட்கொண்டாய்! பிறவியைத் தருதலும், அன்றி அதனை ஒழித்தலும் நின் வயத்திலேயே இருக்கின்றன. ஆதலின், யானோ பிறவியின் நன்மை தீமைகளைப்பற்றி ஆராயும் கடப்பாடு உடையேன்? அதற்குரிய அதிகாரம் என்னிடத்திலா உள்ளது? நெற்றியிற் கண்ணையுடைய பெருமானே! நீ என்னை உடம்பின் உள்ளே புகுந்திருக்கச் செய், அல்லது உன்னுடைய திருவடியின் கீழ் இருக்கச் செய்! எது செயினும், நின் திருவுள்ளக் குறிப்பே நிறைவேறுக. எளியேற்கு விருப்பு வெறுப்பு ஆகிய எச்செயலும் இல்லை.

"வேண்டத் தக்க தறிவோய்நீ !
வேண்ட முழுதும் தருவோய்நீ !
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ !
வேண்டி என்னைப் பணிகொண்டாய் !
வேண்டி நீயாது அருள்செய்தாய் !
யானும் அதுவே வேண்டின் அல்லால்;
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்,
அதுவும் உன்றன் விருப்பன்றே !

அன்றே என்றன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் ! என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ ?
இன்றோர் இடையூ றெனக்குண்டோ ?
எண்டோள் முக்கண் எம்மானே !
நன்றே செய்வாய் ! பிழைசெய்வாய் !
நானோ இதற்கு நாயகமே !

நாயிற் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய் !
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட் டிருக்கும் அதுவன்றி,
ஆயக் கடவேன் நானோதான் ?
என்ன தோஇங்கு அதிகாரம் ?
காயத் திடுவாய், உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே !"

முடிவுரை :

திருவாசகச் செந்தமிழ் மாமறையில், குழைத்த பத்து என்னும் திருப்பதிகத்தில், ஆத்தும நிவேதனம் என்னும் தலைப்பில் வரும் இப்பாடல்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு விலையுயர்ந்த மாணிக்கம் போன்ற வாசகமேயன்றோ? இன்னோரனைய தெய்வத் திருப்பாடல்களை நாம் இடையறாது ஓதி, இருவினையொப்பு முதலிய நலங்களை எய்தி உய்ய முயலுவோமாக!

"இருவினைநேர் ஒப்பில் இன்னருட் சத்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தரும்அரன் ஞானத்தில் தன்செயல் அற்றால்
திரிமலம் தீர்ந்து சிவனவன் ஆமே."

—திருமந்திரம்.

செய்திகள்

எல்லைப்போர் சம்பந்தமாக நாட்டில் நிலவிவரும் தேசீய நெருக்கடி தீரும் வரையில் தேசீயப்பாதுகாப்பு நிதிக்காக 17—11—62 தேதி நிர்வாக அதிகாரி அவர்கள் முன்னிலையில் திருநாராயணபுரம் வேதநாராயணப் பெருமாள் கோயில், தொட்டியம் அனலாடீசுவரர் கோயில் ஊழியர்கள், ஒவ்வொரு மாதமும் ஒருநாள் சம்பளத்தை அளிப்பது என்று தீர்மானம் செய்துள்ளனர்.

திருநாராயணபுரம், வேதநாராயணப்பெருமாள் கோயிலில் இராப்பத்து, பகல்பத்து விழாக்கள் 27—12—62 முதல் 16—12—62 முடிய நடைபெறும்.

திரிசூலநாதர்

"எத்தா னத்தும்
நிலவுபெருங் கோயில்பல கண்டால், தொண்டீர்!
கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற
கயிலாய நாதனையே காண லாமே."

—திருநாவுக்கரசர் தேவாரம்

தருமம் மிகு சென்னைமா நகரைச் சார்ந்து
சூழ்ந்தும் விளங்கும் திருக்கோயில்கள் எ
தனையோ பல உள்ளன. திருவொற்றியூ
திருமயிலாப்பூர் திருவல்லிக்கேணி திருவான்
யூர் முதலிய பழமையும் பெருமையும் பெ
கோயில்களைப் பற்றி எல்லோரும் அறி
ஆனால் பொது மக்களால் பெரிதும் அறி
படாமற் பழமையும் பெருமையும் ம
கோயில்கள் ஒரு சிலவும், சென்னையி
அதன் சுற்றுப் புறங்களிலும் உள்ள
அவற்றுள் திரிசூலநாதர் திருக்கோயிலும்
ஒன்றாகும்.

மீனம்பாக்கத்துக்கும் பல்லாவரத்துக்கும்
நடுவே, பெருஞ்சாலையில் இருந்து பிரிந்து செல்லும் ஒரு பாதை, திரிசூலத்தில் உள்ள திருக்கோயிலின் வாயிலுக்கே நம்மை அழைத்துச் செல்கின்றது. குன்றுகளின் மீதாகச் செல்லும் இந்தப் பாதை உந்தூர்திகள் செல்லுவதற்கும் தகுதி வாய்ந்ததாக இருக்கின்றது.

நான்கு சிறிய மலைகளின் மத்தியில்-மடியில் என்றும் சொல்லலாம்-திரிசூலநாதர் திருக்கோயில் அமைந்து திகழ்கின்றது. நான்கு மறைகளின் உட்பொருளாக மறைந்து நிற்கும் பரமேசுவரன், அதனை நமக்கு உணர்த்தவே இங்கு இவ்வாறு எழுந்தருளி இருக்கின்றார் போலும் என்ற எண்ணம், இக்கோயிலைக் காணும்போது எழுகின்றது. நல்ல இயற்கைக் காட்சி யழகும், இனிய அமைதியும் மிக்க சிறந்த சூழலில் இக்கோயில் அமைந்து விளங்குகின்றது. பரந்த வானத்தையும், சுற்றிச் சூழ்ந்துள்ள சிறு குன்றுத் தொடர்களையும் காணும்போது, நம் மனத்தில் சாந்தியும் இன்பமும் தேங்கி நிற்கின்றன. ஒரு புனிதமான நல்லுணர்ச்சி நம் உள்ளத்தை ஆட் கொள்ளுகின்றது.

கோயிலின் அமைப்பே அது மிகவும் பழமை வாய்ந்தது என்பதனைப் புலப்படுத்து

தி
ஆட்சிய
யுணரலாம். ப
திர வர்மன் அமை
தலும் இவ்வுண்மை

திரிசூலம் கிராமம் ஒ
புகழ் பெற்றிருந்திருக்க வே
பது பாலை நில வழியை, அ
காடும் நெருங்கி அமைந்துள்ள
யைக் குறிக்கும் சொல்லாகும். நா
களின் நடுவே நல்ல இயற்கைச் சூழலில்
திருத்தல் பற்றி, இக்கிராமத்திற்குத் திரு
சுரம் (திரு+சுரம்) என்று பெயர் வழங்குவதாயிற்று. திருச்சுரம் என்பதே திரிசூலம் என்று மருவி வழங்கி வருகின்றது. அதன் காரணமாக அங்குள்ள நாதர் திரிசூல நாதர் எனப்படுகின்றார். பிரமபுரீஸ்வரர் என்றும் இங்குள்ள சுவாமிக்குப் பெயர் வழங்கப் படுகிறது. அம்பிகைக்குத் திரிபுர சுந்தரி என்பது பெயர்.

திரிசூல நாதர் கோயிலின் அமைப்பே, அதன் பழமைக்கும் பெருமைக்கும் சான்று பகர்கின்றது. இக்கோயிலின் கொடுங்கை

)
கரு
வட்டமாக
ன் சுற்றுச்சுவர்
கள் பொறித்திருப்ப
உணர்த்தும். இக்கோ
ணடில் கட்டப்பட்டிருத்
று அறிஞர்கள் கூறுகின்
வர், சோழர் காலத்துக் கட்டிட
முறைகள் இதன்கண் காணப்படு
.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினரின் முயற்சிகளால் பன்னிரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயிலிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. முதற் குலோத்துங்க சோழன் (கி. பி. 1070—1120) காலம் முதல், மாற வர்மன் குலசேகர பாண்டியன் (14ஆம் நூற்ருண்டு) காலம் வரையில் உள்ள கல்வெட்டுக்களாக அவைகள் காணப்படுகின்றன. முதற் குலோத்துங்கன் முப்பது வேலிப் (120 ஏக்கர்) பரப்புள்ள ஒரு பெரிய பூந்தோட்டத்தையும், பதினெரு வேலி விளை நிலங்களையும் வரியில்லாமல் இறையிலியாக வழங்கிய செய்தியைக் கல்வெட்டின் மூலம் அறிகின்ரும். முதற் குலோத்துங்கனின் பெயரால் திரிசூலம் கிராமத்திற்கு, "திருநீற்றுச் சோழன் நல்லூர்" எனவும் பெயர் அமைக்கப்பட்டிருந்த செய்தியினைக் கல்வெட்டு உணர்த்துகின்றது. மூன்ரும் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178—1218) காலத்துக் கல்வெட்டு ஒன்றும் இக் கோயிலில் காணப்படுகின்றது.

இத்துணைப் பழமையும் பெருமையும் வாய்ந்த கோயிலானது எவருள்ளத்தையும் வரத் தக்க சிறந்த பல சிற்பங்களையும் பெற் ள்ளது. இங்குள்ள அற்புதமான வடிவங் ர் எழில் குன்ருத மோகன சக்தி வாய்ந் வையாகும். நாகத்தைப் பூணூலாக ணிந்த நாக யக்ஞோபவீத கணபதி, இடக் ல வலக்கால் மீது மடித்துப் போடாமல் திட்டு அமர்ந்துள்ள தக்ஷிணுமூர்த்தி முத சிலைகள் மிகவும் சிறப்புடன் பொலி றன. அங்ஙனமே பிரம்மா, விஷ்ணு, க்கை, மூலஸ்தானத்திலுள்ள அம்பிகை ய சிலைகளின் அழகும் கவர்ச்சியும் எவ ளத்தையும் கொள்ளை கொள்ளும்.

தட்சிணுமூர்த்தி

இங்குள்ள சின்னஞ் சிறிய சிற்பங்களும் கூட நுட்பமான வேலைப்பாடு கொண்டவை. நுணுக்கமான உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை. உதாரணமாக, கருவறையில் சுற்றுச் சுவரின் நடுவிலுள்ள லிங்கோற்பவ மூர்த்தியின் வடிவம் இயற்கையாக வடிக்கப்பட்டுள்ளது. விஷ்ணு, துர்க்கை சிலையின் மேற்புறத்திலுள்ள சின்னஞ் சிறு காளிய நர்த்தன சிற்பத்தில் ஐந்து தலை நாகம் கிருஷ்ணனின் பக்கமாக மிக வேகத்துடன் திரும்பிச் சீறும் காட்சி பெரிதும் அருமையாக அமைந்துள்ளது. தக்ஷிணாமூர்த்தியின் திருவடியின் கீழுள்ள முனிவர்களின் மோன இன்பம் நமக்கும் இன்பம் ஊட்டுகின்றது.

இந்தக் கோயிலின் மற்றொரு பெரும் சிறப்பு தூண்களிலுள்ள சிற்பங்களாகும். அவற்றில் பெரும்பாலானவை திருமாலின் திருவிளையாடல்களைக் குறிக்கின்றன. கோயிலுக்குள் நுழைந்த உடனேயே நமக்கு இடப்புறமாக ஒரு பெருமாள் சன்னிதி யிருப்பது குறிப்பிடத்தக்கது. சமய சமரசத்திற்கு இக்கோயில் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது எனலாம்.

சமீப காலம் வரையில் இக்கோயில் பொது மக்களால் கவனிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. சுவாமி சிவானந்தர் அவர்களின் ஆசிபெற்றுத் "தெய்வீக வாழ்க்கைச் சங்கம்" இக்கோயிலின் அருமை பெருமைகளை அனைவரும் அறியச் செய்யப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளது. இச் சங்கத்தின் ஆதரவிலும், பொது மக்களின் பொருள் உதவியிலும், சமீபத்தில் நவராத்திரியில் திரிபுர சுந்தரி அம்பிகைக்கு லக்ஷார்ச்சனை வைபவம் சிறப்புற நடத்தப்பட்டது. காலை மாலைகளில் பக்தர்கள் சென்று தரிசிக்கத் தகுந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன. கோயிலில் மின் விளக்குகளும் அண்மையில் அமைக்கப் பெற்றுள்ளன. ஓர் ஆசிரியரை நியமித்துச் சிறு குழந்தைகளுக்குத் தேவாரம் திருப்புகழ் முதலிய தெய்வப் பாடல்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றது. நவராத்திரி, கந்தர்சஷ்டி, ஆருத்ரா, மகாசிவராத்திரி முதலியன, பொது மக்களின் உதவியால் 1957 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப் பெற்றுவருகின்றன. கவி யோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் தலைமையில் கோயிலைப் புதுப்பிக்கும் பொருட்டுத் திருப்பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. கோயிலைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்யும் நன் முயற்சியைக் காமகோடி, சிருங்ககிரி ஆகிய இரு பீடத்துச் சங்கராச்சாரிய சுவாமிகளும் மனமுவந்து பாராட்டி நல்லாசி கூறியுள்ளார்கள்.

இந்தக் கைங்கரியத்தில் ஆஸ்திகப் பெருமக்கள் யாவரும் பங்கெடுத்துக் கொண்டு, தமிழ் நாட்டின் பழம் சரிதம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்த அருட் செல்வ நிலையத்தை வளர்த்துப் பயன் பெற வேண்டுவது, மிகவும் இன்றியமையாத தாகும்.

தெய்வீகவாழ்க்கைச்சங்கத்தின் கிளைத்தலைவரும் குவாரி கண்ட்ராக்டருமான திரு ஓய். சுப்புசாமி ஐயர் அவர்களும், திருப்பணிக்குழுவின் செயலாளரான ஸ்ரீ சிவபாத இருதயா அவர்களும், இக்கோயிலின் வளர்ச்சி குறித்து ஆற்றிவரும் அரும்பெரும் தொண்டுகள் மிகவும் பாராட்டற் பாலன.



பிரமதேவன்

—:0:—

படைப்பின் வியப்பு

1. முன்னர்ப் புளிப்புடைய மாங்காய் பின்னர் இனிப்புளதாகின்றது.

2. முன்னர் மதுரச் சுவையுடைய நுங்கு பின்னர் அச்சுவை இலதாகின்றது.

3. முத்துச் சோளம் எனும் ஒருவகைத் தானியம் பூவின்கண் தோன்றாது பயிரின் அடியில் தோன்றவுளது.

4. சுரை பூவின் நடுவே காயை நல்காது அதன் அடியில் நல்குவதாய் உளது.

5. வேர்க்கடலை வெளியின் மிளிர் தனது பூவில் தோன்றாது, மண்ணில் வளரும் கிழங்கு போலத் தோன்றிப் பருப்பை உட்புலத்தே கொண்டுள்ளது

6. அத்தி பூத்துக் காயாமல் மரத்திலேயே காய்க்கின்றது.

7. முந்திரி மரம் தன் பழத்தினுள்ளே கொட்டையை வைத்துக் கொள்ளாது பழத்தின் புறத்தே கொட்டையை வைத்துக் கொள்கின்றது.

8. பனை விதை தன் முகத்தின் வழி முளையாது அடிப்புடை வழி முளைக்க வுள்ளது.

9. தெங்கம் பழம் தன் கொட்டைக்கு மேலுறு பாகத்திலே ஓர் இன்சுவைச் சாறும் வைத்துக் கொள்ளாமல், அக் கொட்டைக்கு உள்ளே தாகத்தைத் தீர்க்கத் தக்க இனிய இளநீரை வைத்துக் கொள்வதாயிற்று.

10. பச்சையோந்தி இருந்த இடத்தில் அசையாது இருந்துகொண்டே தன் விழியைச் சுழலம் இடும்படி செய்து நாற்புறமும் பார்க்க உளது.

11. கூகை பகலிற் பார்வை இழந்து இரவிற் பார்வை பெறுவதாய் உளது.

12. வௌவால் சிறகுகளாற் பறவைபோலவும், பற்களால் விலங்குபோலவும் காணப்படுதலோடு, வாயாலே தின்று வாயாலே கழித்தலும், மரக்கிளை முதலியவற்றிலே தலைகிழாகத் தொங்கிக் கிடத்தலும் நடத்தலும் உடைய பிராணியாயிற்று.

"வேறுவேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
நூறுநூறு ஆயிரம் இயல்பினது ஆகி"

என மணிவாசகர் கூறியதுபோல, எத்திற எத்திற மாறுபாடும் எத்திற எத்திற இறும்பூதுமாக உள்ள இவைகளும் இவை போன்ற வேறு பலவும், எல்லாம் வல்லவனாகிய இறைவனின் சங்கல்ப சிருஷ்டியினால் ஆகின்றமையின், எதனை எப்படி ஆக்கினும் ஆக்குவான். அவனால் ஆகாதது ஒன்றும் இல்லை.

—"குவியறிவுடையார்க்குச் செவியறிவுறூஉ",

பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்.

ஆழ்வார் திருநாட்கள்

(※)

கார்த்திகை	...	நவம்பர்		
23	...	8	...	பட்டர்.
24	...	9	...	ஈயுண்ணி மாதவப் பெருமாள், அருளாளப் பெருமாள்.
25	...	10	...	திருமங்கையாழ்வார், நம்பிள்ளை.
26	...	11	...	திருப்பாணாழ்வார், கடாம்பி நாயனார், வேதாந்த தேசிகர்.
மார்கழி	...	ஜனவரி		
10	...	25	...	தொண்டரடிப்பொடி, அழகிய மணவாளர், பெரியநம்பிகள், நல்லூர் ஆச்சான் பிள்ளை.

மலைநாட்டுத் திருப்பதி யநுபவம்

[மகாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

(முன் தொடர்ச்சி)

மலைநாட்டுத் திருப்பதிகளுள் தலைமை பெற்ற திருவனந்தபுரத்தை நம்மாழ்வாரொருவரே ஒரு பதிகத்தினால் பாடினரென்று தெரிவித்து, கெடுமிடராயவெல்லா மென்கிற பதிகத்தின் முதற் பாட்டின் முற்பாதியை யநுபவித்தோம் முன்னிதழில். மேற்கொண்டு அநுபவிப்போ மிப்போது.

விடமுடையரவில் பள்ளிவிரும்பினான்
சுரும்பலற்றும்
தடமுடைவயல் அனந்தபுரநகர்
புகுது மின்றே. (1)

அனந்த பத்மநாபப் பெருமாள் பாம்பணை மேல் பள்ளிகொள்பவர். பாம்புக்கு விடமுடைமை இயற்கையன்றோ; "விடமுடையரவு" என்று சொல்ல வேணுமோ? என்று சங்கையுண்டாகும். கேண்மின். எம்பெருமானுக்குப் படுக்கையா யமைந்த ஆதிசேடன் எம்பெருமான் பக்கலிலுள்ள பரிவின் மிகுதியினால் 'இப்பெருமானுக்கு எந்த சமயத்தில் யாராலே என்ன தீங்கு விளைக்கப்படுமோ!' என்னு மச்சத்தினால் விஷத்தீயை உமிழ்ந்து கொண்டே யிருப்பனும். திருமழிசையாழ்வார் தமது நான்முகன் திருவந்தாதியில் "ஆங்கு ஆரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்கா ரரவணையான்" என்னும் பாசுரத்தில் இந் நிகழ்ச்சியைப் பேசியுள்ளார். நித்ய ஸூரிகள் ஸாமகானம் பண்ணுகிற கோஷம் ஆதிசேஷனுக்குச் செவிப்பட்டதாம். 'இது அன்பர்களின் வேதபாராயண கோஷம்' என்று அறுதியிட மாட்டாமல் கலங்கி 'அரக்கரு மசுரரும் தீங்கு விளைக்க இங்கும் புகுந்தார்களோ!; அன்னவர்கள் செய்யும் ஆரவாரமோ இது!' என்று கலங்கி அவர்கள் அணுக வொண்ணாதபடி விஷத்தீயை உமிழ்வதாகக் கூறினவாறு. சிறந்த ஞானிகளுக்குக் கலக்க முண்டாகக் கூடுமோ? என்று கேட்க வேண்டா. அஜ்ஞானமடியான கலக்கம் உண்டாக மாட்டாதே யொழிய, பிரேம மடியான கலக்கம் தவிர்க்க வொண்ணாததே யென்க. திருவெண் பரிசாரத் திருப்பதியின் அநுபவத்தில் இதுபற்றி விரிவாக எழுதியுள்ளோமாதலால் இங்கு விரிவு விடுக்கப்பட்டது.

பள்ளி விரும்பினான் = 'பள்ளி கொண்டான்' என்னாதே பள்ளி விரும்பி னென்றதில் விசேஷமுண்டு. அரவரசனுடைய மென்மை குளிர்த்தி நாற்றம் முதலிய நற்குணங்களைக்

நாயன்மார் திருநாட்கள்

(✻)

கார்த்திகை		டிசம்பர்		
25	...	10	...	கணம்புல்லர்
மார்கழி				
4	...	19	...	இயற்பகையார்
7	...	22	...	மானக்கஞ்சாறர்
12	...	27	...	
		ஜனவரி		
19	...	3	...	வாயிலார்

கண்டு கணப்பொழுதும் விடமாட்டாமே விரும்பி யிருக்கும்படி கூறியவாறு. ராமக்ருஷ்ணாதி விபவாவதாரங்களில் பட்ட பல்வகைப் பரிச்ரமங்கள் தீர அர்ச்சாவதாரங்களில் சயனிக்கிறபடி யாதலால் எப்போதும் பள்ளி கொள்வதிலேயே விருப்பமா யிருக்கும்படி. 'விரும்பினான்' என்பதில் ஆறனுருபு தொக்கி யிருக்கின்றது ; விரும்பின பெருமானுடையதான அனந்தபுர நகர் என்று பொருள்படும். ஆறும் வேற்றுமையின் பொருளான ஸம்பந்தம் இங்கு ஸ்வஸ்வாமி பாவமென்று கொள்ளத் தக்கது. அனந்த பத்மநாபப் பெருமானை ஸ்வாமியாகவுடைய அனந்தபுர மென்க.

ஊருக்கு வயலுடைமையும், வயலுக்குத் தடமுடைமையும், தடத்திற்குச் சுரும்பலறப்பெறுகையும் விசேஷணமாக வுரைக்கப்பட்டுள்ளன. அனந்தபத்மநாபப் பெருமாள் நித்ய நைமித்திக திருவாராதனங்களில் அமுது செய்கைக்கு அமுது படியளிப்பது வயலாதலால் அதன் சிறப்புக்கூற வேண்டியதேயன்றோ. தடமாவது நீர்நிலை. (தடாகம்). அஃதில்லாத வயல் செழிப்புறாதாதலால் அது சொல்ல வேண்டிற்றாயிற்று. தடங்களில் செந்தாமரை மலர்களும் குவளையொண் மலர்களும் மதுவெள்ள மொழுக நிற்குமாதலால் அவற்றில் படிந்த சுரும்புகள் [வண்டுகள்] அரற்றப் பெறுகை தடாகங்களுக்கு இயல்பு. வண்டுகள் தேனைத் தவிர மற்றொன்று கொள்ளாதே ஸாரக்ராஹிகளா யிருப்பது போலவும், ஸாரமுள்ள விடங்களி லெல்லாம் ஸஞ்சரிப்பதையே தொழிலாக வுடையது போலவும், நம்போல்வார் புகவொண்ணாத தேவாலயங்களினுள்ளும் தடையறப் புகுந்து எம்பெருமானையும் தழுவி முழுசி யநுபவிப்பது போலவும் ஸாரப் பொருள்களைக் கிரஹித்து, ஸாரப் பொருள்களுள்ள விடந் தேடியோடி, ஒரு தடங்கலு மின்றிக்கே எம்பெருமானையும் யதேஷ்டமாக அநுபவிக்க வல்ல சீரிய மாஞானிகளைச் சுரும்பென்றதாகக் கொள்க. (க)

இன்று போய்ப் புகுதிராகில் எழுமையு
 மேதஞ் சாரா
குன்று நேர் மாடமாடே குருந்துசேர்
 செருந்தி புன்னை
மன்றலர் பொழில் அனந்தபுரநகர்
 மாயன் நாமம்
ஒன்று மோராயிரமாம் உள்ளுவார்க்கு
 உம்ப ரூரே. (2)

மலை போன்ற மாடங்களினருகே குருந்த மரங்களோடு சேர்ந்த சுரபுன்னை மரங்களும் புன்னை மரங்களும் மன்றிலே அலரும்படியான சோலைகளையுடைய திருவனந்தபுரத்தை இன்றே சென்றடைவீர்களாயின் ஏழேழ் பிறப்பும் எவ்வகையான தோஷமும் தட்டாது ; அத் திருப்பதி யெம்பெருமானுடைய திருநாமம் ஏதேனு மொன்றாகிலும் ஒன்றே ஆயிரமாகிக் காரியஞ் செய்யும் பெருமையுடையது ; இதனை அநுஸந்திக்கு மவர்கட்குத் திருவனந்தபுரந்தானே பரமபதமாயிருக்கும்—என்பது பதப் பொருள். இனி விசேடப் பொருள் கேளீர்.

கீழ்ப்பாட்டில் "அனந்தபுர நகர் புகுதும் இன்றே" என்றது போல இப்பாட்டிலும் "இன்று போய்ப் புகுதிராகில்" என்கிறார் ; இன்றே சென்று புகவேணு மென்கிற நிர்ப்பந்த மெதற்காக ? 'திருவனந்தபுரம் தொழுமின்' என்று சொல்லி வைத்தால் அவரவர்கள் தந்தமக்கு ஸௌகரியம் வாய்க்கும்போது சென்றாலென்ன ? என்று கேட்கக்கூடும் : கேண்மின் ; இவ்வாழ்வார் திருவாய்மொழி தொடங்கும்போதே "மின்னின் னிலையில மன்னுயிராக்கைகள், என்னுமிடத்து இறையுன்னுமினீரே" என்கிற பாசுரத்தினால் உடலின் நிலை நில்லாமையைக் கூறியுள்ளார். ஆகவே சரீரம் அஸ்திரம் என்று தெரிந்து கொண்டவர்கள் தாமதம் செய்யத் தகாது, கேட்டபோதே சென்று தொழவேண்டு மென்னுங் கருத்தினால் இன்றே புகவேணு மென்கிறார்.

இப்பாட்டில் திருவனந்தபுரம் புகுவார்க்கு மூவகைப் பேறுகள் கூறுகின்றார் ; (1) எழுமையும் ஏதம் சாரா ; (2) நாமமொன்றும் ஓராயிரமாம். (3) உள்ளுவார்க்கு உம்பரூரே. இம்மூன்று பேறுகளையும் விவரிப்போம். "எழுமையும் ஏதம் சாரா" என்பதனால் ஏழ் பிறப்பிலும் எவ்வகைக் குற்றமும் சாராதென்று சொல்லப்படுகிறது. பகவத் கீதையில் "புநர் ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுந !" என்று கீதாசார்யன் பலன் கூறிய கணக்கிலே 'மறுபிறப்பு உண்டாகமாட்டாது' என்று பிறப்பின்மை கூறவேண்டி யிருக்க, அது கூறாதே 'ஏழ் பிறப்பும் ஏதம் சாரா' என்றது ஏன் ? எனில் ; உலகில் எல்லாருமே மறு பிறப்பு வேண்டாமென்று கோருபவர்களல்லர் ; திருப்பாவையில் ஆண்டாள் "எற்

றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னே டுற்றோமே யாவோம் உனக்கே நாமாட் செய் வோம்'' என்று கூறியிருப்பதை அறியாதா ரில்லை. எம்பெருமானோடு கூடியே யிருக்க வும் எம்பெருமானுக்குத் தொண்டு பூண் டமுத முண்ணவும் பெற்றால் எத்தனை பிறப் புக்கள் பிறந்தால்தானென்ன? பிறக்கும் பிறவிகளில் ஏதம் சாராதிருக்கப் பெறுவதே வேண்டுவது என்னுங் கருத்தினால் "எழுமை யும் ஏதம் சாரா" என்றருளிச் செய்தது மிகப் பொருந்தும். ஏதம் என்கிற சொல் பால்பகா அஃறிணைச் சொல்லாதலால் பலவகைப்பட்ட ஏதங்களையுஞ் சொல்லும். இவ் வாழ்வார் தாமே "கொன்றுயிருண்ணும் விசாதி பகை பசி தீயனவெல்லாம், நின்றிவ்வுலகில் கடி வான் நேமிப்பிரான் தமர் போந்தார்'' என் கிற பாசுரத்திற் கூறிய ஏதங்களில் எதுவும் சாராதென்க.

இரண்டா மடியிலும் மூன்று மடியிலும் திருவனந்தபுரத்தின் சோலையழகு சொல்லப் படுகிறது. திவ்ய தேசங்களுக்கு நீர்வளம் நிலவளம் பொழில்வளம் கல்வி கேள்வியாளர் வளம் முதலியன சொல்லுவது இன்றியமை யாதது. திருமாலையில் தொண்டரடிப்பொடி யாழ்வார் "வண்டினமுரலுஞ் சோலை மயி லினமாலுஞ் சோலை, கொண்டல் மீதணவுஞ் சோலை குயிலினங் கூவுஞ் சோலை, அண்டர் கோன் அமருஞ்சோலை யணி திருவரங்கம்'' என்று பாசுரத்தின் பெரும் பகுதியைச் சோலை மயமாகவே பாடினபடி காணீர்.

அனந்தபுரம் என்னுமளவே போதுமா யிருக்க, அதன்மேலும் நகர் என்றது கூறியது கூறலாகாது. அனந்தபுரம் என்பது அனந்த பத்மநாபனுடைய ஸன்னிதானத்திற்கு வாச கம். நகர் என்றது க்ஷேத்திரம் முழுமைக் கும் வாசகம் என்று கொள்ளக் கடவது. மாயன்—இச்சொல்லுக்குப் பல பொருள்க ளுண்டு. மா என்பதை இலக்குமியின் பெய ராகக் கொண்டால் லக்ஷ்மீபதி யென்று பொருள்படும். மாயமென்று ஆச்சரியத்திற் குப் பெயராதலால் அற்புதமான குண சேஷ் டிதங்களை யுடையவனென்றும் பொருள் படும். மாயமென்று சங்கற்பத்திற்குப் பெய ராதல் சங்கற்ப மாத்திரத்தினால் பிரபஞ்சங் களின் ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை யெல் லாம் நிகழ்த்துமவன் என்றும் பொருள்படும். இங்ஙனே மற்றும் பலவகைப் பொருள்களுங் காண்க.

"மாயன் நாமமொன்றும் ஓராயிரமாம்" = "தேவோ நாமஸஹஸ்ரவாந்'' என்றும் "ஆயி ரம் பேருடைய பிரான்'' என்றும் சொல்லு கிறபடியே ஆயிரந் திருநாமங்களை யுடைய வன் எம்பெருமான்; அனந்த பத்மநாப னுடைய ஆயிரந் திருநாமங்களில் ஒரு திரு நாமத்தைச் சொன்னாலும் ஆயிரந் திருநாமங் களையும் சொன்னபேறு கிடைக்குமென்ற வாறு. "ஓராயிரமாய் உலகேழளிக்கும் பேராயிரங் கொண்டதோர் பீடுடையன்'' என்றார் இவ்வாழ்வார்தாமே. ஒரு திருநாமம் சொன்ன போதே ஆயிரந் திருநாமஞ் சொன்ன பேறு கிடைக்குமானால் ஆயிரந் திருநாமஞ் சொல்லிச் சிரமப்படுவது ஏன்? என்று கேட்க வேண்டா; எம்பெருமா னுடைய திருநாமங்களைச் சொல்லுவது பல னுக்காகவன்றே; நாப் படைத்தது ஸபல மாவதற்கன்றோ? நாவுக்கு வேறு என்ன காரியம்? "ஸததம் கீர்த்தயந்தோ மாம்'' என்று கீதாசாரியன் கூறியபடி திருநாமங் களைக் கீர்த்தனம் செய்வது தவிர வேறு என்ன பணியுள்ளது நாவுக்கு?

உள்ளுவார்க்கு உம்பரூரே = அனந்தபுர நகர் மாயனது திருநாமத்தைச் சிந்தனை செய்யு மவர்களுக்கு உம்பரூர்—நித்திய ஸூரிகளின் நாடாகிய ஸ்ரீவைகுண்டம் ஸித்திக்கும் என் பது ஒரு பொருள். அன்னவர்கள் எங்கு இருக்கிறார்களோ அவ்விடந்தான் உம்பரூர் பரமபதம் என்பது மற்றொரு பொருள். (உ)

ஊரும் புட்கொடியும்மஃதே உலகெல்லா
  முண்டுமிழ்ந்தான்
சேருந் தண்ணனந்தபுரம் சிக்கெனப்
  புகுதி ராகில்
தீரும் நோய்வினைகளெல்லாம் திண்ணம்
  நாமறியச் சொன்னோம்
பேருமோ ராயிரத்துள் ஒன்றுநீர்
  பேசு மினே. (3)

பெரிய திருவடியென்னுங் கருடனை ஊர்தி யாகக் கொள்பவனாய், உலகங்களை யெல்லாம் ஒருகால் உண்பதும் மற்றொருகால் உமிழ் வதும் செய்தவனான எம்பெருமான் நித்திய வாஸஞ் செய்யுமிடமான குளிர்ந்த திரு வனந்தபுரத்தைத் திடமான அத்யவஸாயத் துடன் சென்று சேர்வீர்களாயின் நோயும் வினைகளுமானவை யெல்லாம் தீரும். இவ் விஷயத்தை உங்களுக்கு நாம் திண்ணமாகத் தெரிவித்தோம். அப்பெருமானுடைய ஆயி ரந் திருநாமங்களுள் ஏதேனுமொரு திரு

நாமத்தை நீங்கள் சொல்லுங்கள் என்பது பதப் பொருள். இனி விசேடப் பொருள் கேளீர்.

விரோதிகள் தொலைந்தாலன்றி எம்பெருமானை யணுக முடியாததலால் விரோதிகள் தொலைவதற்கு என்னவுபாயமென்று கேள்வி பிறக்கும். இப்பதிகத்தின் முதற்பாசுரத்தில் "கெடுமிடராய வெல்லாம் கேசவா வென்ன" என்று கேசவ நாமத்தைச் சொன்னால் விரோதிகள் தொலையுமென்று சொல்லியுள்ளார்; அந்த நாமம் இந்த நாமமென்று ஒரு நிர்ப்பந்தமில்லை; ஆயிரந் திருநாமங்களுள் எந்த நாமத்தைச் சொன்னாலும் விரோதி தொலைவது திண்ணமென்கிறது இப்பாட்டு.

ஒரு நபரிடத்திலே ஒரு கைங்கரியத்தைத் தான் கொள்ளுவதென்கிற நியதியில்லை எம்பெருமானுக்கு. ஆதிசேஷனென்னுந் திருவனந்தாழ்வான் "சென்றாற் குடையாம் இருந்தால் சிங்காசனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள், என்றும் புணையா மணிவிளக்காம், பூம்பட்டாம் புல்குமணையாம், திருமாற்கு அரவு" என்கிற பொய்கையாழ்வார் பாசுரத்தின்படி பலபல வடிமைகள் செய்யும் படியைத் தெரிந்து கொள்கிறோம். ஆளவந்தார் தமது ஸ்தோத்ர ரத்னத்தில் "தாஸஸ்ஸகா வாஹநம் ஆஸநம் த்வஜோ யஸ் தே விதாநம் வ்யஜனம் த்ரயீமய:" என்னும் சுலோகத்தினால் கருடாழ்வாரும் எம்பெருமானுக்குப் பலவகை யடிமைகள் செய்யும் படியைக் கூறியருளினார். அதற்கு மூலமான இப் பாட்டில் "ஊரும் புள் கொடியு மஃதே" என்பதனால் கருடனுடைய இருவகையான அடிமைகளைச் சொன்னது மற்றும் பலவகையடிமைகளுக்கு முபலக்ஷணமாம். கூரத்தாழ்வான் ஸ்ரீவைகுண்ட ஸ்தவத்தில் "ய: கச்சிதேவ" என்று தொடங்கும் சுலோகத்தில் "ஹா! வைநதேய ஸமமபி உரரீகரோஷி" என்றருளிச் செய்கிறார். இன்று வந்தடைந்த ஒரு ஸம்ஸாரி சேதநனை இன்னுனியனையானென்று பாராமல் கருடாழ்வானோடொப்பவும் அங்கீகரிப்பதாக இந்த சுலோகத்திற் சொல்லப்படுகிறது. கருடனோடொப்ப அங்கீகரிக்கையாவது கருடனிடத்துக் கொள்ளும் கைங்கரியங்களை யெல்லாம் அவனிடத்துக் கொள்ளுகையேயாம். கருடன் எம்பெருமானுக்கு ஊர்தியாயிருப்பதும் கொடியாயிருப்பதும் மட்டுமல்ல; தாஸனுயும் தோழனுயும் ஆஸனமாயும் விதானமாயும் விசிறியாயுமிருப்பன் என்று இப்பாசுரத்தை ஆளவந்தார் விவரித்தருளினபடி.

உலகெல்லாம் உண்டுமிழ்ந்தான் = எம்பெருமான் உலகுக்குச் செய்யும் மஹோபகாரங்களில் தலையானது இது. ஆளவந்தார் தமது தோத்திரத்தில் "நிகீர்ய புநருத்கிரதி த்வதந்ய: க:?" என்று பல கேள்விகளினிடையே இக் கேள்வியையும் கேட்டிருக்கின்றார். மனிதர் தேவர் தானவர் என்னும் வாசியின்றிக்கே பிரபஞ்சமெல்லாம் பிரளய வெள்ளத்தில் அழிவதாயிருக்க, ஒன்றுக்கும் அழிவு நேராதபடி அனைத்தையும் தன் திருவயிற்றினுள்ளே வைத்துக் காத்தருளிப் பிறகு வெளிநாடுகாண உமிழ்வது பரமன் பணி. இதனால் சமயாநு குணமான உதவிகளைச் செய்தருள்பவனென்பது போதரும்.

அன்னவன் நித்தியவாசம் செய்யுமிடமான திருவனந்தபுரத்தைப் புகுவீர்களாகில், புக்க வளவிலேயே நீங்கள் அநுபவிக்கும் பிணிகளும் அவற்றுக்கு ஹேதுவான தீவினைகளும் எல்லாம் தீரும்; இது அநுபவ ஸித்தமாகையாலே ஸத்யமாய்ச் சொல்லுகிறபடி. (௩)

பேசுமின் கூசமின்றிப் பெரியநீர்
வேலை சூழ்ந்து
வாசமே கமழுஞ்சோலை வயலணி
யனந்த புரம்
நேசஞ் செய்துறைகின்றானை நெறிமை
யால் மலர்கள் தூவிப்
பூசனை செய்கின்றார்கள் புண்ணியஞ்
செய்த வாறே. (4)

கடலாலே சூழப்பட்டு நறுமணம் மிக்க சோலைகளையும் வயல்களையும் அலங்காரமாகக் கொண்ட திருவனந்தபுரத்திலே அன்பு பூண்டு நித்திய வாஸம் செய்யும் பெருமானை முறை தவறாது பூக்களைப் பணிமாறி ஆராதிக்குமவர்கள் புண்ணியம் செய்த விதம் என்னே! என்று அவர்களது பாக்ய விசேஷத்தை நீங்கள் கூசாது கூறுங்களென்று உலகத்தவர்களை நோக்கிக் கூறினபடி.

திருவனந்தபுரஞ் சென்று அனந்த பத்மநாபப் பெருமானுக்குச் செண்பக மல்லிகையோடு செங்கழுநீ ரிருவாட்சி யெண்பகப் பூவுங் கொணர்ந்து ஸமர்ப்பித்துத் திருவாராதனம் செய்யப் பெறுமவர்கள் என்ன பாக்யசாலிகளோ வென்று கொண்டாடுகிறார். "பேசுமின் கூசமின்றி" என்றதற்கு இரண்டிடத்தில் அந்வயங் கொள்ளலாம்; அனந்த

புரம் நேசஞ் செய்துறைகின்றானைப் பேசுமின் என்பது ஓர் அந்வயம். உறைகின்றானைப் பூசனை செய்கின்றார்கள் புண்ணியஞ் செய்தவாறு பேசுமின் என்பது மற்றோர் அந்வயம். திருவனந்தபுரம் கடற்கரையிலுள்ளதாதலால் 'பெரிய நீர்வேலை சூழ்ந்து' எனப்பட்டது.

நேசஞ் செய்து உறைகின்றானை = எம்பெருமானுடைய ரூபம் ஐந்து வகைப்படும்; பரம் வியூஹம் விபவம் அந்தர்யாமி அர்ச்சை என்பனவாம் அவை. பரமபதத்தி லெழுந்தருளியிருக்குமிருப்பு பரம் எனப்படும். திருப்பாற்கடலில் சயனித் திருக்குமிருப்பு வியூஹமெனப்படும். ராமக்ருஷ்ணாதி ரூபேண அவதரித்தது விபவ மெனப்படும். கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறைவது அந்தர்யாமி யெனப்படும். இவை நாளும் இப்போது நம்போலியர்க்கு எட்டாதவை. "சீரார் திருவேங்கடமே திருக்கோவலூரே, மதிட் கச்சியூரகமே பேரகமே, பேரா மருதிறுத்தான் வெள்ளறையே வெஃகாவே" எனப்படுகின்ற திருப்பதிகளில் உறைவதாகிற அர்ச்சாவதாரமே ஸம்ஸாரிகளான நமக்குப் புகலிடமாதலால் இங்கு எம்பெருமான் வாஸஞ் செய்வது திருவுள்ளமுகந்து—என்னுமிடம் தோற்ற நேசஞ் செய்துறைகின்றானென்றது. அடியார்களைக் காப்பதற்குப் பாங்கான விடமென்று கொண்டு விரும்பி வர்த்திக்கிறபடி. இப்பெருமானுக்குப் பூஜனை செய்யப் பெறுவது பல் பிறவித் தவப்பயனென்பதில் ஐயமுண்டோ?

(தொடரும்)

நெல்லை மாவட்டக் கோயில் வரலாறு

—: ❋ :—

நமது அறநிலையத்தின் சார்பில், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் மூலம், திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் எழுதப் பெற்ற இந் நூலின் வெளியீட்டு விழா, 19—11—62 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தில், சட்டசபைத் தலைவர் திரு. S. செல்லப்பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் அவர்கள், நாளுக்கு நாள் பெருகி வரும் திருக்கோயில் யாத்திரிகர் வழிபாட்டாளர் கலையார்வலர்களுக்குப் பெரிதும் பயன்படும் பொருட்டு இந் நூலை அறநிலையத் துறை வெளியிடுகின்றது என்றும், இதனை அடுத்துச் சென்னை தஞ்சை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கோயில்களின் வரலாற்று நூல்கள் வெளிவரும் என்றும் குறிப்பிட்டு, வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

அறநிலைய அமைச்சர் திரு. M. பக்தவத்சலம் அவர்கள், கோயில்களின் சிற்பம் ஓவியம் முதலிய கலைகளை மேலை நாட்டினரும் வியந்து பாராட்டுதலையும், 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டே தமிழகத்தில் "பஞ்சாயத்து ராஜ்யம்" நன்கினிது நடைபெற்று வந்தமை உத்தரமேரூர்க் கோயிலிற் காணப்படும் முதற் பராந்தகன் காலத்துக் கல்வெட்டுக்களால் (கி. பி. 919, 921) அறியப்படுதலையும், "சமவாய்ப்புச் சமுதாய அமைப்பு" (Socialistic Pattern of Society) முறைக்குத் தமிழகக் கோயில்களே வழிவகுத்து நடத்திக் காட்டியுள்ள சிறப்புகளையும் குறிப்பிட்டு, நூலை வெளியிட்டார்கள்.

அடுத்து, நூலையும், நூலாசிரியரையும் பாராட்டி, உயர் நீதி மன்ற நீதிபதி மதிப்பிற்குரிய M. அனந்தநாராயணன் I.C.S., மதிப்பிற்குரிய S. வேங்கடேசுவரன் I.C.S., ஆகியோர் சிறப்புரை வழங்கினர். அறநிலையத் துணை ஆணையர் திரு. D. இராமலிங்க ரெட்டியார் அவர்கள் அனைவருக்கும் நன்றியுரை நவின்றார்கள். தேசிய கீதத்துடன் விழா இனிது நிறைவெய்தியது.

சங்ககாலச் சான்றோரின்

ச ம ர ச ஞா ன ம்

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம். அக் காலத்தில் வாழ்ந்திருந்த சான்றோர்களாகிய புலவர் பெருமக்கள் "பொய்யடிமையில்லாத புலவர்" எனப் போற்றப் படுவதற்குரிய அருமை பெருமைகள் வாய்ந்தவர். "சங்கமலி செந்தமிழ்" "சங்கத் தமிழ் மாலை" என்றெல்லாம் ஆழ்வார்களும் நாயன்மார்களுமே புகழ்ந்து பாராட்டிப் போற்றுதலின், சங்க காலச் சான்றோர்களின் அரும்பெருஞ் சிறப்புக்களை யாவரும் இனிது உணரலாம்.

சங்க காலக் கவிஞர்கள் வெறும் உலகியலை மட்டுமே பாடியவர்கள் அல்லர். அவர்கள் பாடிய அரும்பெருங் கவிதைகளில், அருளியற் பண்பும் பிரிவற விரவிப் பெரிதும் ஆங்காங்கே சிறந்து ஒளிவிட்டுக் கொண்டு திகழ்கின்றது.

மதுரைக் கண்ணத்தனர் என்னும் புலவர் பெருந்தகை, மாலைக் காலத்தின் இயற்கை மாட்சியினைப் பாடத் தலைப்படுகின்றார். மாலைக் காலத்தின் அந்திப் பொழுதில், செம்பொன்னை உருக்கி வார்த்தாற் போலச் சிவந்து விளங்கும் செக்கர் வானம், ஒருபுறம் அவர் தம் மனத்தினை மிகவும் மகிழ்விக்கின்றது. பிறிதொரு புறத்தே நீலநிறம் வாய்ந்த அழகிய கடற்காட்சி, அவர்தம் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றது.

அப் புலவர் பெருமான் தம்மையும் மறந்து, அவ்வியற்கைக் காட்சியில் ஈடுபட்டு இன்புறுகின்றார். அம்மட்டோ! முழுமுதற் பரம்பொருளின் இயல்பினையே, அவ்வியற்கைக் காட்சியின் மூலம் அவர் நினைவு கூர்கின்றார்.

செக்கர் வானம் 'செம்மேனி எம்மான்' ஆகிய சிவபிரானையும், நீலநிறக் கடல் 'நீல மேனி நெடியோன்' ஆகிய திருமாலையும் அவர்க்கு நினைவூட்டுகின்றன. செக்கர் வானமும் நீலக்கடலும் இணைந்து விளங்கும் இனிய மாலைக் காலத்தை, அவர் 'சங்கர நாராயண மூர்த்தம்' போல உளது என இனிது புகழ்ந்து பாடுகின்றார்.

"வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருவுடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ
வந்த மாலை......"

—அகநானூறு, 360.

என அப்புலவர்பிரான் பாடியிருப்பது, ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்றெட்டே, தமிழகத்தில் நிலவிவரும் சைவ வைணவ சமரச ஞானத்துக்குச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றதன்றோ? ஆழ்வார்களும் இச் 'சங்கர நாராயண மூர்த்தம்' பற்றிப் பாடியிருத்தல் காணலாம்.

"பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவர் அங்கத்தால் திரிவரேனும், ஒருவன்
ஒருவன்அங்கத்(து) என்றும் உளன்."

"அரன்நா ரணன் நாமம்; ஆன்விடை புள்ஊர்தி;
உரைநூல் மறை; உறையும் கோயில்-வரைநீர்;
கருமம் அழிப்பு அளிப்பு; கையதுவேல் நேமி;
உருவம்எரி கார்மேனி ஒன்று."

—பொய்கையாழ்வார்.

"தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் [சக்கரமும்
சூழரவும் பொன்நாணும் தோன்றுமால்-சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து"

—பேயாழ்வார்

"மின்போலும் செஞ்சடையான் மாலோடும் [ஈண்டிசைந்தால்
என்போலும் காண்பார்கட்கு என்றிரேல்—தன் [போலும்
பொற்குன்றும் நீல மணிக்குன்றும் தாமுடனே
நிற்கின்ற போலும் நெடிது."

—: ✺ :—

திருஞானசம்பந்தர் அருளிய திருமுறை

[திருமிகு. சிவஞானத் தம்பிரான் சுவாமிகள், திருவெண்காடு]

சிவபெருமானை வழிபடுதல் ஒன்றே உயிர்கள் விளக்கம் பெறுதற்கு ஏது. வேறு யாதும் விளக்கம் தாராது. இங்கு விளக்கம் என்றதன் உண்மை விளக்கம் உணர்ச்சிக்கு குவரல் வேண்டும். விளங்குதல்-விளக்கம். துளங்குதல்-துளக்கம், களங்குதல்-களக்கம், இளகுதல்-இளக்கம் முதலிய பல தமிழ்ச் சொல்லமைதியை நோக்கின் அதன் பிறப்பியல் தெரியும். விளங்குந் தொழில் ஈங்கு உயிர்களது. விளக்குந் தொழில் திருவருளது. தன் விளக்கத்தைத்தானே காணும் பெருமை இவ்விளக்கத்திற்கு மட்டும் உரியது. சிவவியாபகம் பிறரால் காணும் அளவுடைய தன்று. சிவவியாபகம் எங்கும் உள்ளது. குறைவில்லாதது. அக் குறைவில்லா நிறைவை அடைவதே உயிர்கட்கு வீடு பேறு. அவ் வீடுபேறு ஒன்றே உயிர்கள் கட்டு நீங்கிப் பெறும் விளக்கம். அவ் விளக்கத்தைத் திருஞான சம்பந்தர் 'கெழு முதல்' என்னும் சொல்லாற் குறித்தருளினுர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் நச்சினுர்க்கினியருரையில், "குருவும் கெழுவும் நிறன் ஆகும்மே" (303. சூ) என்றதன் விளக்கம் இங்குநோக்கத் தக்கது.

"கெழு (என்பது) கேழ் என நீடலும் ஈறு கெடுதலும் "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவண் இயல் பின்றே" என்பதனுற் கொள்க. இக் 'கெழு' பொருத்தத்தை உணர்த்துதலும் 'கெழுமுதல்' என்னும் வழக்கிற்கு முதனிலையாய் நிற்றலும் 'கூறிய கிளவி' என்பதனுற் கொள்க. மேல் வருஞ்சூத்திரங்கட்கும் இவ்வாறே பொருள் கூறுக' என்று அவ்வுரையாசிரியர் எழுதினுர்.

அவர் உரைத்தவாறு 'கெழு முதல்' என்பது பொருந்தும் என்ற பொருள்தருதல் ஈண்டும் பொருத்தமே. உயிர்கட்குப் பொருந்தும் இடம் இரண்டு. ஒன்று பதி; மற்றொன்று பாசம். பாசப் பொருத்தம் அநாதி சம்பந்தம் ஆக உயிர்கட்கு உளது. அச்சம் பந்தம் நீங்கப் பாற்றிப் பதிசம்பந்தம் ஆகிய ஏனையதே உயிர்கட்கு வேண்டுவதாகும். ஆதலின், அநாதி சம்பந்தமான பாசப்பொருத்தத்தை அநாதி முதல்வன் திருவருளால் அகற்றிக்கொண்டு, அப்பதிப் பொருத்தத்தை அடைவது, அறியாமையின் நீங்கி அறிவினை நிறைவு செய்வித்துக்கொள்ளும் ஆன்மாக்களுக்குத் தலையாய கடனும் என்பது பெறப்பட்டது.

நிறத்தைக் குறித்து 'கெழு' என்னும் உரிச் சொல், அந் நிறத்தின் இயல்பாகிய விளக்கத்தைக் குறித்து வரும் வழக்கம் முற்றும் பொருந்துவதே.

'கூடுபூம் பொழில் சூழ்தரு கோட்டூர்நற்
கொழுந்தேஎன் றெழுவார்கள்
கேட தொன்றிலர் ஆகிநல் லுலகினிற்
கெழுவுவர் புகழாலே' (2. 109. 6)

என்று ஆளுடைய பிள்ளையார் அருளிய திருப்பாட்டில் (1) 'விளக்கம்' என்ற பொருளும், (2) அதற்கு ஏது புகழ் என்னும் உண்மையும், (3) அவ்விளக்கத்திற்கு 'நல்லுலகு' ஆம் இடமும், (4) அந்நல்லுலகில் உறும் புகழ் விளக்கம் ஆகிய பேறு, கேடு நீக்கத்தால் முழுமை அடைகின்றது என்னும் நிகழ்வும் உணர்த்தியவாறு நோக்கி ஆழ்ந்து அறியற்பாலனவாம். "துஞ்சல் இல்லா நல்ல வுலகம் பெறுவாரே" சிவ வழிபாட்டால் அன்றி இந் நல்லுலகப் புகழ் விளக்கமும் கேடு நீக்கமும் எய்வது இல்லை என்னும் உண்மையைச் சைவராவார் அனைவரும் அறிந்து கொண்டு, தவருது, சிவ வழிபாடு புரியக் கடவர். 'நல்லுலகு' என்றதற்குச் சிவலோகம் என்று கொண்டு, அதற்கேற்பப் பொருளுரைத்தலே சாலவும் நன்றுகும். ஆயினும் 'இம்மை மறுமை வீடு' என்னும் மூன்றற்கும் வழிபாட்டுப்பயன் பொதுவாதலின், யாதும் கொள்ளலாம். தவறன்று. பாடியருளிய ஆசிரியரும், "ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை ஆதரித் திசைகற்று வல்லார் சொலக் கேட்டுகந்தவர் தம்மை வாதியாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்தடையாவே." என்று பாடியதுணர்க.

இத்துணையும் விரித் தெழுதியதனின் கருத்து யாது? உயிர்க்கு முழு விளக்கம் சிவ

வழிபாட்டால் தான் உண்டாகும், வேறு எப்பொருளை வழிபட்டாலும் அம் முழுவிளக்கம் உண்டாகாது என்பதே. இதைச் சைவ சித்தாந்தம் இனிது உணர்த்துகின்றது. சிவ வழிபாடு ஒன்றே முழுவிளக்கம் ஆகிய சிவ வியாபகத்தை அடைவித்து, உயிர்களுக்குக் குறைவிலா நிறைவாகிய பேரின்ப வாழ்வை நல்குகின்றது. இவ்வுண்மையைத் திருஞான சம்பந்தர் அருளிய திருமுறையில் எத்தனையோ இடங்களிற் காணலாம். ஆயினும்,

"கோடுதேன் சொரி குன்றிடைப்
பூகமும் கூந்தலின் குலைவாரி
ஓடும் நீர்வரு காவிரி வடகரை
மாந்துறை யுறைநம்பன்
வாடினூர்தலை யிற்பலி கொள்பவன்
வானவர் மகிழ்ந்தேத்துங்
கேடிலா மணியைத் தொழல்
அல்லது கெழுமுதல் அறியோமே.

என்னும் திருப்பாட்டால் அறியும் வகை, நம் பாசம் முற்றும் மறியும் வகையாய் உள்ளத்தில் ஊன்றும் நிலையில் உள்ளது. ஈரெதிர் மறைகளால் இவ்வுண்மையை நிலைநாட்டும் ஆசிரியரது திருவுள்ளத்தை அறிந்து, இதையே அவர் நமக்கு இட்ட அருளாணையாகக் கொண்டு, நாம் சிவ வழிபாட்டை இடைவிடாமற் போற்றிவரக் கடவோம். ஈங்குக் 'கெழு முதல்' என்றதைத் தொடர்மொழியாகக் கொண்டு (கெழு+முதல்) விளங்குகின்ற முதற்பொருள் என்றுரைத்தார் ஒருவர். அவர்க்குத் தோன்றிய அப்பொருள் ஒரு நல்ல ஏதுவைக் கொண்டுளது. "தொண்டர் தொழுகையே வாழ்க்கையின் மூலதனம்" 'கேடிலா மணியைத் தொழல் அல்லது கெழுமுதல் அறியோமே' என்று (அரும்பொருளகராதி: பக்கம் 75-6) மயிலைகிழார் இளமுருகனுர் எழுதியது கண்டு இன்புறுக.

ஈண்டுக் 'கெழு முதல்' என்பது சிவத்தினது வியாபகத்தளவு ஆன்மா எய்திப் பேரின்பந் துய்க்கும் பெறலரும் பேற்றைக் குறித்து நிற்கின்றது. 'அல்லது அறியோம்' என்று இரண்டெதிர் மறையால் வற்புறுத்தப்படும் ஒருடன் பாட்டுப் பொருள் அப்பொருளே ஆகும். அதுவே சித்தம் சிவமாக்கும் உயரிய உண்மை நிலை. அந்நிலையைத் தான் ஒன்றியிருத்தல் என்பர் நம் அருட்சான்றோர். சிவத்தினது வியாபகத்தளவு கட்டு நீங்கிய ஆன்மா சிவஞானத்தால் அநுபவ முடையவர்க்கே நன்கு விளங்குவதாகும்.

ஏகனுகியிறைபணி நிற்றல் என்பது ஒன்றியிருத்தலே ஆகும்' சுத்த நிலையில் ஒன்றியிருத்தல் இது. சகலநிலையில் ஒன்றியிருத்தல் இதனின் வேறு. அதைக் கொள்ளல் இங்குப் பொருந்தாது. 'ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லை' என்ற திருவடிக்கு, நினைத்தற் கருவியாகிய மனத்தொடர்பு உண்மையால், அச்சகல நிலையில் ஒன்றியிருத்தலைக் கொள்ளல் வேண்டும். அத்துவிதத்தை உணர்த்தும் பொருட்டாகிய ஒன்றியிருத்தல் அதனின் வேறு. அதைக் 'கெழு முதல்' என்ருர் அல்லர். மனத்தொடர்பால் நினைத்தல் வியாபகம் ஆகாது, அவ்வியாபகமே. கருவி கரணங்களைக் கடந்து, அவனருளே கண்ணுகக் கொண்டு, அவ்வருளாய் நின்று அவ்வருளைத் திருமேனியாகக் கொண்டு பரிபூரண நிறைவாகி நிலவும் பரசிவத்தோடு ஒன்றிநிற்றலே பூரண வியாபகம். அவ்வுயரிய நிலையில் ஒன்றி நிற்றல் என்பது வேறற நிற்றல்; இரண்டாய் நில்லாமை.

"பரங்குன்றைச்
சித்தமது ஒன்றிச் செய்கழல்
உன்னிச் சிவனென்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை
நம்மேல் நில்லாவே."

என்றருளிய திருஞான சம்பந்தர் திருவுள்ளத்தில், 'சித்தம்' என்றதன் பொருள் அந்தக்கரணத்துள் ஒன்ருன சித்தமே அன்றி ஆன்மாவும் ஆகும். அகவழி பாட்டிலும் புறவழி பாட்டிலும் சிவபரஞ்சுடரை வேறு எதிர் முகம் ஆகவைத்துப் போற்றுதல் உண்டன்றே? அப்பொழுது அந்தக் கரணங்களின் ஒருமை வேண்டும். அதைக் குறித்தது சித்தமது என்றல். அப்பொழுது அக்கரணத்தின் வியாபாரத்திற்குச் செயப்படு பொருள் வேண்டும். அதுவே செய்கழல். அக் கழலைச் சித்தம் உன்னும் உன்னலே வியாபாரம். அக்கழலையுடையது சிவம். அச்சிவமாகப் பரங்குன்றை நித்தலும் ஏத்திவரின் வினைகழலும். இங்கே, சித்தம் (=ஆன்மா) ஒன்றிலாவது சிவவியாபகத்தளவு நிற்றல் ஆகும். செய்கழலுன்னலாவது அவ்வாறு நிற்பதற்கு இன்றியமையாமல் தலையானது எனப்பெறும் அருள் நிலை.

(தொடரும்)

அறநிலைய அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள்

15—11—62	திருத்தணிகைச், சுப்பிரமணிய சுவாமி கோயில்.	டாக்டர் இராதகிருஷ்ணன் நூல் நிலையம்-கலை நிலையங்களுக்குக் கால்கோள் விழா.
19—11—62	இராஜாஜி மண்டபம்	"நெல்லைமாவட்டக் கோயில்கள் வரலாறு" நூல் வெளியீட்டு விழா.
21—11—62	தியாகராய நகர் சிவ-விஷ்ணு கோயில்.	அர்ச்சகர்கள் கூட்டம். அர்ச்சகர்கள் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு உதவுதல்.

—: ☀ :—

ஆணையாளர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

4—11—62	சென்னமல்லீச்சுரப்பெருமான் கோயில், சென்னை.	வட எல்லைப் போர் வெற்றியின் பொருட்டுச் சிறப்பு அர்ச்சனை வழிபாடு.
7—11—62	பிரசன்ன வேங்கடாசலபதி கோயில், தல்லாகுளம்.	கோயில் திருப்பணித் துவக்க விழா
10—11—62	கிருபாபுரீசுவரர் கோயில், திருவெண்ணெய்நல்லூர்.	திருப்பனந்தாள் காசிமடம் தவத்திரு, அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அறக் கட்டளையைத் துவக்கி வைத்தல் (தேவார ஓதுவார் நியமனம்-ஒலிபெருக்கிவழங்குதல்)
15—11—62	சுப்பிரமணியசுவாமி கோயில், திருத்தணிகை.	இந்திய ஜனாதிபதி டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள் அளித்த கலாச்சார நிலையத்திற்கு அறநிலைய அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய கால்கோள் விழா.
19—11—62	சென்னை, இராஜாஜி மண்டபம்	"நெல்லைமாவட்டக் கோயில் வரலாறு" புத்தக வெளியீட்டு விழா.
23—11—62	மாசிலாமணிசுவரர் கோயில், வட திருமுல்லை வாயில்	தருமையாதீனச் சார்பில் நிகழ்ந்த பாரத தேசப்பாதுகாப்புப் பிரார்த்தனைக் கூட்டம்.
25—11—62	கபாலீசுவரர் கோயில், திருமயிலை, சென்னை.	திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பெற்ற "திருவெம்பாவை திருப் பாவை" நூல் வெளியீட்டு விழா.

இந்திய தேசியப் பாதுகாப்பு நிதிக்காகக் கோயில்கள் அளித்துள்ள

நன்கொடைகள் விவரம்

—: ☀ :—

1.	அக்னீசுவரசுவாமி கோயில், திருப்புகலூர், நன்னிலம் வட்டம்.	15,000/-
2.	தருமபுரம் ஆதீனம் (தொகுதி கோயில்கள்).	10,001/-
3.	சுப்பிரமணியசுவாமி கோயில், குமாரவயலூர், திருச்சி வட்டம்.	1,001/-
4.	கள்ளழகர் கோயில், அழகர் கோயில், மதுரை மாவட்டம்.	1,000/-
5.	மகுடேசுவரசுவாமி, ஸ்ரீவீரநாராயணப் பெருமாள் கோயில்கள், கொடுமுடி.	1,000/-
6.	மதுரகாளியம்மன் கோயில், தொட்டியம், முசிறி வட்டம்.	1,000/-
7.	தாயுமானசுவாமி கோயில், அரசலூர், முசிறி வட்டம்.	1,000/-
8.	வாலீசுவரர் கோயில், அய்யலூர், முசிறி வட்டம்.	1,000/-
9.	பிடாரி செல்லாண்டி அம்மன் கோயில், சீலபிள்ளையார் புத்தூர், முசிறி வட்டம்	1,000/-
10.	சிற்றம்பலநாதசுவாமி கோயில், முருகூர், முசிறி வட்டம்.	1,000/-
11.	நீலமேகப்பெருமாள் கோயில், குளித்தலை, குளித்தலை வட்டம்.	1,000/-
12.	திருக்கனமலேசுவரர் கோயில், கிருஷ்ணராஜபுரம், குளித்தலை வட்டம்.	1,000/-
13.	மதுரைவரதீசுவரர் கோயில், திருவாசி, லால்குடி வட்டம்.	1,000/-
14.	இராமலிங்கேசுவரர் கோயில், பச்சம்பேட்டை, லால்குடி வட்டம்.	1,000/-
15.	அனந்தகிருஷ்ணப்பெருமாள் கோயில், ஆங்கரை, லால்குடி வட்டம்.	1,000/-
16.	நாகநாதசுவாமி கோயில், திருச்சி.	1000/-
17.	சுப்பிரமணியசுவாமி கோயில், புலிவலம், திருச்சி வட்டம்.	1,000/-
18.	பிபிலிகேசுவரர் கோயில், திருவேரம்பூர், திருச்சி வட்டம்.	1,000/-
19.	பஞ்சவர்ணேசுவரர் கோயில், உறையூர், திருச்சி வட்டம்.	501/-
20.	பஞ்சநதீசுவரர் கோயில், அல்லூர், திருச்சி வட்டம்.	501/-
21.	கன்னிகாபரமேசுவரி கோயில், சென்னை.	501/-
22.	இரவீசுவரர் கோயில், ஆமூர், முசிறி வட்டம்.	500/-
23.	மல்லிகார்ச்சுனேசுவரர் கோயில், நாகைய நல்லூர், முசிறி வட்டம்.	500/-
24.	கைலாசநாதர் கோயில், வெள்ளனூர், லால்குடி வட்டம்.	500/-
25.	சொக்கலிங்கேசுவரர் கோயில், மீன்சுருட்டி, உடையார்பாளையம் வட்டம்.	500/-
26.	மதனகோபாலசுவாமி கோயில், பெரம்பலூர், பெரம்பலூர் வட்டம்.	500/-
27.	அபராதரட்சகர் கோயில், ஆடுதுறை, பெரம்பலூர் வட்டம்.	500/-
28.	ஜோதீசுவரர் கோயில், திருவாலந்துறை, பெரம்பலூர் வட்டம்.	500/-
29.	பார்த்தசாரதி கோயில், சென்னை.	251/-

கீழ்க்கண்ட கோயில்களில் தங்கப் பத்திரங்கள் வாங்கப்பெற்றுள்ளன.

1.	மீனாட்சி சுந்தரேசுவர் கோயில், மதுரை.	4,273 கிராம்கள்
2.	சென்னமல்லீசுவரர்—சென்னகேசவபெருமாள் கோயில்கள், சென்னை.	350 கிராம்கள்
3.	கோடம்பாக்கம் வடபழனி ஆண்டவர் கோயில், சென்னை	201 கிராம்கள்

மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில், 50,000/- ரூபாவுக்குத் தேசியப் பாதுகாப்புப் பத்திரம் (1972) வாங்கப்பட்டுள்ளது.

(தொடரும்)



15—11—62 வியாழக்கிழமையன்று
திருத்தணிகையில் நிகழ்ந்த
கலாச்சார நிலையக் கால்கோள் விழாவில்
அறநிலைய அமைச்சர், ஆணையர், துணை ஆணையர் ஆகியோர் கலந்துகொள்ளுதல்





தஞ்சைப் பெரிய கோயில் விமானம்

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-34. Printed at Paari Achakam, Madras-1.